ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 7 திங்கட்கிழமை (21.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 115


02 காலிறுதிக்குள் நுழைந்தது இந்தியா


03 ஆறுதலுக்கு வெற்றி கிடைக்கவில்லை


16 அவசரகால சட்டத்தை நீடிக்க புலிப் பூச்சாண்டி


24 அனு உலை குறித்து மறு ஆய்வு


31 கச்சதீவு அந்தோனியாரின் உற்சவத்தில்

# ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் இலங்கைக்கு பாதகமான நிலை

## சர்வதேச விசாரணை நடத்துமாறு வலியுறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனால் நிறுவப்பட்ட இலங்கை விவகாரம் தொடர்பான நிபுணர்கள் குழுவின் இறுதி அறிக்கை இலங்கைக்குப் பாதகமாக அமையும் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அந்த அறிக்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்கள் போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இலங்கையின் முக்கிய இராஜதந்திரி ஒருவரை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற அரசுக்கும் புலிகளுக்கு மிடையிலான இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்று, இறுதி செய்யப்பட்டுக்கொண்டிருக்

(29ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைகளை கண்காணிக்க பஸில் தலைமையில் மக்கள் சபைகள்

கொழும்பு, மார்ச் 21

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் முன்வைக்கும் வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கும் அவற்றை கண்காணிப்பதற்கும் நாடு முழுவதும் 'மக்கள் சபைகள்' நிறுவப்படவுள்ளன. இதற்கான சட்டமூலம் அடுத்த மாதம் அரசால் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட உள்ளது.

இச்சபைகள் பஸில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும்.

இதுதொடர்பாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியவை வருமாறு:-

மக்களுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் நாடு முழுவதும் மக்கள் சபைகளை நிறுவுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் தங்களது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் சபைகளின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். மக்கள் சபையின் அனுமதி இல்லாமல் எந்த வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியாது.

அதேபோல் மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்கும் வேலைத்

(29ஆம் பக்கம் பார்க்க)

### பிரெட் லீயின் வர்ணப் படம்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் ஆஸி அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரெட் லீயின் வர்ணப்படம் இன்று உதயனுடன் இலவசமாகக் கிடைக்கும். சேவாக்கின் வர்ணப்படம் புதன்கிழமை உதயனுடன்.

## நீண்ட பல வருடங்களுக்குப் பின்னர்

# கச்சதீவு அந்தோனியார் உற்சவம் இம்முறை இரு நாடுகளின் பக்தர்களுடன் நடந்தேறியது



கச்சதீவிலிருந்து அலுவலகச் செய்தியாளர்

கச்சதீவு, மார்ச் 21

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்று ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுப்புடன் இனிதே நிறைவுபெற்றது .

இலங்கை இந்திய மக்களின் உறவுப்பாலமாக அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத்துக்கு இம்முறை இந்திய பக்தர்கள் அதிகளவு கலந்துகொண்டனர்.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த உற்சவத்தில் தமிழகம் தங்கச்சிமடம் பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் அடிகளார் மற்றும் இலங்கை இந்திய குருமார்களும் கலந்து கொன்டு திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.திருப்பலி பூசைகளில் கலந்து கொள்வதற்காக இம்முறை இந்தியாவில் இருந்து 85 ட்றோலர் படகுகள் 35 நாட்டுப்படகுகள் என்பவற்றில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்ட

(29ஆம் பக்கம் பார்க்க)

### இன்று முதல் விலை 20/-

அன்புசால் வாசகர்களே!

பத்திரிகை அச்சிடும் காகிதத்தின் விலை உலகச் சந்தையில் மிக உயர்ந்து விட்டது. அத்தோடு அச்சிடுதலுக்கான ஏனைய உபபொருள்களின் விலைகளும் அதிகரித்து விட்டன. அதனால் உங்கள் உள்ளம் கவர்ந்த உதயனின் விலையை இன்று முதல் 20 ருபாவாக உயர்த்த வேண்டிய தவிர்க்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பொருளடக்கத்திலும் உருவகத்திலும் உங்கள் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் விதத்தில், மேலும் பொலிவுடன் உதயன் வெளிவருவான் என்பதனை உறுதி செய்கிறோம்.

கடந்த 25 ஆண்டுகளாக நீங்கள் இடையறாது வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் பேருதவிக்கும் எமது நன்றிகள் உங்களுக்கு.

-நிர்வாகத்தினர்.

# லிபியா மீது அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் நேற்று இரண்டாவது நாளாகத் தாக்குதல்

திரிபோலி மார்ச் 21

லிபிய தலைவர் கேர்ணல் மும்மர் கடாபியின் படைகளுக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இரண்டாவது நாளாக பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் தாக்குதலை மேற்கொண்டன.

மிஸ்ரட்டாவில் அமைந்துள்ள லிபிய விமானப் படைத் தளத்தை இலக்காகக் கொண்டு, தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று ரொய்ட்டர் முகவர் நிறுவனம் தெரிவித்தது.


பிரிட்டிஷ் நீர்மூழ்கியிலிருந்தும், அமெரிக்க நாசகாரி கப்பல்களிலிருந்தும் லிபிய விமானப்படைத் தளத்தை நோக்கி ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என பென்டகன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்தியதரைக் கரைப் பிராந்தியம் நெடுகிலும் அமைந்துள்ள லிபியாவின் இருபதுக்கு மேற்பட்ட விமான எதிர்ப்புத் தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என கடற்படைத்துணை அட்மிரல் வில்லியம் ஈ. கோங்ட்னி தெரிவித்தார்.

மேற்கத்தேய அரபு தலைவர்கள், பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் கூடி கலந்தாலோசனை நடத்தியபின்னர், இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுவரும் கடாபியின் ஆதரவுப் படைகளிடமிருந்து அப்பாவி

(29ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காலிறுதிக்குள் நுழைந்தது இந்தியா



எட்வாட்ஸின் ஆட்டமிழப்புக்காய் கோரிக்கை விடுக்கும் இந்திய அணி....



சச்சின் ஆட்டமிழந்து வெளியேறுகையில்..



யுவராஜ்

-டிலீப்-

பத்தாவது உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டம். இந்தியாவின் ஆட்டம் அபாரம். கிடைத்தது இலகு வெற்றி. திணறியது மேற்கிந்தியத்தீவுகள்.

சென்னையில் நேற்றைய ஆட்டம். இந்தியா-மேற்கிந்தியத்தீவுகள் ஆட்டத்தில் மோதல். காலிறுதிக்குள் தெரிவு இரு அணிகளும். 'பி' பிரிவில் இரண்டாம் இடத்துக்காய் மோதின இரு அணிகள். சுழற்றப்பட்டது நாணயம். கிடைக்கப்பெற்றது இந்தியாவுக்கு வெற்றி. இறங்கியது துடுப்பெடுத்தாட.

மாற்றங்கள் இந்தியாவில் நடந்தது சர்ச்சைகளால். காயத்தால் சேவாக் வெளியேற்றம். தமிழன் அஸ்வின், சாவ்லாவுக்கு பதில் ஆட்டத்தில் இடம்பிடிப்பு.

டெண்டுல்காருக்கு ஜோடியாய் கம்பீர் களமிறக்கம். எதிர்பாராத திருப்பம். நடந்தது முதலாவது ஓவரில். சதத்தில் சதம் கடப்பார் சச்சின், வீணாகியது அந்த வாய்ப்பு. பெற்றது இரண்டு ஓட்டங்கள். முடிந்தது சச்சினின் ஆட்டம். ராம்புல் சச்சினை சரித்த சாதனைக்காரர். இந்தியாவின் இளம் ராவிட், ஹோக்லி களத்துக்கு வருகை. கம்பீருடன் இணைந்தார். அதிரடிகளும் நிதானமும் கலந்து ஆடியது இந்த ஜோடி.

ஆரம்பத்தில் சரிவு மீட்டது இந்த ஜோடி. 43 ஓட்டங்கள் பகிரப்பட்டது இணைப்புக்காய். ராம்புல் மீண்டும் சரித்தார் விக்கெட்டை. அதிரடியாய் ஆட முயற்ச்சி. பறிக்கப்பட்டது கம்பீர் விக்கெட். அரைச் சதம்கடந்தது அணி. வந்தார் யுவராஜ். இணைந்தார் ஹோக்லியுடன். தொடங்கியது இந்தியாவின் அதிரடி ஆட்டம். துள்ளிக்குதித்த மேற்கிந்தியத்தீவுகளுக்கு பாடம் புகட்டியது இந்த ஜோடி. யுவராஜ் அடிகள் அதிரடியாய் பறந்தது. பிரிக்கத் துடித்தது தீவுகள். தப்பிப் பிழைத்தது இந்த ஜோடி. ஹோக்லி கடந்தார் அரைச்சதம். சதம் எட்டியது இந்தியா. மெல்ல மீண்டது சரிவிலிருந்து. சதம் கடந்தது இவர்களின் இணைப்பாட்டம். அரைச் சதம் பூர்த்தி செய்தார் யுவராஜ். 122 ஓட்டங்கள் இணைப்பில் பெறப்பட்டது. ராம்புல்லால் இணைப்பு பிரிக்கப்பட்டது மீளவும் ஹோக்லியின் கணிப்பு தவறியது. ராம்புல் பந்தில் 'போல்ட்' ஆனார் ஹோக்லி. 59 ஓட்டங்கள் இவரது பங்களிப்பு அணிக்கு. டோனி வந்தார் ஹோக்லியின் இடத்துக்கு.

டோனியின் ஆட்டத்தில் இல்லை அதிரடிகள். திருந்தவில்லை அவரது ஆட்டம். யுவராஜ் ஏத்தினார் அணியின் ஓட்ட வேகத்தை. இவரது அதிரடியில் ஏற்றத்தில் சென்றது ஓட்டவேகம். இந்தியா எட்டியது இரட்டைச் சதம். இதற்கு எடுத்துக் கொண்டது 228 பந்துகள். களத்தில் சிறப்பாய் ஆடிய யுவராஜ் எட்டினார் சதம். அரங்கில் எதிரொலித்தது கரகோஷம். டோனியும் முயன்றார் அதிரடி ஆட்டத்துக்கு. இந்தியா இழந்தது அடுத்த விக்கெட். 22 ஓட்டங்களுடன் டோனி ஆட்டத்துக்கு முடிவு கட்டிவிட்டார் பிஸ்சு. எல்லைக்கு பந்தை விரட்ட முன்னோக்கி வந்தார். தவறியது பந்து அவரது மட்டையில் பட. பிடித்தார் தோமஸ். தட்டினார் விக்கெட்டை.

இழுபறியின் இணைக்கப்பட்ட ரெய்னா இறங்கினார் களத்துக்கு. திரும்பிச் சென்றார் பவிலியனுக்கு 4 ஓட்டங்களுடன். பொலாட்டின் பந்தில் யுவராஜ் வெளியேற்றம். 240/6 அணியின் நிலை. எடுக்கப்பட்டது 'பட்டிங் பவர்பிளே'. முடிவுக்கு வந்தது இந்தியாவின் ஆட்டம். அடித்தாடும் பவர்பிளேயில் இந்தியா பெற்றுக்கொண்டது 28 ஓட்டங்கள். அதற்கு பலிக்கடாவானது நான்கு விக்கெட்டுக்கள். 268 ஓட்டங்களுடன் இந்தியாவின் ஆட்டம் முடிவு. பந்து வீச்சில் கலக்கிய ராம்புல், கைப்பற்றினார் நான்கு விக்கெட்டுக்கள்.

தீவுகளுக்கு இலகுவான இலக்கு. மாற்றங்கள் அதிரடியாய் செய்தார் டோனி. அஸ்வின் அழைக்கப்பட்டார் ஆட்டத்தை ஆரம்பிக்க. அமைதியாய் தொடங்கியது ஆட்டம். அடங்கியது சுழல் பந்து வீச்சில். அதிரடி காட்டியது வேகப் பந்து வீச்சில். 34 ஓட்டங்களில் தீவுகளின் முதலாவது விக்கெட் சரிப்பு. அஸ்வினின் சுழலில் சிக்கி எட்வாட்ஸ் வெளியேற்றம். கலங்கவில்லை தீவுகள். தடுமாறாது தொடர்ந்தது ஆட்டம். பிராவோ-ஸ்மித் அதிரடியாட்டத்தால் திணற வைத்தனர் இந்திய பந்து வீச்சை. அரைச்சதம் கடந்தது தீவுகள். தொடர்ந்து கடந்தது இவர்களின் இணைப்பு அரைச்சதம். ரெய்னாவின் சுழலில் இரண்டாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. மீண்டும் சிறப்பான ஜோடி இணைந்தது. சர்வான்-ஸ்மித் ஜோடி வெற்றியை நோக்கி பயணம். இந்தியாவின் பந்து வீச்சில் காட்டினர் அதிரடி. பந்துகள் தாண்டின எல்லைக்கோட்டை. ஸ்மித் அடித்தார் அரைச்சதம். இவர்களின் இணைப்பு இந்தியாவுக்கு தலையிடி. மாறியது பந்து வீச்சு. சகீரின் பந்தில் பறிக்கப்பட்டது ஸ்மித்தின் விக்கெட். 81 ஓட்டங்களுடன் வெளியேற்றம்.

அதிரடி நாயகன் பொலாட் வந்தார் களத்துக்கு. ஓர் ஓட்டத்துடன் ஹர்பஜன் பந்தில் வெளியேற்றம். தோமஸ் வந்தார் களத்துக்கு, வெளியேற்றப்பட்டார் டோனியால். தலைவர் சமி வந்தார். அவசர ஓட்டத்தால் ரன் அவுட்டில் வெளியேற்றம். சரிவுகள் தொடர்ந்தது. நெருங்கியது வெற்றி இந்தியாவின் பக்கம். தீவுகளின் பின்வரிசையும் இந்தியா போல் சுருண்டதால் 188 ஓட்டங்களுடன் ஆட்டம் முடிவைத் தொட்டது. சகீர்கானுக்கு கிடைத்தது மூன்று விக்கெட்டுக்கள். அஸ்வின், யுவராஜ்க்கு இரண்டு விக்கெட்டுக்கள் கிடைத்தது.

சகல துறையிலும் கலக்கிய யுவராஜ் பெற்றார் ஆட்ட நாயகன் விருதை.

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +0.758 |
| இலங்கை | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +2.582 |
| ஆஸ்திரேலியா | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +1.123 |
| நியூஸிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | +1.135 |
| சிம்பாப்வே | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | +0.030 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | -3.042 |

| பிரிவு B | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +2.026 |
| இந்தியா | 6 | 4 | 1 | 1 | 0 | 9 | +0.900 |
| இங்கிலாந்து | 6 | 3 | 2 | 1 | 0 | 7 | +0.072 |
| மே.தீவுகள் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +1.066 |
| பங்களாதேஷ் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -1.361 |
| அயர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.696 |
| நெதர்லாந்து | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | -2.045 |

M போட்டி L தோல்வி Net/R சராசரி T சமனிலை
W வெற்றி Pt புள்ளிகள் N/R முடிவுறா ஆட்டம்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண நாற்பத்திரண்டாவது ஆட்டம்

ஆட்டம்: இந்தியா Vs மே.தீவுகள் நாணயச் சுழற்சி: இந்தியா
முடிவு: 80 ஓட்டங்களால் இந்தியா வெற்றி ஆட்டநாயகன்: யுவராஜ் சிங்

### இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | c ருஷெல் b ராம்புல் | 22 | 26 | 4 | 0 |
| டெண்டுல்கார் | c தோமஸ் b ராம்புல் | 02 | 04 | 0 | 0 |
| ஹோக்லி | b ராம்புல் | 59 | 76 | 5 | 0 |
| யுவராஜ்சிங் | c&b பொலார்ட் | 113 | 123 | 10 | 2 |
| டோனி | st தோமஸ் b பிஸ்சு | 22 | 30 | 01 | 0 |
| ரெய்னா | c ராம்புல் b சமி | 04 | 08 | 00 | 0 |
| பதான் | b ராம்புல் | 11 | 10 | 01 | 0 |
| ஹர்பஜன்சிங் | c பொலார்ட் b ருஷெல் | 03 | 06 | 00 | 0 |
| அஸ்வின் | ஆட்டமிழக்கவில்லை | 10 | 07 | 01 | 0 |
| சகீர்கான் | b ராம்புல் | 05 | 03 | 01 | 0 |
| முனாப்பட்டேல் | b ருஷெல் | 01 | 02 | 00 | 0 |
| உதிரிகள் | (lb 2,w 9, b 5) | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ராம்புல் | 10 | 51 | 5 | 0 |
| பென் | 04 | 32 | 0 | 0 |
| ருஷெல் | 9.1 | 46 | 2 | 1 |
| சமி | 06 | 35 | 1 | 0 |
| பிஸ்சு | 10 | 48 | 1 | 0 |
| பொலார்ட் | 10 | 49 | 1 | 0 |

TOTAL - 268/10 (49.1)

1-8(டெண்டுல்கார்), 2-51 (கம்பீர்), 3-178 (ஹோக்லி), 4-218 (டோனி), 5-232 (ரெய்னா), 6-240 (யுவராஜ்), 7-252(பதான்), 8-259(ஹர்பஜன்சிங்), 9-267(சகீர்கான்), 10-268(முனாப்பட்டேல்)

### மேற்கிந்தியத்தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்மித் | lbw b பிறிஸ் | 81 | 97 | 7 | 1 |
| எட்வாட்ஸ் | lbw b அஸ்வின் | 17 | 17 | 1 | 1 |
| பிராவோ | c ஹர்பஜன்சிங் b ரெய்னா | 22 | 29 | 1 | 1 |
| சர்வான் | c அஸ்வின் b சகீர்கான் | 39 | 68 | 3 | 0 |
| பொலார்ட் | c பதான் b ஹர்பஜன்சிங் | 01 | 03 | 0 | 0 |
| தோமஸ் | st டோனி b யுவராஜ் | 02 | 08 | 0 | 0 |
| சமி | run out(ரெய்னா/பட்டேல்) | 02 | 04 | 0 | 0 |
| ருஷெல் | c பதான் b யுவராஜ் | 00 | 05 | 0 | 0 |
| பென் | c பட்டேல் b சகீர்கான் | 03 | 12 | 0 | 0 |
| பிஸ்சு | ஆட்டமிழக்கவில்லை | 06 | 11 | 1 | 0 |
| ராம்புல் | b அஸ்வின் | 01 | 04 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 8, w 6) | 14 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அஸ்வின் | 10 | 41 | 2 | 0 |
| சகீர்கான் | 06 | 26 | 3 | 0 |
| ஹர்பஜன்சிங் | 09 | 35 | 1 | 1 |
| பதான் | 07 | 28 | 0 | 0 |
| ரெய்னா | 02 | 12 | 1 | 0 |
| யுவராஜ்சிங் | 04 | 18 | 2 | 0 |
| முனாப்பட்டேல் | 05 | 20 | 0 | 0 |

TOTAL - 188/10(43)

1-34 (எட்வாட்ஸ்), 2-91 (பிராவோ), 3-154 (ஸ்மித்), 4-157 (பொலாட்), 5-160 (தோமஸ்), 6-162 (சமி), 7-165(ருஷெல்), 8-179 (பென்), 9-182 (சர்வான்), 10-188 (ராம்புல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எர்வின்

# ஆறுதலுக்கும் வெற்றி கிடைக்கவில்லை கென்யாவுக்கு

**கா**லிறுதிக்குத் தகுதியில்லாத் அணிகள் இரண்டும் கொல்கத்தாவில் நேற்று மோதின. சிம்பாப்வே - கென்யா அணிகளுக்கிடையில் பத்தாவது உலகக் கிண்ணப் போட்டியின் 41 ஆவது ஆட்டம். சிம்பாப்வே நாணயசுழற்சியில் வென்று தேர்வு செய்தது துடுப்பாட்டத்தை.

ரெயிலர் - சக்பாவா ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் புகுந்தனர். கென்யா எந்த ஒரு ஆட்டத்திலும் வெற்றிபெறாததால் ஆறுதல் வெற்றியையாவது பதிக்க நினைத்தது. ஆரம்ப ஓவர்களைக் கென்யர்கள் சிறப்பாக வீசினர். மெதுவாகவே ஓட்ட எண்ணிக்கை நகர்ந்தது. முதலாவது விக்கெட் 32 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. ஒட்கியாம்போவின் பந்தில் 9 ஓட்டங்களுடன் சக்பாவா வெளியேற்றம். தொடர்ந்து மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரெயிலர் 26 ஓட்டங்களுடன் ஓர்ரினோ பந்தில் வெளியேற்றப்பட்டார்.

ஆரம்ப விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டதால் வெற்றி இலகுவில் வீழுமென கென்யர்கள் கண்டனர் கனவு.

36 ஓட்டங்களுக்குள் இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்ச்சி. தைபு-சிபன்டா இணைந்து சிம்பாப்வேயை சிறப்பாக வழிநடத்திச் சென்றனர். நிதானமாகவே இவர்களது ஆட்டம் தொடர்ந்தது. கென்யர்களின் பலவீனமான பந்து வீச்சுக்களை எல்லைக்குத் தட்டி ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். நிலைத்து நின்றாடி மேலதிக விக்கெட் இழப்புக்களைத் தவிர்த்தனர்.

மூன்றாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டம் அரைச் சதம் கடந்தது. சிறப்பாக ஆடிய தைபு தனது அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தார். மறு முனையில் நின்று சிறப்பாக ஆடிய சிபன்டா அதிரடியாக அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இருவரது அரைச் சதத்துடன் இவர்களின் இணைப்பாட்டம் சதம் கடந்தது.

சிம்பாப்வே 146 ஓட்டங்களை எட்டிய நிலையில் மூன்றாவது விக்கெட்டினையும் இழந்தது. தேவையற்ற ஓர் ஓட்டத்தை பெறுவதற்கு முயற்சித்து சிபன்டா ஆட்டமிழந்தார். 57 பந்துகளில் 61 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். மறுமுனையில் அவருடன் இணைப்பாய் ஆடிய தைபு 53 ஓட்டங்களில் வெளியேறினார். 4 விக்கெட்டுக்கள் இழந்து 165 ஓட்டங்களை பெற்றது சிம்பாப்வே.

மீண்டுமொரு இணைப்பு கென்யாவுக்கு எதிராய் முன்னெடுத்தது சிம்பாப்வே. எர்வின்-சிக்கம்புரா இணைந்து ஆட்டத்தை சிறப்பாய் தொடர்ந்தனர். இந்த ஜோடி ஆட்டத்தை அதிரடியாய் ஆடி முன்னெடுத்துச் சென்றது. தைபு-சிபன்டா இணைப்பாட்டம் விக்கெட்டை தக்க வைத்தது. எர்வின்-சிக்கம்புரா ஜோடி அதிரடியாய் ஆட்டத்தை முன்னெடுத்தது. ஓவர்களும் இறுதிக் கட்டத்தை நெருங்க அதிரடி ஆட்டம் அனல் பறந்தது. ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டம் 105 ஓட்டங்களைப் பகிர்ந்தது. சிறப்பாய் ஆடிய சிக்கம்புரா 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இதனுள் இரண்டு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடக்கம். தொடர்ந்து சரிந்தது ஆறாவது விக்கெட். 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது ஆறாவது விக்கெட். எர்வின் 66 ஓட்டங்களுடன் ஓர்ரினோ பந்தில் வெளியேற்றப்பட்டார். 54 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாகவே 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பின்வரிசை வீரர்கள் இறுதியில் அதிரடியாய் ஆட 308 ஓட்டங்களைப் பெற்றது சிம்பாப்வே.

பதிலுக்கு பிரமாண்ட இலக்கை துரத்த ஆரம்பித்தது கென்யா. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டிகளில் எந்தவொரு ஆட்டத்திலும் வெற்றியும் பெறவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிராய் மட்டும் 200 ஓட்டங்களைத் தாண்டியது இவர்களின் பெறுபேறு. கென்யா வெற்றி பெறுவதற்கு சாத்தியம் இல்லை. ஆஸியுடன் ஆடியது போன்று ஆட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டும் வெற்றி சாத்தியம்.

ஒபன்டா-டேவிட் ஒபுயா கென்யர்களின் ஆட்டத்தை ஆரம்பித்தனர். சிம்பாப்வேயின் பந்து வீச்சில் தகர்த்தெறியப்பட்டது கென்யர்களின் ஆரம்பம். மொப்வூ பந்தில் டேவிட் ஒபுயா வெளியேற்றம். ஓட்டம் எதனையும் அணிக்காய் சேர்த்துக் கொடுக்கவில்லை. ஆட்டம்காணத் தொடங்கியது கென்யர்களின் ஆட்டம். சீரான இடைவெளியில் சரியத் தொடங்கியது விக்கெட்டுக்கள். சிம்பாப்வே சுழல் பந்து, வேகப் பந்து வீச்சு இரண்டிலும் கலக்கியது. சரிந்தது கென்யாவின் விக்கெட்டுக்கள். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராய் உள்நுழைந்த ஒபன்டா மட்டும் 23 ஓட்டங்கள் சேர்த்துக் கொடுத்தார்.

44 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்தது கென்யா. பட்டேல்-ஒட்கியாம்போ இணைப்பாட்டம் கென்யாவின் ஆட்டத்துக்கு சேர்த்தது பலம். நீண்ட நேரத்துக்கு இணைப்பை நீடிக்காது பிரித்து விட்டது சிம்பாப்வே. லாம்ப் பந்தில் பட்டேல் 24 ஓட்டங்களுடன் வெளியேற்றம். பின்வரிசை வீரர்கள் சொதப்பினர் துடுப்பாட்டத்தில். சிம்பாவேயின் பந்து வீச்சில் பின்வரிசை மாண்டது. 14 ஓவர்கள் மீதமிருக்கையில் சகல விக்கெட்டுக்களும் இழந்தது கென்யா. 147 ஓட்டங்களுடன் முடிந்தது கென்யாவின் ஆட்டம். சிம்பாப்வே அபார வெற்றி படைத்தது. 161 ஓட்டங்களால் வந்து சேர்ந்தது சிம்பாவேக்கு வெற்றி.

பந்து வீச்சில் பிறிஸ், லாம்ப், கிரீமர் கைப்பற்றினர் இரு விக்கெட்டுக்கள். அதிரடியாய் ஆடிய எர்வின் தட்டிச் சென்றார் ஆட்ட நாயகன் விருதை.

- - அருண்மொழி -

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண நாற்பத்தோராவது ஆட்டம்

ஆட்டம்: சிம்பாப்வே Vs கென்யா நாணயச் சுழற்சி: சிம்பாப்வே
முடிவு: 161 ஓட்டங்களால் சிம்பாப்வே வெற்றி ஆட்டநாயகன்: எர்வின்

சிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரெயிலர் | c நொக்சீ b ஓர்ரினோ | 26 | 36 | 5 | 0 |
| சக்பாவா | c டேவிட் ஒபுயா b ஒட்கியாம்போ | 09 | 22 | 1 | 0 |
| தைபு | lbw b நொக்சீ | 53 | 74 | 7 | 0 |
| சிபன்டா | Runout (கொலின் ஒபுயா) | 61 | 57 | 7 | 1 |
| எர்வின் | b ஓர்ரினோ | 66 | 54 | 9 | 1 |
| சிக்கம்புரா | c மிஸ்ரா b ஒன்கொண்டோ | 38 | 41 | 3 | 2 |
| லாம்ப் | ஆட்டமிழக்கவில்லை | 17 | 10 | 1 | 1 |
| உர்ஷேயா | ஆட்டமிழக்கவில்லை | 19 | 06 | 3 | 1 |
| கிரீமர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிறிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மொப்வூ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 3,w 14, b 2) | 19 | | | |

TOTAL - 308/6 (50)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஒன்கொண்டோ | 10 | 53 | 1 | 0 |
| ஓர்ரினோ | 10 | 61 | 2 | 0 |
| ஒட்கியாம்போ | 10 | 58 | 1 | 1 |
| நொக்சீ | 10 | 68 | 1 | 0 |
| ஒபுயா | 03 | 14 | 0 | 0 |
| ரிக்கோலோ | 07 | 49 | 0 | 0 |

1-32(சக்பாவா), 2-36 (ரெயிலர்), 3-146 (சிபன்டா), 4-165 (தைபு), 5-270 (சிக்கம்புரா), 6-276 (எர்வின்)

கென்யா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஒபன்டா | lbw b பிறிஸ் | 23 | 36 | 4 | 0 |
| டேவிட்ஒபுயா | lbw b மொப்வூ | 00 | 02 | 0 | 0 |
| கொலின்ஒபுயா | run out(சிபன்டா) | 01 | 06 | 0 | 0 |
| ரிக்கோலோ | lbw b பிறிஸ் | 10 | 14 | 2 | 0 |
| மிஸ்ரா | c கிரீமர் b உர்ஷேயா | 04 | 09 | 1 | 0 |
| ஒடுயா | lbw b லாம்ப் | 14 | 29 | 2 | 0 |
| பட்டேல் | c சக்பாவா b லாம்ப் | 24 | 37 | 3 | 0 |
| ஒட்கியாம்போ | ஆட்டமிழக்கவில்லை | 44 | 47 | 5 | 0 |
| ஒன்கொண்டோ | lbw b கிரீமர் | 06 | 02 | 0 | 1 |
| ஓர்ரினோ | run out(சிக்கம்புரா) | 05 | 13 | 0 | 0 |
| நொக்சீ | c மொப்வூ, b கிரீமர் | 09 | 21 | 0 | 1 |
| உதிரிகள் | (lb 4, w 3) | 07 | | | |

TOTAL - 147/10(36)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மொப்வூ | 6 | 27 | 1 | 0 |
| பிறிஸ் | 7 | 20 | 2 | 1 |
| உர்ஷேயா | 9 | 47 | 1 | 0 |
| லாம்ப் | 7 | 21 | 2 | 0 |
| கிரீமர் | 7 | 28 | 2 | 0 |

1-03 (டேவிட்ஒபுயா), 2-10 (கொலின் ஒபுயா), 3-27 (ரிக்கோலோ), 4-44 (மிஸ்ரா), 5-44(ஒபன்டா), 6-73 (ஒடுயா), 7-95(பட்டேல்), 8-101(ஒன்கொண்டோ), 9-124 (ஓர்ரினோ), 10-147(நொக்சீ)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50s | 100s | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| சங்கக்கார(இலங்கை) | 06 | 363 | 02 | 01 | 111 | 121.00 |
| ரொரட்(இங்கிலாந்து) | 06 | 336 | 04 | 00 | 92 | 56.00 |
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 06 | 329 | 01 | 01 | 158 | 54.83 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 06 | 17 | 05/16 |
| [illegible] | 06 | 15 | 03/20 |
| [illegible] | 06 | 14 | 04/12 |

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR®
Live your Life©
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




மாபெரும் இறுதிப் போட்டி
உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
..........................................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
..........................................................
பெயர் : ..........................................
தே.அ.இல. : ......................................
முகவரி : ..........................................
..........................................
போட்டி முடிவுத் திகதி
25.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் சென்னையில் நேற்றைய ஆட்டம்



இராணுவம், கடலோர காவல் படை உதவியுடன், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நேற்றைய ஆட்டம் சென்னையில் இடம்பெற்றது.

சென்னை, சேப்பாக்கம் எம்.ஏ.சி., மைதானத்தில், இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி, நேற்று இடம்பெற்றது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலை அடுத்து, பகலிர வாக இடம்பெற்ற இந்த ஆட்டத்துக்கு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை சென்னை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

முதல் முறையாக, தமிழகத்தில் கிரிக்கெட் ஆட்டத்தின் பாதுகாப்புக்கு இராணுவம் மற்றும் கடலோர காவல் படையினர் பொலிஸாருக்கு உதவியாகக் களமிறங்கினர். இதுகுறித்து, சென்னை பொலிஸ் அத்தியட்சகர் ராஜேந்திரன் கூறியதாவது:

மத்திய உளவுப் பிரிவு, இந்தியாவில் உள்ள கிரிக்கெட் மைதானங்களுக்கு பரவலாக பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதாக அறிவு றுத்தியிருந்தது. இதன் அடிப்படையில், சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு பாது காப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த முறை பாதுகாப்புக்காக இராணுவம், கடலோரக் காவல் படையின் உதவி கோரப்பட்டது.

இராணுவத்தினர், சிறிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கியுடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். சேப்பாக்கம் மைதானம் கடற்கரை அருகில் அமைந்துள்ளதால், கடற்பகுதியில் கடலோர காவல் படையினர் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மைதானத்திற்குள், வெளியே மற்றும் சுற்றியுள்ள வீதிகளில் 180 கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

மைதானத்தினுள் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் சார்பில் நான்கு அதிவிரைவு மீட்புப் படையினர் பணியில் இருந்தனர். கிரிக்கெட் ஆட்டத்தின் பாதுகாப்புப் பணிக்காக 2,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். என்று ராஜேந்திரன் கூறினார்.

## ஆஸி.-பாக். ஆட்டத்திலிருந்து...

உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில், ஆஸ்திரேலிய அணி தொடர்ந்து 34 ஆட்டங்களில் தோல்வியைச் சந்திக்காமல் இருந்தது. சுமார் 12 ஆண்டுகளுக்கு பின்னர், நேற்று முன்தினம் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வி அடைந்தது. கடைசியாக, கடந்த 1999இல் நடந்த உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி, பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்தது. இந்தத் தோல்விக்கு இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா பதிலடி கொடுத்தது.


★ ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங், கடந்த 2003இல் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் முதன்முதலில் அணித் தலைவராகக் களமிறங்கினார். இவர், உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் தொடர்ந்து 27 ஆட்டங்களில் தோல்வியைச் சந்திக்காமல் 100 சதவீத வெற்றித் தலைவராக வலம் வந்தார். ஆனால் நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வி அடைந்ததன் மூலம், உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் பொன்டிங் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி முதல் தோல்வியைச் சந்தித்துள்ளது.

# காத்திருக்கிறது கடுமையான போட்டி

மும்பை,மார்ச் 21

உலகக் கிண்ண 'நொக் அவுட்' சுற்றில்தான் கடுமையான போட்டி காத்திருக்கின்றது என்று இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

உலககக் கிண்ணத் தொடரில் லீக் ஆட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்தன. எதிர்வரும் 23ஆம் திகதி



முதல் காலிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே சங்கக்கார இவ்வாறு கூறினார்.

பொதுவாக ஆட்டங்களில் வெற்றிபெறுவது என்பது எப்போதுமே மகிழ்ச்சியான விடயம்தான். நியூஸிலாந்து எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் எங்களது தன்னம்பிக்கை பன் மடங்கு அதிகரித்துள்ளது. இருப்பினும் இனிவரும் ஆட்டங்கள்தான் எங்களுக்குக் கடுமையான சவாலான ஆட்டங்கள். அவை 'நொக் அவுட்' ஆட்டங்களாக இடம்பெறுவதால் ஆட்டத்தில் வெற்றிபெறுவது கட்டாயமாகின்றது.

நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சதமடித்தது போல் இனிவரும் ஆட்டங்களிலும் அசத்துவேன் என நம்புகிறேன் - என்றார்.

# மன்னிப்பாயா...

தென்னாபிரிக்காவிடம் தோற்று உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து வெளியேறிதற்காக தங்கள் நாட்டு ரசிகர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார் பங்களா தேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன்

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

எங்கள் மீது ரசிகர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அதிக அளவில் எதிர்பார்ப்பும் இருந்தது. அதை நாங்கள் வீணடித்து விட்டோம். உலகக் கிண்ணம் முழுவதும் நாங்கள் சரியாக விளையாடவில்லை. அதற்காக ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் தோல்வியடைந்ததற்கு குறிப்பிடும் படியான காரணம் எதுவும் இல்லை. உலகக் கிண்ண முழுவதுமே எங்கள் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக அமைந்து விட்டது- என்றார்.



# ஒற்றுமையே பலம்




சென்னை,மார்ச் 21

இங்கிலாந்து மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியைத் தோற்கடித்தது.

இந்த வெற்றி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் கூறியதாவது:-

இந்த வெற்றி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. வீரர்களின் கூட்டு முயற்சியால் இந்த வெற்றி கிடைத்தது. நாங்கள் துடுப்பாட்டத்தில் 20 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்தோம். ஆனால் பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக பந்து வீசினார்கள். ரெட்வெல், சுவான் சிறப்பாக பந்து வீசினர். சுவான் ஒரே ஓவரில் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியது தான் ஆட்டத்தின் திருப்புமுனையாகும். வெற்றி பெற வேண்டியமிகவும் கடினமான ஆட்டமாக இது இருந்தது.

மேற்கிந்திய தீவுகள் அணியில் இடது கை ஆட்டக்காரர்கள் அதிகமாக இருப்பதால் 2 முதன்மை பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கினோம். எங்க ளது ஆட்டத்தில் இன்னும் முன்னேற்றம் தேவை- என்றார்.தோல்வி குறித்து மேற்கிந்தியத்தீவுகளின் பயிற்சியாளர் சிப்சன் கூறிய தாவது:

எங்களது ஆட்டம் சிறப்பாக இருந்தது. இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். சமீப காலங்களில் மிகப் பெரிய அணிகளுக்கு எதிராக நாங்கள் வெற்றி பெறவில்லை. இருந்தும் பங்களா தேஷ் அணியை அதன் சொந்த மண்ணில் 58 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியமை எமது அணி வெற்றி பாதையில் பயணிக்கத் தொடங்கி விட்ட தென்பதையே எடுத்துக் காட்டுகின்றது- என்றார்.

**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

[illegible]
[illegible]
கவிதா ரேடர்ஸ்

**நெல்லியடியில்**
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**
நாவலர் புத்தகசாலை


**உடுப்பிட்டியில்**
ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**
கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறிராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுநதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்கிந்தியத் தீவுகளுடனான ஆட்டத்துக்கு முன்னராக பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய அணித் தலைவர் டோனி, பயிற்சியாளர் கிறிஸ்ரன்



அடுத்த வர்ணப் படத்தில் அதிரடி நாயகர்கள் சேவாக், பீற்றர்ஸன், எப்போது வரும்?

இணைந்திருங்கள் உதயனுடன்...

# இவரை மறக்கலாமா?

பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால் அந்த அணியினர் தமது முன்னாள் பயிற்றுநரான பொப் வூல்மரை மறந்துவிடக் கூடாது என்று முன்னாள் அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் கூறியுள்ளார் .

2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியின் போது தனது ஹோட்டல் அறையில் பொப் வூல்மர் மர்மமான முறையில் இறந்துகிடந்தார்.

2007 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி அவர் இறந்தார். அவர் இறந்து சரியாக 4 வருடங்களாகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணி அயர்லாந்திடம் தோல்வியுற்று உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து வெளியேறியதற்கு மறுநாளே வூல்மர் இறந்தார். அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. அப்போதைய அணித் தலைவர் இன்ஹமாம் உட்பட பாகிஸ்தான் வீரர்கள் கடும் விசாரணைகளை எதிர்நோக்க விருந்தனர். எனினும் அவர் இயற்கையாகவே இறந்தார் என்று ஜமைக்கா பொலிஸார் பின்னர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியினர் பொப்வூல்மரை நினைவுகூர வேண்டும் என இன்ஸமாம் கூறியுள்ளார்.



'பொப் வூல்மர் பாகிஸ்தான் கிரிக்கெட் துறைக்கு பெரிய பங்களிப்பைச் செய்துள்ளார். பாகிஸ்தான் அணியினர் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால் அவர்கள் வூல்மரை நினைவுகூர வேண்டும்'என்று இன்ஸமாம் தெரிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருடன் இன்ஸமாம் உல் ஹக் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை லாகூரிலுள்ள தேசிய கிரிக்கெட் பயிற்சி நிலையத்திற்கு பொப் வூல்மரின் பெயரைச் சூட்டி கௌரவித்தது.

வூல்மர் குறித்து இன்ஸமாம் மேலும் கூறுகையில், கிரிக்கெட் விளையாட்டில் பல புதிய நுட்பங்களை புகுத்தியவர் பொப் வூல்மர். தற்போது பயிற்றுநர்கள் பலரும் மடிக்கணினிகளை பயன்படுத்துகின்றனர். இதை முதலில் செய்தவர் வூல்மர் தான்.

அந்தக்காலத்தில் அவர் மடிக் கணியை பயன்படுத்திய போது பலரும் அவரை பார்த்துச் சிரித்தனர். ஆனால்

தற்போது அனைத்து பயிற்றுநர்களும் அதைப் பயன்படுத்துகின்றனர்' என்றார்.

(15)

பங்குபற்றுங்கள்
போட்டிகளில்
வென்றுகொள்ளுங்கள்
பணப்பரிசில்களை

உதயன்

1 ஆம் பரிசு

வெல்லுங்கள்
1 1/2 லட்சம்
ரூபா பணப் பரிசு

வழங்கும்
எட்டமுடியாத
லட்சங்கள்
உங்களுக்காக

2 ஆம் பரிசு

1 லட்சம் ரூபா
பணப் பரிசு

உங்களுக்காகவே
காத்திருக்கின்றன லட்சங்கள்.

மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
..........................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
..........................................
பெயர் : ..........................................
தே.அ.இல. : ..........................................
முகவரி : ..........................................
..........................................

போட்டி முடிவுத் திகதி
25.03.2011

cliCT GATEWAY CENTRE JAFFNA
4 1/2 லட்சம் ரூபா வழங்கும்
பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் ருடே
வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு
ஒரு வருடத்துக்கான
கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

உதயன்
வழங்கும்
தலா 10 ஆயிரம் வீதம்
5 பேருக்கு.

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசில்கள்

அள்ளுங்கள்
ஆறுதல்
பரிசில்களை

SINGER PLUS
No.01 STANLY ROAD JAFFNA. வழங்கும்
EGG BEATER

SINGER
HOSPITAL ROAD JAFFNA. வழங்கும்
FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும்
FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும்
FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI. வழங்கும் TOASTER

PC SOLUTION
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும்
SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி, (துட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலச் சிந்தனை



### நோன்பு உடலிலா, உள்ளத்திலா?

நோன்பு புனிதமானது. இறைவனுக்கும் எமக்கும்- எமக்கும் பிறருக்கும் இடையேயுள்ள உறவை வலுப்படுத்துவதும் மனித புலன்களை அடக்கி அகந்தையைத் தூய்மையாக்கி இறை செயற்பாட்டுக்கு இசைவாக்கம் அளிப்பதும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதும் நோன்பாகும். நோன்பாளரின் மனநிலை எவ்வாறு இருக்கவேண்டும்? எவ்வகையான நோன்பு ஏற்புடையதாகும்? மனமாற்றமில்லாத உணவுத் தவிர்ப்பு நோன்பாகுமா?

மனங்களை உலகத்தின் பால் அலையவிட்டுக் கொண்டு இறைவனே! இறைவனே! என்று கூக்குரலிடுவதை இறைவன் விரும்பமாட்டார். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள். உங்கள் வேலையாள்களை ஒடுக்குகின்றீர்கள். வழக்காடவும் வீண் சண்டையிடவும் கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்.

இவ்வாறு நீங்கள் நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. (எசா-58.3-4)

உடல், உள தூய்மைக்காக அனுசரிக்கப்படும் நோன்பு இன்று பல சந்தர்ப்பங்களில் ஒரு'பாஷனாகவும்' வெளிப்பாட்டுத் தன்மையாகவும் மாறிவிட்டது. ஒருநேரம், ஒருநாள், ஒரு வாரம், ஒரு மாதம் என்று பட்டியலை நீட்டிக்காட்டிப் பெருமையடிக்கப்படுகிறது. நீரின்றியோ, உணவின்றியோ, உடலைக் கட்டுப்படுத்துதல் மட்டும் நோன்பாகுமா? உடலுக்குள் செல்பவற்றைவிட உள்ளிருந்து வெளிப்படும் தீயகுண இயல்புகளைக் குறைப்பதும் தவிர்ப்பது நோன்பின் மேன்மைக்கு வலுச்சேர்க்கும். கோபம்,பொறாமை, சுயநலம், பகைமை,வழிச்சொல், புறங்கூறல், ஓரங்கட்டுதல், இச்சை போன்ற வெளிப்பாடுகளை நாளாந் தம் விலக்கி வருதல் உடல் நோன்புக்கு மேலான உள நோன்பாகும். நான் என்பதை விடுத்து நாம் என்னும் சமுதாய அன்புச் சேவைகளை முன்னெடுப்போம். அங்கே ஆண்டவரின் மாட்சி வெளிப்படும். இதுவே ஏற்புடைய நோன்பாகும்.

எஸ்.யேசுதாஸ்,கொழும்புத்துறை.

# ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**சுழிபுரம் விக்ரோறியா**

காருண்யா ஸ்ரீகிருஸ்ணராஜா- 8ஏ,பி, தர்சிகா தெய்வேந்திரம்- 8ஏ, பி, கார்த்திகா இரத்தின குமாரன் - 7ஏ,2பி,சுகுமார் சுதர்சன-5ஏ,4பி, நிரோஜனா ஸ்ரீரங்கன்- 5ஏ,2பி,2சி, சிவப்பிரியா பத்மநாதன்- 5ஏ,பி,3சி, விஜயகுமார் சூரியப் பிரகாஷ் -4ஏ,பி,4 சி, டெசிந்தா பாலசிங்கம்- 4ஏ,பி,3சி,எஸ், குகதர்சினி சந்திரசேகரம்- 3ஏ,4பி,2சி, காயத்திரி கணேஸ்வரன் -3ஏ,3பி,3சி, பிரியங்கா யோகலிங்கம் -3ஏ,பி,4சி.

**கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி**

த.சிவதாஸ்-9ஏ, யோ.கௌதமி- 9ஏ, கு.ஜனுவிந்-8ஏ,பி,வே.கேஷாளினி- 5ஏ,4பி, செ.ஆன்டனியா- 5ஏ,3பி,சி, ப.கீதாஞ்சலி- 5ஏ,2பி,சி,எஸ், அ.சுபீர்ஸ்- 5ஏ,பி,2சி,எஸ், நா.கதுரஸா-5ஏ, பி,2சி, பி.சசிகலா-4ஏ,பி,3சி,எஸ், நா.ஜனுசன்-4ஏ,2பி,2சி.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

இராஜசேகரன்-ஜதுஷன்-9ஏ, கைலாயபதி சுதாகர்-9ஏ, வெங்கடசாமி கரிகரன்-9ஏ,சண்முகலிங்கம் குருபரன்-9ஏ, சண்முகநாதன் சந்தோஷன் -9ஏ, அருளானந்தம் ஆராஅமுதன்- 9ஏ,மகேஸ்வரன் பரசுராம்-9ஏ, இரத்தினசிங்கம் பிரணவன்-9ஏ, கலைநாதன்-புவிவர்மன்-9ஏ, ரூபன் சஜிந்தன்-9ஏ, இளங்குமரன் பார்த்திபன்-9ஏ, கமலநாதன் அனோஜன்-8ஏ, நவலோகநாதன் யதுர்சன்-8ஏ, செல்வரட்ணம் குகனேசன்-8ஏ, அலோசியால் ஒஸ்ரின்-8ஏ, சண்முககுமார் அருள்பவன்-8ஏ, விக்கினேஸ்வரன் ஜர்சிகன்-8ஏ, இராஜேஸ்வரன் ஜவனீசன்-8ஏ, பவளகுமாரன் ஜீவிதன்-8ஏ, சோதிதாசன் வெண்ணிலவன்-8ஏ, சிவானந்தராஜா அச்சுதன்-8ஏ, ஜெகதீஸ்வரன்-லக்சன்8ஏ, சிவகுமார் மேகலாதன்-8ஏ,கனகலிங்கம் வதுசன்-8ஏ, துரைசிங்கம் ஆதவன்-8ஏ, திருலிங்கம் ஆதவலோஜன் -8ஏ, குமாரசாமி கஜானன்-8ஏ,நகுலநாதன் லவலோஜன்-8ஏ, சந்திரதேவன்-ராம்ராஜ்-8ஏ, சிவபாதம் தர்சன்-8ஏ, சோதிநாதன் திரியம்பகசர்மா-8ஏ, தர்மானந்தசிவம் ஜதார்த்தன்-8ஏ,குகானந்தசீலன் நிலக்ஷன்-8ஏ,பேரின்பநாயகம் நிரோஷன்-8ஏ, பரமானந்தராஜா சதீஸ்குமார்-8ஏ,லோகேஸ்வரன் தர்சிகன்-8ஏ, பாலச்சந்திரன் திபாகுகன்-8ஏ, சிவபாலன் திவிஜன்-8ஏ, தவராஜா வைகுந்தன்-8ஏ,இந்திரகுமார் வினு-8ஏ, முத்துக்குமாரன் விதுன்-8ஏ.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

சுகன்யா பாலச்சந்திரன்-8ஏ,பி, பிறின்சிகா நாகரஞ்சன் -6ஏ,2பி,சி, மேகலா ராமச்சந்திரன்-6ஏ,2பி,சி, மிருஷானி ரகுநாதன்-5ஏ,3பி,சி, ஜீபிகா ஜோஜ்-5ஏ,2பி,சி,எஸ், லக்சனா ஸ்ரீ பத்மநாதன்-5ஏ,பி,3சி, நிஜானா பிறேமநாதன்-4ஏ,2பி,2சி,எஸ், மதிவாணி சற்குணராசா -4ஏ,2பி,2சி,எஸ், ரேக்கா ரகு- 4ஏ,பி,4சி, சோபனா நேசராஜா 3ஏ,3பி,3சி, சாம்பவி ஜெகந்நாதன் - 3ஏ, 3பி, 3சி, வித்தியா கந்தசாமி-3ஏ, பி,4சி,எஸ், சஸ்மிதா நந்தகுமார்-3ஏ,5சி,எஸ், கஜானனி கிருஸ்ணபிள்ளை- 3ஏ, பி,சி,4எஸ், சக்தி பரமேஸ்வரன்-3ஏ,2பி,3சி, சர்மிளா விஜயகுமார்-3ஏ,3சி,2எஸ்.

தேவ ராஜ்ஜியத்தில் வாழ்வோம் வளர்வோம்
அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

**"Life in HIS Word"**
**"வார்த்தையில் வாழ்வு"**

செய்தியளிப்பவர்கள்: கனம் ஹவாட் விலாட் [USA]
கனம் பெனற்கெய்த் (நியூசிலாந்து)
போதகர் நதானியேல் [USA]

காலம்:2011 பங்குனி 22 முதல் 25 வரை
நேரம் -காலை 9.00-பி.ப. 1.00 மணிவரை
இடம்- வானவில் தேவாலயம், டச்சு றோட், உடுவில்.[உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில்]

(40-27-20)(2237)

## பௌதீக பாடத் திரட்டுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

பௌதீக பாடத்திரட்டுச் செயலமர்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் பணிப் பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-236)

## வாழ்த்துகின்றோம்



**இரத்தினம் பிரபாகரன்**

363,முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த இவர் எமது நிறுவனத்தினால் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணப் பொதியையும் சில முக்கிய ஆவணங்களையும் கண்டெடுத்து எம்மிடம் திருப்பி ஒப்படைத்துள்ள இவரின் நற்செயலைப் பாராட்டி எமது நிறுவனத்தின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கிறோம்.

உரிமையாளர்
Monoj Express Service,
181, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (40-20)(2238)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உதவி அதிபரும் ஆசிரிய சகோதரத்துவத் தலைவருமாகிய சி.த.இரத்தினம் அவர்களின் அன்பு மாமனார்

**சிவகுரு இராமலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(40-20-27)(சி/576955)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கல்விசாரா உத்தியோகத்தர் நகுலேஸ்வரனின் அன்புத்தாய்

**சின்னப்பா தவமணி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(40-20-27)(சி/576954)

## பேருந்துகள் மோதி கிளிநொச்சியில் நேற்று விபத்து

கிளிநொச்சி, மார்ச் 21

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அரச பேருந்தும் வவுனியாவுக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்தும் கிளிநொச்சியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்தது.

இரண்டு பேருந்துகளும் போட்டி போட்டுக் கொண்டு வேகமாகச் சென்றமையால் இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச பேருந்தின் பின்புறத்தில் தனியார் பேருந்து வேகமாகச் சென்று மோதியுள்ளது. இதனால் பேருந்துகள் இரண்டுமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் ஒருசிலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். கிளிநொச்சி நகரப்போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (க-6)

## மரண அறிவித்தல்



**மருதர் குண்டுமணி**

(ஓய்வுபெற்ற காரியாலய உதவியாளர், உடுப்பிட்டி இந்துக் கல்லூரி)

கட்டுவன் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.45, 5 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட மருதர் குண்டுமணி நேற்று (20.03.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதர் - சோதி தம்பதியரின் இளைய மகனும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற மகிழம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் உஷா நந்தினி ( ஆசிரியை, பூந்தோட்ட மகாவித்தியாலயம், வவுனியா), உஷாதரன் (முகாமையாளர், வேல்ட் - வியூ ரெஸ் டுரண்ட், கைதடி), உஷாரூபன் (ரூபன் வாச் வேர்க்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிதரனின் (நூலக உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம், வவுனியா வளாகம்) அன்பு மாமனும் காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் மாணிக்கம், வல்லிபுரம், சிவலிங்கம் (இந்தியா), பூமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நவரத்தினம், காலஞ்சென்ற கமலேந்திரராசா மற்றும் புஸ்பராணி, றஞ்சித்குமார், விஜயராணி, மல்லிகாதேவி, இராகினி (கூட்டுறவு நெசவுசாலை - கோண்டாவில்), மகேந்திரராசா, உதயகுமாரி (கனடா), பிறேம்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங்கட் கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப.ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.45, 5 ஆம் ஒழுங்கை,
அரசடி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மலர்வு
17 ★ 02 ★ 1920



விண்ணில் உதிர்வு
31 ★ 03 ★ 2010

**அமரர் திருமதி பரமு நாகம்மா**

"எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன் இருக்கும்"

இல.586,
சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:0776718178(கார்த்திக்)
(40-20-27)(சு/576354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சோனியாவின் சொல் எந்தளவுக்கு ஈழத்தமிழருக்கு உதவும்........?

இலங்கை வாழ் தமிழர்களுடனேயே இந்தியா இருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் உரிமைகள், அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். நாங்கள் தமிழர்களுடன் இருப்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

லண்டனில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியாவின் தலைவியும், ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தனிப்பெரும் தலைவியுமான சோனியா காந்தி.

பிரிட்டனின் தலைநகரில், லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் கூட்டத்தில் அவர் ''மாற்றத்துக்கான முகவர்களாக பெண்கள்'' என்ற பொருளில் உரையாற்றினார். பேச்சின் இறுதியில் உலகத் தமிழர் பேரவையின் அங்கத்தவர்கள் அவரிடம் இலங்கை சம்பந்தமான பல வினாக்களைக் கேட்டனர். அவற்றுக்குப் பதில் அளிக்கையிலேயே சோனியா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் நிலைவரம் தொடர்பாக நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். நாங்கள் அந்த நாட்டின் தமிழர்களுடன் உள்ளோம் -

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் தனது அதிக அளவிலான கவலைகளை அந்நாட்டு அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளது -

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கு மேலும் தாமதம் இன்றி புனர்வாழ்வு அளிக்க வேண்டியது அவசியம் - என்ற கருத்துக் களையும் இந்தியத் தலைவி சோனியா அங்கு வெளி யிட்டார்.

இறுதிப் போரின் போது அனைத்துலகச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்-

நான் அந்த வீடியோக்களைப் பார்த்தேன். பெரிதும் கவலை அடைந்தேன் - என்று கூறியிருக்கிறார்.

இந்தியத் தலைவி சோனியா, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள், அவர்களுடன் தொடர்புடைய விவாகரங்களில் இரண்டில் ஒன்றுக்குப் பதில் அளித்திருக்கிறார். அடுத்தது குறித்த விடை பகிர மறுத்து விட்டார்.

இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். நாம் தமிழர்களுடன் இருப்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற பதில் தமிழ் மக்களுக்குச் சார்பானது.

ஈழத்து தமிழர்களின் அரசியல் உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க இந்திய அரசு செயற்படும் அல்லது பாடுபடும் என்ற தொனி அந்தப் பதிலில் தொனிக்கிறது.

போர் முடிவுற்று ஒன்றரை வருடங்கள் முடிவுறும் இந்தத் தறுவாயிலும், இலங்கை அரசிடம் தமிழர்களுக்கு தீர்வு ஒன்றை வழங்குமாறு இடித்துக்கூறும் பலம் இந்திய அரசுக்கு உண்டு என்பதனைச் சாடை மாடையாக உச்சரிக்கவேனும் முடியவில்லை என்பதே அனுபவமாக உள்ளது.

இலங்கைத் தமிழர்களிடம் இருந்து சிங்கள அரசுகளால் பறித்து எடுக்கப்பட்ட - பிடுங்கப்பட்ட- உரிமைகளை இந்நாட்டு அரசு வழங்க வேண்டும் என்று இந்தியா இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அறுத்து உறுத்துக் கூறியதாகவில்லை. அதன் ஆகப்பிந்திய நிலைப்பாடு ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

போர் முடிவுற்ற சில மாதங்களில் 13+ என்று கூறி வந்த இந்திய அமைச்சர்கள் அதனை மெதுமெதுவாக மறந்துவிட்டார்களாகக் காணப்படுகிறார்கள். ஆகப் பிந்தி கடந்த ஜனவரியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் எம்.எஸ். கிருஷ்ணா 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தீர்வு அமையும் என்ற அர்த்தப்படக் கூறிச்சென்றார்.

தமிழ் மக்கள் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் கேட்டுவருவது சமஷ்டி ஆட்சி. அதுவே சோனியா குறிப்பிடும் தமிழர்களிடம் அவர்களின் உரிமைகள் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும் என்பதன் மறைபொருள் எனக்கொள்ளலாம்.

ஆனால் பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளதைவிட ஓர் அங்குலமேனும் உயர்ந்து செல்ல முடியாது என்று இலங்கை அரசு அடம்பிடிக்கும் நிலையே தென்படுகிறது.

இந்த இலட்சணத்தில் தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்குமாறு இந்தியாவால் இலங்கை அரசுக்கு உந்துதல் கொடுக்க முடியும் என்று நினைப்பது, நம்புவது கற்பனையாகவே அமையும். சோனியா தம்மிடம் கேள்வி கேட்டவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவ்வாறு கூறியிருக்கக்கூடும்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில், இந்தியா உரத்தோ அல்லது உறுக்கியோ கூறினால், இந்நாட்டு அரசு சீனா மற்றும் பாகிஸ்தானுடன் உள்ள உறவுகளை மேலும் பலப்படுத்தும், இறுக்கமாக அணைத்துக்கொள்ளும் என்ற அச்சம் இந்திய அரசுத் தலைவர்களிடம் உண்டு.

அவ்வாறிருக்க, சோனியாவின் பிந்திய தகவலை அல்லது கருத்தை இந்தியா நிறைவேற்றும் என்று எதிர்பார்க்க முடியாது. எதற்கும் சோனியாவின் சொல் மனப்பூர்வமானதா என்பதனையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மேலும்-

இறுதிப் போரின்போது சர்வதேசச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டதான குற்றச்சாட்டுகள் குறித்து சோனியா பதில் அளிப்பார் என்று கேள்வி கேட்டவர்கள் எதிர்பார்த்திருக்கக் கூடாது.

இறுதிப்போரில் இலங்கை அரசு வென்றாக வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு இருந்த அக்கறை குறித்து அது நேரடியாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டமை, ஈடுபாடான ஒத்தாசை வழங்கியமை சம்பந்தமான இரகசியங்கள் இப்போது கசிந்து வருகின்றன.

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் இந்திய அரசு எவ்வாறு உள்ளாடும் கள்ளாடுமாகச் செயற்பட்டது என்பது பற்றிய தகவல்கள் சாடைமாடையாக வெளிவந்துகொண்டிருப்பதும் ஐ.நா அதிகாரியான விஜய் நம்பியாரின் செயற்பாடு எவ்வாறு போர் நிறுத்தத்தை தடுத்தது, தவிர்த்தது என்பன குறித்த தகவல்களும் இப்போது மெதுவாகக் கசிந்து வருகின்றன.

அவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையில், இந்தியா செயற்பட்டால் மட்டுமே இலங்கைத் தமிழர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை அதனால் பெற்றுத்தரமுடியும். இல்லையேல் வெறும் வாய்ப் பேச்சாகவும் புண்களின் துர்நாற்றத்தை புனுகு பூசி தடுக்க முயலும் முயற்சியாகவுமே முடியும்.

# ஜனாதிபதியின் பிரசார தந்திரம் அரசின் வெற்றிக்கான இரகசியம்

நேற்று 20.03.2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் விமரிசனத்திலிருந்து ஒருபகுதி இது

கடந்த வருடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல்களிலும் அவர் மீண்டும் ஒரு வெற்றியைச் சாதித்துள்ளார்.

தேர்தல் இடம்பெற்ற 234 உள்ளூராட்சி மன்றங்களில் 5 இல் நான்கு மடங்குவெற்றி அவருக்குக் கிடைத்துள்ளது. உள்ளூராட்சிமன்றங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 205 இடங்களைக் கைப்பற்றியுள்ள அதேவேளை மேலும் ஏழு சபைகள் அதற்கு சார்பாக அமைந்துள்ளன. அக் கட் சியை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 உள்ளூராட்சி மன்றங்களையும் அரசை ஆதரிக்கும் தேசிய காங்கிரஸ் (ஏ. எல்.எம். அதாவுல்லா) இரண்டு மன்றங்களையும் கைப்பற்றியுள்ளன. மேற்கொண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக பல்லேபொல பிரதேச சபையில் சுயேச்சைக் குழுவொன்றை அது ஆதரித்தது.

இதனால் அரசின் கட்டுப்பாட்டுக்குள் மொத்தம் 212 உள்ளூராட்சிமன்றங்கள் வந்துள்ளன.

பொதுத் தேர்தலைப்போல இறுதிவாக்களிப்பு மிக உயர்ந்த அளவாகக் காணப்படா விட்டாலும் எல்லா வித சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பார்க்கும் போது நிலைமை மிகமோசமாகக் கருதிவிட முடியாது. இருந் தாலும் எதிர்த்தரப்பினர் இறுதி சில மணித்தியாலங்களுக்குள் எவ்வாறு எண்ணிக்கை அதிகரித்தது என்பதில் சந்தேகம் எழுப்புகிறார்கள்.

### ஐ.தே. கவுக்கு ஏற்பட்ட தோல்வி

இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியானது இப்பொழுது மேற்காசியாவிலும் வட ஆபிரிக்க நாடு களிலும் ஆட்சி மாற்றத்தை மக்கள் கோரிவருவதற்கு ஏற்றாப்போல் இங்கேயும் நிகழும் என்று மாற்றத்தைக் கோரி நின்று மேலும் ஒரு தோல்வியைத் தழுவிக் கொண்டுவிட்டது. ருனிஸியாவில் ஏற்பட்ட மக்கள் புரட்சியில் அதிபர் செயினுதீன் பென் அலி பதவி இறக்கப்பட்டார். இப் புரட்சி எகிப்துக்குப்பரவி 30 ஆண்டுகாலம் பதவியிலிருந்துள்ள அதிபர் ஹொஸ்னி முபாரக்கை பதவிதுறக்கச் செய்தது. மக்கள் புரட்சி லிபியாவுக்கும் பரவி அங்கு மொவம்மர் கடாஃபி தமது மக்களுக்கெதிராகவே இன்று யுத்தம் நடத்திவருகின்றார்.

ஐ.நா. பாதுகாப்புசபையின் தீர்மானம் ஒன்றைய டுத்து அவர் இப்போது மேற்கு நாடுகளையும் அரபு நாடுகளையும் கோபத்துக்குள்ளாகி இருக்கிறார். இலங்கையில் அமைதி அனுசரணையாளரான நோர் வேயும் கூட இராணுவ ரீதியில் லிபியாவுக்கு எதிராக ஆதரவளித்து வருகிறது. பாஹ்ரேன் மற்றும் யேமன் ஆகியவற்றிலும் அவ்வாறான எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. பொது மக்கள் அனேகர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருகிறார்கள். மன்னர் ஆட்சி நடைபெறும் சவூதி அரேபியாவிலும் எதிர்ப்பு அலைகள் வீசத் தொடங்கியுள்ளன.

கடந்த வாரம் இடம் பெற்ற உள்ளூராட்சி தேர் தலில் ஐ.தே.க.வால் ஒன்பது மன்றங்களை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்தது. தன் வசமிருந்த பல மன்றங்களை அது ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டணியிடம் கைநழுவ விட்டுவிட்டது.

எல்லா வித சந்தர்ப்பங்களிலும் எல்லா கட்சிகளும் செய்வதுபோல் அக்கட்சி எங்கெங்கே அதிக செல்வாக்கை பெற்றுள்ளது என்பதை ஆராய்வதில் இப்போது ஈடுபட்டுள்ளது.

# வடக்கின் மக்கள் தீர்ப்பை புறந்தள்ளி விடமுடியாது

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட காலத்திலும் அதற்குப் பிறகும் மோதல்கள் இடம்பெற்றமைக்கான தகவல்கள் வந்துகொண்டே இருந்துள்ளன. முக்கியமான சம்பவம் என்னவென்றால் தங்களுக் குள்ளேயே கட்சி உறுப்பினர்கள் போட்டியிட்டு கொண்டமைதான். முன்னைய உள்ளூராட்சி தேர்தல்களோடு ஒப்பிடும்போது இம் முறை உள்ளூராட்சி தேர்தல்கள் மிக சுமுகமான சூழ் நிலையில் நடந்து முடிந்துள்ளன. ஆனால் தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் நடைபெற்ற அன்றும் சில கட்சிகள் நடந்து கொண்ட விதமும் அரச வளங்கள் பயன்படுத்தப்பட்ட முறையும் கவலையளிப்பதாக இருந்தன.

தேர்தல் ஆணையாளர் திசாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை கண்காணிபு செய்த அமைப் புக்களும், சில எதிர்க்கட்சிகளும் கூட திஸாநாயக் காவைக் கடுமையாக விமர்சித்துள்ளன. அவர் வெளியிடும் முனகல்களும் கடும் கவலைகளும் நாட்டில் பெரும் பகிடியாக மாறிவிட்டன. அவர் சொல்வது என்னவென்றால் தேர்தல்கள் வெற்றி கரமாக நடைபெற்றுள்ளன என்பதற்கான சான்றிதழ் வழங்குவதாகவே உள்ளது என்பதே.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தேர்தல் பற்றி கருத்து தெரிவிக்கையில், உணவுப்பொருள் விலையேற்றம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவை பற்றி யெல்லாம் எதிர்க்கட்சிகள் வழமையாக கிளப்பிவரும் பிரச்சினைகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள். இடம்பெற்று வரும் அபிவிருத்திகளை கிராமிய மக்கள் அவதானித் திருக்கிறார்கள். வீதிகள் நிர்மாணிக் கப்படுகின்றன. வேறு உள்கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. விளைவுகள் தெளிவாகத் தெரிகின்றன. மேலும் அதிக அபிவிருத்தி பணிகளை மக்கள் எதிர்பார்கிறார்கள் என்றார்.

### ஜே.வி.பி.யை மக்கள் நிராகரித்தனர்.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை கிராமிய மக்களை அவர்களால் சென்றடைய முடியவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கியுள்ள தலைமைத்து வத்தை அதனால் வழங்க முடிய வில்லை. ஜே.வி. பியை பொறுத்த வரை அவர்களை மக்கள் முழுமையாக நிராகரித்து விட்டார்கள். சிறுவர்கள் சட்டவிரோத பணிகளில் துஷ்பிரயோகம் செய்யப்படுவார்கள் என்று திஸ்ஸமாரகமவில் ஜனாதிபதி விடுத்த எச்சரிக்கையை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அதனால் தான் அந்த சபையைக் கூட ஜே.வி.பியால் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. தெபராவ என்ற ஊருக்கு ஜனாதிபதி விஜயம் செய்ததையடுத்து சிறுவர்கள் ஜே.வி.பியால் தவறாக்கப் பயன்படுத்தப்படுகிறார்கள். என்ற கருத்து எழுந்திருந்தது. ஒரு பாடசாலைக்கு ஜனாதிபதி சென்றபோது ஆசிரியர்களோ மாணவர்களோ அவரை வரவேற்றக வந்திருக்க வில்லை. உண்மையில் ஜனாதிப திக்கு இது ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. இதற்குமாறாக வெறொரு பாடசாலைக்கு ஜனாதிபதி சென்றபோது அங்கிருந்த பாடாசலை அதிபர் பூக்கொத்துகள் மாலைகளுடன் ஜனாதிபதியை வரவேற்றார். பாடாசலை மாணவர்கள் உற்சாகமாக வரவேற்பளித்தார்கள் முதல்

**தொகுப்பு: கோகுலன்**

பாடா சலையின் உதவி அதிபர் ஜே.வி.பியின் சேர்ந்தவராய் இருந்துள்ளார் அதனால் அப்பாடசாலை பிள்ளை களுக்கு ஜே.வி.பியின் தத்துவங்கள் போதிக்கப்படுவதாக அரசவட்டாரங்களில் சந்தேகம் எழுந்திருந்தது.

### ஜனாதிபதி அளித்த தலைமை

ஜனாதிபதி ராஜபக்ஷ கிராமமக்களுக்கும், தெருக்

(28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுக்கி விழுந்து மூதாட்டி மரணம்

கைதடி, மார்ச் 21

நிலத்தில் தடுக்கி வீழ்ந்து மயங்கிய நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை கைதடி இராஜபுரியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி செல்லன் பொன்னி (வயது - 75) என்ற மூதாட்டியே மரணமடைந்தவர் ஆவார்.

(ம-288)

## மதுவரித் திணைக்கள யாழ். அலுவலகம் ரூ.54 லட்சத்தை வசூல் செய்துள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 21

மதுவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த வருடம் மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கியதன் மூலம் 54 லட்சத்து 52 ஆயிரம் ரூபா திணைக்களத்துக்குக் கிடைத்ததாக யாழ்ப்பாண நிலைய அத்தியட்சகர் எஸ்.கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களம் ஐந்து நிலையங்களைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சங்கானை, மல்லாகம், சாவகச்சேரி என்பனவே அந்த ஐந்து நிலையங்கள் ஆகும்.

கடந்த வருடம் யாழ்ப்பாண நிலையத்துக்குள் அனுமதிப்பத்திரம் வழங்கியதன் மூலம் 54 லட்சத்து 52 ஆயிரத்து 612 ரூபா பெறப்பட்டுள்ளது.

கள் விற்பனை மற்றும் போத்தலில் அடைத்தலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கியதன் மூலம் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 330 ரூபாவும் மரத்திலிருந்து கள் சீவுவதற்கு என்று 45 ஆயிரத்து 190 ரூபாவும் கிடைத்துள்ளன.

மதுபான விற்பனைக்கு என்று 22 வகையான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. எனினும் யாழ். மாவட்டத்தில் சுமார் ஐந்து வகையாக அனுமதிப் பத்திரங்களே அதிகம் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாண நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் 27 மதுபான விற்பனை நிலையங்கள் அனுமதி பெற்று இயங்கி வருகின்றன- என்றார்.

(ம-14)

## மின்விசிறிகள் அன்பளிப்பு

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ் வார் ஆலய அறங்காவலர் சபை 20 மின் விசிறிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், செயலாளர் சபா.ரவீந்திரன் ஆகியோர் இந்த மின் விசிறிகளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் கே.நந்தகுமாரிடம் கையளித்தனர்.

அன்பளிப்புச் செய்யப்பட்ட மின்விசிறிகள் வைத்தியசாலை விடுதிகள் மற்றும் ஏனைய பிரிவுகளின் தேவைக்கேற்ப பொருத்தி பாவனைக்குட்படுத்தப்படவுள்ளன. (ம-236)

## பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்து ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளின் கட்டட அபிவிருத்தி குறித்து வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கல்வித் துறைசார் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் யாழ். பொது நூலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட ஒப்பந்தகாரர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டடங்களின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தல், 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய அபிவிருத்திப் பணிகள் குறித்தும் இதில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் கேட்டுள்ளார். (ம-9)

### வெற்றியாளர்...



பருத்தித்துறை பிரதேச செயலக மகளிர் தின விழாவின்போது நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர். (319)

## பண்டத்தரிப்பு தவறணைக்கு முன்னால் இளைஞர்கள் அட்டகாசம்

### பொதுமக்கள் பாடு திண்டாட்டம்

பண்டத்தரிப்பு, மார்ச் 21

பண்டத்தரிப்பு-சண்டிலிப்பாய் வீதியில் இரவு நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள், இளைஞர்களின் சேஷ்டைக்கு ஆட்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர் .

பண்டத்தரிப்பு தவறணைக்கு முன்பாக இரவுநேரங்களில் கூடும் இளைஞர்கள் மது போதையில் அந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதுடன் தவறான வார்த்தைகளால் திட்டியும் வருகின்றனர்.

ஏற்கனவே மேற்படி வீதியில் பண்டத்தரிப்பு சந்தி, முல்லையடிச்சந்தி, தியான இல்லச் சந்தி ஆகிய இடங்களில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் இளைஞர்களின் இந்தச் சேஷ்டை குறையவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமையினால் அவசர தேவைகளுக்கு இரவு நேரங்களில் பண்டத்தரிப்பு கடைத்தொகுதிகளுக்கு செல்ல முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ)

## ஆனைக்கோட்டை மாலை நேரச்சந்தை தற்போது கடற்கரைப் பகுதிக்கு மாற்றம்

சங்கானை, மார்ச் 21

ஆனைக்கோட்டைச் சந்தியில் பிரதர்ன வீதியோரத்தில் பல மாதங்களாக இயங்கி வந்த மாலை நேரச் சந்தை பொலிஸார் எடுத்த நடவடிக்கையை அடுத்து இரண்டு கிலோமீற்றர் தூரமுள்ள கடற்கரைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால் பிரதான வீதியில் ஏற்பட்டுவந்த போக்குவரத்து நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டது.

ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் பல இடங்களில் மாறி மாறி இயங்கி வந்த மாலை நேரச் சந்தை அப்பகுதி மக்கள் காட்டிய எதிர்ப்பைத் தொடர்ந்து ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் பிரதான வீதியோரத்தில் பல மாதங்களாக இயங்கி வந்தது.

மேற்படி சந்தை வீதியோரத்தில் இயங்கி வருவதால் போக்குவரத்துக்கு ஏற்பட்டுவரும் இடையூறு குறித்து பொதுமக்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பாவனையாளர்களின் நன்மை கருதி சந்தையைப் பொருத்தமான இடத்துக்கு மாற்றுவதற்குக் காணியைத் தந்துதவுமாறு செயலாளர் பொதுமக்களை கேட்டுள்ளார்.

காணி வழங்க எவரும் முன் வராத நிலையில் மக்கள் நடமாட்டத்துக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருந்த மேற்படி சந்தை பொலிஸார் எடுத்த திடீர் நடவடிக்கையைத் தொடர்ந்து காக்கைதீவு கடற்கரைக்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் இயங்கிவந்த மேற்படி சந்தை மானிப்பாய் - கல்லுண்டாய் வீதிக்கு மாற்றப்பட்டதால் இந்தப் பகுதி மக்கள், கடமை புரிந்து வீட்டுக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் கடலுணவை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-115)

## பருத்தித்துறை - தொண்டமானாறு அதிகாலை பேருந்து சேவை ஆரம்பம்

வடமராட்சி, மார்ச் 21

பருத்தித்துறைக்கு தொண்டமனாற்றிலிருந்து அதிகாலை 3.30 மணிக்கு பேருந்து சேவை பருத்தித்துறை இ.போ.சவினால் நடத்தப்பட்டு வருகிறது.

பருத்தித்துறைபேருந்து நிலையத்தில் இருந்து வெளிமாவடங்களுக்கு பயணத்தை மேற்கொள்ளும் வடமராட்சி கரையோரப் பகுதி மக்களின் வசதி கருதியே பேருந்து சேவை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உடுப்பிட்டி,தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் திருகோணமலை, வவுனியா, முல்லைத் தீவு பேன்ற வெளி மாவட்டங்களுக்கு காலை வேளைகளில் பருத்தித்துறையில் இருந்து பயணத்தை மேற்கொள்ள வசதியாகவே இச்சேவை தொண்டமனாற்றில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை இ. போ.ச முகாமையாளர் கே.குலபாலசெல்வம் தெரிவித்தார்.

(எ-236)

## வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குப் புதிய மணிக்கூட்டுக் கோபுரம்

வடமராட்சி, மார்ச் 21

வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு 41 அடி உயரம் கொண்ட புதிய மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

நேற்று இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், செயலாளர் சபா ரவீந்திரன் ஆகியோர் அடிக்கல் நட்டனர்.

புதிதாக நிர்மாணிக்கப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்படும் மணியின் ஓசை கோயிலில் இருந்து மூன்று மைல் சுற்றாடலுக்கு அப்பால் கேட்கக் கூடியதாக இருக்கும் என அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர்.

இதற்கென லண்டனில் வாழும் வல்லிபுர ஆழ்வார் பக்தர் ஒருவர் 10 லட்சம் ரூபாவை வழங்க முன் வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி வீழ்ச்சி; கள்ளின் பாவனை அதிகரித்துச் செல்கிறது

## மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தற்போது யாழ். மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் நுகர்வு கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சியடைந்துள்ளமை நல்லதொரு மாற்றம் என்கிறார் யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சோதிநாதன்.

கசிப்பு நுகர்வு வீழ்ச்சியடைந்து செல்கின்ற அதேவேளை கள்ளு நுகர்வு அதிகரித்துச் செல்கிறது. இது குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களம் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், சங்கானை, சாவகச்சேரி ஆகிய ஐந்து நிலையங்களை அது கொண்டுள்ளது.

இதில் யாழ்ப்பாண நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் பாவனை வீழ்ச்சியடைந்துள்ளமை புள்ளிவிவரத் தரவுகள் மூலம் உறுதி செய்ய முடிகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு கசிப்பு உற்பத்தி மற்றும் பாவனை தொடர்பாக 277 பேரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினோம். கடந்த வருடம் 174பேரை நீதிமன்றில் ஆஜர்படுத்தினோம். இந்த வருடம் இதுவரையும் கசிப்புத் தொடர்பாக எந்த முறைப்பாடும் எமக்குக் கிடைக்கவில்லை. இது நல்ல தொரு மாற்றமாகும். உயிர்கொல்லியான கசிப்பை முற்றாக ஒழிப்பதற்குத் தொடர்புபட்ட திணைக்களங்களுடன் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதன் விளைவாக யாழ். மாவட்டத்தில் 65 சதவீதமான கசிப்புப் பாவனை 35 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கசிப்புப் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் கசிப்புப் பாவனை குறைவடைந்து வருகின்ற அதேவேளை கள்ளுப் பாவனை அதிகரித்து வருகிறது. மீளக்குடியமர்ந்துள்ள மக்களிடையே காணப்படும் உளவியல் ரீதியான தாக்கமே குடிப்பழக்கத்துக்குக் காரணமாகவுள்ளது. குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களிடம் ஏற்பட்டுள்ள உளவியல் ரீதியான தாக்கம் குடிப்பழக்கத்துக்குக் காரணமாக இருக்கிறது- என்றார்.

(த-14)

## விதிமுறைகளை மீறியோரிடம் தண்டப் பணம் அறவீடு

நெல்லியடிப் பகுதியில் வீதிக் கண்காணிப்புப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையில் 4 பேர் சிக்கினர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர்களே போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.வழக்கினை விசாரித்த நீதிவான் நான்கு பேருக்கும் 15 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார்.

மோட்டார் சாரதி அனு மதிப்பத்திரம் இன்றியும் அவதானம் இன்றி மோட்டார் சைக்கிளினைச் செலுத்தியமையினாலும் பக்கக் கண்ணாடி இல்லது வாகனம் செலுத்தியதுக்காகவுமே தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-319)

## வல்லைப் பாலத்துடன் மோதியது ஓட்டோ;இருவர் காயம்

நெல்லியடி,மார்ச்21

வல்லைப் பாலத்துடன் ஓட்டோ ஒன்று மோதியதில் இருவர் காயமடைந்து அச்சுவேலி பிரதேச அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஓட்டோ சாரதியான நல்லூரைச் சேர்ந்த இ.சுதர்சன் (வயது 22 ), திருநெல்வேலியைச் சேர்ந்த க.ராஜேஸ்வரன் (வயது 55) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி நோக்கி ஓட்டோ சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக வல்லைப்பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-236)

## சாரணியர்கள் பேரணிக்கு பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்21

கொழும்பில் அடுத்த மாதம் 9ஆம் திகதி நடை பெறவுள்ள பெண் சாரணியர்களின் பேரணியில் பங்கு கொள்ள விரும்புபவர்களைப் பதிவுசெய்யுமாறு சாரணியர் சங்கத்தின் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி என்.தர்ம குலசிங்கம் கேட்டுள்ளார்.

நாளை மறுதினம் புதன்கிழமைக்குமுன் பதிவுகளை மேற்கொள்றுமாறு அவர் சாரணியர்களைக் கேட்டுள்ளார். (ஐ)

## வீதியுலா...



இணுவையம்பதி சிவகாமி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவின்போது அம்பாள் சித்திரத்தேரில் திருவீதி உலா வருகிறார்.

## பயனாளிகள் 21 பேருக்கு சுயதொழில் உதவித்தொகை

வடமராட்சி, மார்ச் 21

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஊடாக சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த 21 பயனாளிகளுக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுயதொழில் உதவித் தொகைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

உதவிகள் கிடைத்துள்ள பயனாளிகள் விவரம் வருமாறு:-

த.கமலாதேவி (பருத்தித் துறை), ர.யோகேஸ்வரி (பருத்தித் துறை), ம.ஜானகி (பருத்தித் துறை), இ.சின்னமணி (பருத்தித்துறை), கி.செல்வரத்தினம் (புலோலி வடகிழக்கு), பா.சாந்தா தேவி (சுப்பர்மடம், பருத்தித் துறை), அ.மேரிதிரேசா (4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித் துறை), தி.ஜெயந்தி (பன்னைக் கட்டை, பருத்தித்துறை), க.கமலா தேவி (பெரிய கடற்கரை, தொண்டமனாறு), சு.இலங்கேஸ்வரி (கற்கோவளம்), ர.சுசிலாதேவி (இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித் துறை), சு.பேரின்ப ராணி மயிலியதனை, கெருடாவில், வே.கமலாதேவி (வட்டுவனை, புலோலி தென்மேற்கு), கு.மகேஸ்வரி (அயிட்டிப் புலம், அல்வாய் மேற்கு), வி.பழனி வேல் (ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை), செ.லீலாவதி (செட்டியூர், தொண்டமனாறு), றொ.செல்வம்கொடி (நெடியகாடு, வல்வெட்டித்துறை), வி.சுமதி (சவனாய், புலோலி வடக்கு), தெ.பரமேஸ்வரி (வத்தனை, புலோலிமேற்கு), எஸ்.லூத்துமலர் (தேவமாதா கோயிலடி, பருத்தித்துறை), ச.செல்வமலர் (ஓடக்கரை, பருத்தித்துறை தெற்கு).

(த-236)

## வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் எதிர்வரும் 25 வடக்குக்கு வருகிறார்

சண்டிலிப்பாய், மார்ச் 21

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்குக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடம்பெறும் வீட்டுத்திட்ட நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள அமைச்சர் அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லை நடவுள்ளார்.

மாங்குளத்தில் ஏ-9 வீதியில் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கான அலுவலகத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

வவுனியா, செட்டிகுளத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்படவுள்ள அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லையும் அன்றைய தினம் நட்டு வைப்பார்.

இந்த வீட்டுத்திட்டம் சபையினால் வழங்கப்படும் 5 லட்சம் ரூபா கடன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்துக்கு வரும் அமைச்சர் அறிவியல் நகரில் பல மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியடையும் நிலையில் உள்ள 50 வீட்டுத்திட்டத்தையும் திறந்து வைத்து வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளார்.

இந்த வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் மூன்றரை லட்சம் ரூபா நிதி மேற்படி சபையினால் படிப்படியாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் பின்னர் வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் ஒளிவீசுவது எப்போது?

மீள்குடியமர்ந்த வன்னி மக்கள் இன்று தமது சிறார்களின் கல்வி தொடர்பாக அதிக அக்கறை காட்டுவதைக் காணமுடிகின்றது.

கொடிய யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து, பல இடப்பெயர்வுகளை எதிர்கொண்டு, உறவுகள் பலரைத் தொலைத்து பதுங்கு குழிகளுக்குள்ளும், வசதிகளற்ற முகாம்களிலும் தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட இந்த மக்கள் தமது பிள்ளைகளின் கல்வியைத் தொலைத்துவிட ஒருபோதும் தயாராக இருந்ததில்லை.

ஆனால் இவர்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும் சிறந்த கல்விக்கான ஏது நிலைகள் வன்னியில் இன்னமும் முகிழ்விடவில்லை என்பதுதான் யதார்த்தம். யுத்தத்தின் போது இங்குள்ள அனேக பாடசாலைகள் தரைமட்டமாக்கப்பட்டன. இவற்றுடன் சேர்த்து பாடசாலைக்குரிய ஏனைய பௌதீக வளங்களும் இல்லாதொழிக்கப்பட்டன.

இந்தப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களில் பலர் இப்போது உயிருடன் இல்லை. ஆசிரியர்கள் பலருக்கும் இதே நிலைதான். இவர்களுள் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். பல சிறார்கள் தமது தாய் தந்தையரை இழந்து ஏதிலிகளாக உலவுகின்றனர்.

இவர்கள் இப்போதும் தமது கடந்தகால நினைவுகளில் மூழ்கியிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் கூரையில்லாத, சுவர் இல்லாத சிதைந்துபோன பாடசாலைக் கட்டடங்களிலும், இயற்கை தந்த மரநிழல்களிலும் இன்னும்

> **மீள்குடியமர்ந்த இந்த வன்னி மக்கள் தமது சிறார்களின் கல்வி தொடர்பாக அதிக அக்கறை காட்டுவதைக் காணமுடிகின்றது. ஆனாலும் இந்த மக்கள் குடியமர்ந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும் சிறந்த கல்விக்கான ஏது நிலைகள் வன்னியில் இன்னமும் முகிழ்விடவில்லை என்பது தான் யதார்த்தம்.**

பல இடங்களில் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இங்கே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் இல்லை. தளபாட வசதிகளும் பற்றாக் குறையாகவே உள்ளன. மாணவர்கள் தரையிலிருந்து கற்க வேண்டிய அவலநிலை. இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஆளணிப் பற்றாக்குறை பல பாடசாலைகளின் செயற்பாடுகளை முடக்கி வைத்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் மூலமாக அறிய முடிகின்றது.

வன்னிப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிவோரில் அனேகமானவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தாம் கற்பிக்கும் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருந்த விடுதிகளில் தங்கியே தமது கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரு சிலர் வேறு இடங்களில் தங்கி வந்தனர். அப்போது இவர்கள் தங்குவதற்குரிய வீட்டு வசதிகளும் நிறையவே காணப்பட்டன.

ஆனால், நிலைமை இப்போது அது போன்று இல்லை. இவர்கள் தங்கியிருந்த விடுதிகள் இப்போது இல்லை. வீடுகளும் அழிந்ததால் அவற்றிலும் தங்க முடியாத நிலை. முல்லைத்தீவு மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் தாமும் ஏனைய பல ஆசிரியர்களும் ஒரு வீட்டில் தங்கியிருப்பதாகவும் ஆனால் அந்த வீட்டில் மலசல கூட வசதிகள் இல்லை என்றும் கூறினார். தாம் மிகுந்த சிரமத்தின் மத்தியிலே தமது பணிகளைச் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தகைய ஆசிரியர்களிடமிருந்து நாம் எவ்வாறு சிறந்த சேவையை எதிர்பார்க்க முடியும்?

மீள்குடியமர்ந்த இந்த மக்களின் உணவு, உறைவிடம், சுகாதாரம் ஆகியனவற்றுக்கு எத்தகைய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதோ அதைவிட அதிகம் கல்விக்கு வழங்கப்பட வேண்டும். அப்போது தான் சிறந்த ஆரோக்கியமான புத்திஜீவிகள் அடங்கிய எதிர்கால சமுதாயத்தை நாம் எதிர்பார்க்க முடியும்.

அழிந்து போன பாடசாலைக் கட்டடங்கள் யாவும் புனரமைக்கப்பட்டுத் தேவையான பௌதீக வளங்கள் கிடைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆளணியில் எந்த வித தொய்வும் ஏற்படாது முழுமையான முறையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

கிராமப்புறப் பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுகின்றனவா என்பதை உயர்கல்வி அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். மாணவர்களின் சீருடைகள், புத்தகங்கள் என்பன உரிய காலத்தில் விநியோகம் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக யுத்தம் தந்த வடுக்களால் மனநிலையில் பிறழ்வு கண்ட மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களை ஆற்றுகைப்படுத்த வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை தோன்றும், கல்வியிலும் நாட்டம் செல்லும்.

பல அரச சார்பற்ற நிறுவனங்களும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் வாதிகள் எனப் பலரும் வன்னிப் பாடசாலைகளுக்கு வருகைதந்து பல்வேறு உதவிகள் புரிவதைக் காண்கின்றோம். உண்மையில் இதுவொரு சிறந்த சேவையாகும். உதவி செய்பவர்களின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம்.

ஆனால் நோக்கத்தினூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடு நல்லதாக நிறைவேற வேண்டுமென்பதே முக்கியமானதாகும். அரசும் தனது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிட முடியாது. இந்த மக்களின் இன்றைய நிலைமைக்கு அரசும்

**ராஜராஜன்**

ஒரு வகையில் முக்கிய பங்காளி தான். எனவே இவர்களின் கண்ணீரைத் துடைத்தெடுப்பதில் தனக்குரிய பாரிய பொறுப்பினை அரசினால் தட்டிக்கழித்துவிட முடியாது. அதிலும் கல்வியைப் பொறுத்த வரை மெத்தனமாக இருக்காது சகல வகையிலும் உதவிகளை வழங்கிப் பாதிக்கப்பட்ட மக்களைத் தூக்கி நிறுத்துவதே இன்றைய தேவை.

(தொடரும்)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No1 புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 24.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | -0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | -0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | -0771392593 |
| துர்க்கா பாம், சுன்னாகம் | -0779346599 |

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

## பரிதவிப்பில் பத்தாண்டுகள்

அமரர் செல்வரட்ணம்
சுதர்சன் (சுதன்)



மகிழ்வில்: 23.06.1980
துயரில்: 21.03.2001

"நீயில்லாத வாழ்வில்
நிம்மதி ஏது நம்மில்?"

கண்ணீரில் கரையும்:
அப்பா, மம்மி,
சகோதரர்: உமா, சர்மி, சுசி, நிது.

"சுதன் அகம்",
விக்னேஸ்வரா வீதி,
சங்கானை.

## விற்பனைக்கு

4 கலர் றைபோபி offset machine விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 2940269, 0772359155

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1278 சிகப்பு

கும்பம் 13 37 52 53 18-03-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 185,432 | 20/- | 3,708,640/- |
| 2 இலக்கங்கள் | 16,985 | 40/- | 679,400/- |
| 1 இல. + லக்கினம் | 16,745 | 60/- | 1,004,700/- |
| 2 இல. + லக்கினம் | 1,573 | 200/- | 314,600/- |
| 3 இலக்கங்கள் | 464 | 1000/- | 464,000/- |
| 3 இல. + லக்கினம் | 37 | 10,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,941,340/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 498 | | 547,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 221,737 | | 9,488,840/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 05 15 22 45

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 495 | 500/- | 247,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 498 | | 547,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-

## நீங்காத ஓராண்டு நினைவலைகள்

செல்லப்பா
சிவானந்தன்



தோற்றம்
21.07.1948
மறைவு
31.03.2010

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
ஆதவன் போல் பிரகாசித்து
அவசரமாய் நீங்கள் மறைந்ததெங்கே
ஆண்டு ஒன்று ஓடி விட்டன
அண்ணா.... உங்கள் நினைவுகள்
என்றும் ஆறவில்லை என் மனதில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவா கோழிப்பண்ணை,
மான்ஸ் பாடசாலை வீதி,
உடுவில்.

செல்லப்பா- செல்வநாயகி
(தங்கை)

(49,25,26)

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய No-1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.03.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ றாஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

T.P.No: 0212222867,
0776090926.

## இடமாற்றம்

வர்த்தக உலகில் வைர ஏணியாகத் திகழும் மணிக்குரல் விளம்பர சேவை தற்போது இல.25, பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணையில் அமைந்துள்ளது. வர்த்தக விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், ஒலி, ஒளி விளம்பரங்கள் மற்றும் உதைபந்து, கரபந்து, பற்மின்ரன், றக்கற்ஸ் சீரமைத்திடவும், சாரங்கா இசைக்குழுவை ஒப்பந்தம் செய்திடவும்.

தொடர்புக்கு:
அறிவிப்பாளர், V.S.சற்குணன்,
25, பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

T.P: 0212227535, 0777158476.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்டப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியுடன் நேரில் சந்திப்பு

முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பிரதிநிதிகள் குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்து எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவர்கள் மக்களின் சுதந்திரமான ஆலய வழிபாடு, தற்போதைய இராணுவக் கெடுபிடிகள், தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம், மீனவர் பிரச்சினை, விவசாயிகள், வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், வீதிகளின் புனரமைப்பு, சுகாதாரம், முல்லைத்தீவுக்கான புதிய கல்வி வலயம் ஆகியன தொடர்பாக ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினர்.

இவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த ஜனாதிபதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா ஆகியோருடன் தாம் இந்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி ஆவண செய்வதாக உறுதியளித்தார்.

மேலும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் தங்கி இருப்பதாகவும், ஆலயங்கள் மற்றும் மயானங்களில் மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இந்தக் குழுவினர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் எடுத்துக் கூறினர். அமைச்சர் இவை தொடர்பாக ஒரு வாரத்தினுள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி வழங்கினார்.

இந்த மக்கள் பிரதிநிதிகள் குழுவில் டாக்டர் ஜெயகுலராஜா, விரிவுரையாளர் ரவீந்திரன், டாக்டர் அகிலன், வற்றாப்பளை அம்மன் ஆலய அறங்காவல் சபையினர், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் அறங்காவல் சபையினர், ப.நோ.கூ. சங்கப் பிரதிநிதியாகிய மனோகரலிங்கம், தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாகிய எஸ்.சுபநேசன், வர்த்தக சங்கம், மீனவ சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(க-500)

## புதிய கட்டடம்

மன்னார் மாவட்டச் செயலகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2011 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் 3 கட்டடங்களை அமைக்கவுள்ளது.

இரண்டாம் நிலை அலுவலர்களுக்கான விடுதி, பதவி நிலை அலுவலர்களுக்கான விடுதி, சுற்றுலா விடுதி என்பன 27 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன. இம் மாதம் 30 ஆம் திகதி வரையும் இதற்குரிய கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 023 2222839, 023 2222 232 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெறமுடியுமென அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (க-121)

## புதிய தேவாலயக் கட்டடங்கள்

வடமராட்சி, மார்ச் 21

கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்து அழிந்த வன்னிப் பிரதேசத்தில் இருந்த மெதடிஸ்த தேவாலயங்கள் புதிதாகக் கட்டப்படவுள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன், ஆனைவிழுந்தான், முட்கொம்பன், கண்ணகிபுரம், பரந்தன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி ஆகிய இடங்களில் அமைந்திருந்த தேவாலயங்கள் அழிவடைந்துள்ளமையால் இவை புதிதாகக் கட்டப்படவுள்ளன.

இந்தத் தேவாலயங்களைக் கட்டுவதற்கென பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு. சி. கே. தங்கராசா தலைமையிலான ஒரு குழுவும், முன்னாள் சேகர முகாமைக்குரு அருட்திரு. என். அருள்நாதன் தலைமையிலான மற்றொரு குழுவும் அடிக்கற்களை நாட்டிவைத்தன.

தேவாலயங்களுடன் புதிதாகக் குருமனைகளும் கட்டப்படவுள்ளன. (க-236)

## நினைவுப் பரிசில்...



ஒன்று கூடல்: கிளிநொச்சி வேரவில் இந்து மகாவித்தியாலய உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வின்போது பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ந.பன்னீர்ச் செல்வத்துக்கு மாணவி ஒருவர் நினைவுப் பரிசில் வழங்குகிறார். அருகில் கிளிநொச்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். முருகவேள் அமர்ந்திருக்கிறார். (21)

## சில்லுக்குக் காற்றடித்தவர் சம்பவ இடத்தில் பலி!

முல்லைத்தீவு, மார்ச் 21

உழவு இயந்திரத்தின் சில்லுக்குக் காற்றடித்தவர் 'றிம்' கழன்று தாக்கியதில் சம்பவ இடத்திலேயே பலியான சம்வம் அண்மையில் முள்ளியவளையில் நிகழ்ந்துள்ளது.

முள்ளியவளையைச் சேர்ந்த 65 வயது நிரம்பிய ஐந்து பிள்ளைகளின் தந்தையான, நீண்டகாலமாகக் சைக்கிள் கடை நடத்தும் நற்குணம் சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

இவர் காற்றுப்போன உழவு இயந்திரச் சில்லைக் கழற்றி ஒட்டிய பின்னர் காற்றினை அடித்துக்கொண்டிருந்தபோது சரியாகப் போடப்படாத குட்டி 'றிம்' கழன்று வேகமாகச் சென்று அவரது தலை ஓட்டைப் பிளந்ததால் இந்தக் கோரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மேலும் இவரது தலையைத் தாக்கிய குட்டி 'றிம்' வேகம் தணியாது கடையின் கூரைச் சீற்றினையும் உடைத்துக்கொண்டு வெளியே சென்றுள்ளதாகச் சம்வத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (க-500)

# முல்லைத்தீவில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் கட்டுமானங்கள்

முல்லைத்தீவு,மார்ச் 21

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கு மாகாண சபை ஊடாக 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் பல கட்டுமானங்களை முல்லைத்தீவில் மேற்கொள்ளவுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் நெத்தலியாறு பொதுநோக்கு மண்டபம் 2 மில்லியன் ரூபா செலவில் மீளக் கட்டப்படவுள்ளது.

அத்துடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் செல்வபுரம் பொதுநோக்கு மண்டபம் இரண்டரை மில்லியன் ரூபா செலவிலும் முல்லைத்தீவு நகரத்தில் பொது நூலக கட்டடம் 9 மில்லியன் ரூபா செலவிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் மிருக வைத்தியர் அலுவலகம் 7 மில்லியன் ரூபா செலவிலும் மீள் கட்டுமானம் செய்யப்பட உள்ளன.

அத்துடன், விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 7 கிளைகள் 11 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இதற்குரிய கேள்விப் பத்திரங்களை இம்மாதம் 25 ஆம் திகதிவரை சமர்ப்பிக்க முடியுமென அறிவித்துள்ளார்.

இது பற்றிய மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு 'நிக்கொட்' பிரதித்திட்டப் பணிப்பாளரின் வவுனியா அலுவக 024-222 2589 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது necord va @ yahoo .com எனும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

# பெரும் விதைநெல் தட்டுப்பாட்டினால் அலைந்து திரியும் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் வன்னி விவசாயிகள்

முல்லைத்தீவு, மார்ச் 21

இம் முறை சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவிருக்கும் வன்னி விவசாயிகள் பெரும் விதைநெல் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் மீள்குடியமர்ந்த மக்கள் கடந்த பெரும்போக நெற் செய்கையிலேயே முதன் முதலாக ஈடுபட்டனர். பெரு மழை காரணமாக நெற்பயிர்கள் பெரும் அழிவைச் சந்தித்தன. விவசாயிகளும் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் சிறுபோக நெற்செய்கைக்கான அறிவுறுத்தல்களும் வெளியாகியுள்ளன.

இம் முறை அனைத்து வன்னி மாவட்டக் குளங்களிலும் போதியளவு நீர் காணப்படுகின்றது. இதனால் அதிக ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப் படவிருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தளவில் முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழ் 2000 ஏக்கரிலும், கற்சிலைமடு பெரிய குளத்தின் கீழ் 437 ஏக்கரிலும் நெற் செய்கையினை மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதனால் பெரும் போகத்தில் நஷ்டம் அடைந்த விவசாயிகள் சிறுபோகத்திலாவது இழந்ததை மீட்கலாமென்ற நம்பிக்கையில் உள்ளனர்.

ஆனால் விதை நெல் தட்டுப்பாட்டினால் இவர்கள் மனச்சோர்வு அடைந்துள்ளனர். தற்போது ஒரு மூடை விதை நெல் 3ஆயிரம் ரூபாவாக விலைபோகின்றது. அதையும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலேயே பெறமுடிகின்றது. இம்முறை சிறுபோகத்தின் போது மூன்று தொடக்கம் மூன்றரை மாத வயதுள்ள நெல்லினங்களையே பயிரிடலாமென்ற கட்டுப்பாடு இருப்பதனால் விதை நெல்லைப் பெறுவதில் விவசாயிகள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் விவசாய திணைக்களம் விதை நெல்லைத் வழங்க முடியாதெனக் கைவிரித்துள்ளதால் நிலைமை மேலும் மேசமாகியுள்ளது. மேலும் பெரும் போக உழவு கூலி இன்னமும் வழங்கப்படாத நிலையில் சிறுபோக உழவு கூலியில் பாதியளவைக் கமநல சேவை நிலையங்களிலுள்ள உழவு இயந்திரங்களைப் பாவிப்போர் செலுத்தினால் போதுமென்றும் மீதியை அறுவடையின் போது செலுத்த வேண்டுமெனவும் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளவை. ஆனால் விதை நெல் இல்லாத நிலையில் இந்த அறிவிப்புக்கள் தமக்கு மகிழ்ச்சியளிக்கவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது நிலையைக் கருத்தில் கொண்டு கமநல சேவை நிலையங்கள் விதை நெல்லைப் பெற்று நியாயமான விலையில் தமக்கு வழங்க வேண்டுமென்பதே வன்னி விவசாயிகளின் வேண்டுகோளாக உள்ளது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளுக்கு விலை போகவில்லை என்பதை இந்தத் தேர்தல் மூலம் மீண்டும் நிரூபித்தது தமிழினம்

**நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு**

மட்டக்களப்பு,மார்ச்21

கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போல இந்த உள்ளூராட்சித் தேர்தலின் போதும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தமையால் தமிழினம் சலுகைகளுக்காக விலை போய் விடவில்லை, இன்னும் கொள்கையோடுதான் இருக்கின்றது என்பதை மீண்டும் ஒருமுறை எமது மக்கள் அரசுக்கும், சர்வ தேசத்துக்கும் எடுத்துக்காட்டியுள்ளனர்- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் அவர் கூறியவை வருமாறு -

வடக்கு, கிழக்கில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 15 உள்ளூராட்சிச் சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது.

இவற்றில் 12 சபைகளை எமது கட்சி கைப்பற்றியுள்ளது.

இந்த அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை மீண்டும் எமது மக்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

விடுதலையையும் உரிமையையும் வென்றெடுக்கவும், அரசியல் பலத்தை உறுதி செய்யவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எமது மக்கள் வாக்களித்துள்ளார்கள்.

தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முதலாவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாகவும் திகழ்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயமாக விரைவான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேசுவதற்கான ஆணையைத் தமிழ் மக்கள் வழங்கியிருக்கின்றனர்- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் சிறுவன் பலி

கண்டி,மார்ச் 21

கண்டி, கல்ஹின்னை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டரை வயதுச் சிறுவன் பலியாகியுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கண்டி வடக்கு போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அங்கும்புரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (204)

# முகத்துவாரத்தை மூடும் பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட போது, வெள்ளநீர் வடிந்தோடுவதற்காக நாவலடி வீதியில் வெட்டப்பட்ட முகத்து வாரத்தை மூடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடைமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்ததுடன், வெள்ள நீர் வடிந்தோடுவதில் பெரும் சிரமம் காணப்பட்டது. கடந்த 50 வருடங்களுக்கு முன்னர் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டபோது குறித்த இடத்தில் வெட்டப்பட்ட முகத்துவாரம் போன்று இந்தமுறையும் வெள்ள நீர் வடிந்தோடும் வகையில் முகத்துவாரமொன்று வெட்டப்பட்டது. வெள்ளம் வேகமாக வடிந் தோடியதால் நாவலடி பிரதான வீதி கிட்டத்தட்ட 100 மீற்றர் அளவு சேதமாகியுள்ளது. இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில், மீண்டும் அந்த வீதியை முழுமையாக புனர்நிர்மாணம் செய்வதற்கான ஆரம்ப வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

# அரசுக்கு வாக்களிப்பதன் மூலம் பிரதேசத்தை கட்டி எழுப்ப வாய்ப்பு

எதிர்க்கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்ததன் மூலம் ஜனாதிபதியின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். இதன் மூலம் அந்தப் பிரதேச மக்கள் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையவுள்ளனர். இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் .

மட்டக்களப்பு, விநாயகபுரம், வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் பொருளாதார அமைச்சின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் அந்தப்பகுதி மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிக்கு வாக்களித்து விட்டு நாங்கள் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. அரசுடன் இணைந்தால் மாத்திரமே பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார்.

பிரதேச மீள்எழுச்சித்திட்ட தலைவர் கே.புலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன், மாவட்ட மீள்எழுச்சித் திட்ட பிரதிப்பணிப்பாளர் ஏ.விஜயகிருஸ்னா, அமைச்சின் செயலாளர் பொ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (204)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் தடுப்பூசி ஏற்றுமாறு அறிவுறுத்து

குருநாகல் மாவட்டம் முழுவதும் எலிக்காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருவதால் பொதுமக்கள் அண்மையிலுள்ள அரச வைத்தியசாலைகளில் அதற்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென வடமேல் மாகாண சுகாதார அமைச்சர் அஷோக்க வடிஹ மங்காவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த மழையைத் தொடர்ந்து இந்தநோய் தீவிரமடைந்து வருகிறது. கட்டுப்பாட்டை மீறி தீவிரமாகப் பரவிவரும் இந்த நோயிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள பிரதேசவாசிகள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும். விவசாயிகள் வயல்களில் வேலைகளைச் செய்வதற்கு முன்பு இந்தத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதுவரை 270 பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர். குருநாகல் போதனா வைத்தியசாலையில் 199 பேர் தம்பதெனிய, கல்கமுவ, நிக்கவரெட்டிய, குளியாப்பிட்டிய வைத்தியசாலைகளிலும் சில கிராம வைத்தியசாலைகளிலும் 71 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (204-5)

## சேவை நலன் பாராட்டு



## செல்வி லீலாதேவி நவரட்ணம்

(சைவசமய சிரேஷ்ட ஆசிரியை)

கல்வி: ஆரம்பக்கல்வி, உயர்கல்வி
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை
ஆசிரியர் பயிற்சி: தொலைக்கல்வி
(1992-1996 வரை) சைவ சமயம்
ஆசிரியர் சேவை: 01.09.1992 இல் இருந்து இன்றுவரை (உப அதிபர்)

செல்வி லீலாதேவி நவரட்ணம் அவர்கள் இறை அருளினால் கலை பல கற்று மகத்தான ஆசிரியப் பணியதனில் இணைந்து சிறந்த ஆளுமையுடன் மாணவர் சமூகத்தை வழி நடத்தி சைவப் பண்பையும் சைவ சமயத்தையும் ஊட்டி நன்மாணாக்கர்களை உருவாக்கி மேன்மை பெற வைத்தவர். அதுமட்டுமன்றி பாடசாலையின் பௌதிக வளத்தை வளர்ப்பதற்காக தனது சொந்தப் பணத்திலேயே காணியை வாங்கி வழங்கியவர். மேலும் பாடசாலையின் தேவைகளை உரிய நேரத்தில் உரிய முறையில் நிறைவேற்றியவர். இன்று அகவை அறுபதில் இளைப்பாறும் இவரை சகல நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை.

(48,27,20)

## விற்பனைக்கு

54 XXXX தொடரிலக்கமுடைய செல் மொடல் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0750407394

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், மாட்டீன் வீதியில் வசிக்கும் தந்தை, கனடாவில் வசிக்கும் 39 வயது பூர்த்தியாகும் M.A படித்த அழகான பெண்ணுக்கு கல்வித் தகைமை உடைய மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 021 2220 459
077 9709 498
071 9709 498

## வாகனங்கள் விற்பனைக்கு

68 - XXXX டொயட்டா டயனா Full Body ஹன்டர்,
84 XXXX CD 200 கறுப்பு நிற றோட்மாஸ்ரர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
அன்ரைராஜா.
0718254734
0777446267

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 39, நட்சத்திரம் சித்திரை 2ஆம் பாதம், கிரகபாவம் 29½ துறைமுகத்தில் தொழில் புரியும் மணமகனுக்கு, 34 வயதுக்குக் குறைந்த அழகிய மெல்லிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0779187840,
0213735931

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2209 திகதி 19-03-2011

ஆங்கில எழுத்திற்கும் W

வெற்றி எண்கள் 20 33 55 66 போனஸ் இல: 23

ஜக்பொட் பரிசு ரூ. 17,011,100/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 131760 | 20/- | 2,635,200/- |
| 2 இல | 9459 | 100/- | 945,900/- |
| 3 இல | 200 | 1,000/- | 200,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 5208 | 40/- | 208,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 368 | 1,000/- | 368,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,011,100/- | - |
| 1 இல + போனஸ் இல | 6229 | 100/- | 622,900/- |
| 2 இல + போனஸ் இல | 281 | 500/- | 140,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 247 | 200/- | 49,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 5,562,720/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 153787 | | 6,162,720/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 302984121-0-37 |
| குருநாகல் | 302977046-2-40 |
| வவுனியா | 302990515-5-10 |
| இரத்தினபுரி | 302983394-3-48 |
| அம்பாறை | 302982485-1-28 |
| பொலன்னறுவை | 302980813-9-23 |
| கம்பஹா | 302979291-6-22 |
| களுத்துறை | 302981492-8-37 |
| திருகோணமலை | 302980164-8-23 |
| மாத்தறை | 302978030-1-18 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 17,370,075/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேகாலை மாவட்டத்தில் புறநகர்ப் பகுதியில் 350 பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

நுவரேலியா,மார்ச் 21

கேகாலை மாவட்டத்தில் நகர எல்லைக்குள் அப்பாற் பட்ட 200 பாடசாலைகளுக்கும் 150 முன்பள்ளிகளுக்கும் கணினிகள் உட்பட 200 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பாடசாலை உபகரணங்களை வழங்க சப்ரகமுவ மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சப்ரகமுக மாகாணத்தின் முதலமைச்சரும் கல்வியமைச்சருமான மஹிபால ஹேரத்தின் தலைமையில் இந்த உபகரணங்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் கேகாலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நவீன தொழில் நுட்பத்துடனான கணினிகள், அச்சியந்திரங்கள், சிறுவர் மேசை கள், இசைக் கருவிகள், முன்பள் ளிக்கான உபகரணங்கள், கழிவு அகற் றும் உபகரணங்கள் ஆகி யன வழங்கப்பட்டன.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டப் பாடசாலைகளுக்கு நலன்புரி உபகரணங்களுக்காக தலா பத்து லட்சம் ரூபாவுக்கான காசோலைகளும் முதலமைச்சரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முதலமைச்சர் மஹிபால ஹேரத், நகர எல்லைக்குட் பட்ட பாடசாலைகளில் ஏற்படும் இடநெருக்கடி தவிர்ப்பதற்காகவே இந்த உபகரணங்கள் வழங்கப்படுவதாகவும் கிராமப் பகுதிகளில் வாழும் பிள்ளைகள் தங்களுக்கு அண்மித்த பாடசாலைகளில் நகரப் பாடசாலைகளில் பெறும் அதே தரத்திலான கல்வியைப் பெறுவதற்கு வழி செய்வதுமே இந்தத் திட்டதின் நோக்கமென தெரிவித் துள்ளார்.

இந்த நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சபை யின் கல்விச் செயலாளர் எச்.பீ. குலரத்ன, மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.அபேசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204-5)

# கலால் திணைக்கள சுற்றி வளைப்பில் 17 பேர் கைது

பதுளை, மார்ச்21

கடந்த இரு தினங்களில் மாத்தளை மாவட்ட கலால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை நகரம், தம்புள்ள, கலேவெல, சீகிரிய, எல்கடுவ, ருகிருகம ஆகிய பிரதேசங்களில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சட்டவிரோத சாராயம், கசிப்பு போன்றவை விற்கப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பெயர்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தளை மற்றும் தம்புள்ள நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-5)

# சிறந்த பெறுபேறுகள் கிடைப்பதற்கு கல்வி அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும்

மட்டக்களப்பு,மார்ச்21

அதிகஷ்ட கல்விப் பிரதேசங்களிலிருந்து பெறப்படுகின்ற கல்வி அபிவிருத் தியே உண்மையான கல்வியாகும். இவ்வாறான பிரதேசங்களில் சிறந்த கல்விப் பெறு பேறுகள் கிடைப்ப தற்கு கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கமுன்வரவேண்டும்.

இவ்வாறு தெரிவித் தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை மட்டக்களப்பு, கட்டு முறிவு அ. த.க.பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வாகரைப் பிரதேசத்தில் மிகவும் பின்தள்ளப்பட்ட இந்தப் பாடசாலையிலிருந்து கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் சித்தியடைந் துள்ளார் என்பதை அறிந்த போது நான் மிக்க மகிழ்ச்சியடைந் தேன். இதற்காகப் பாடுபட்ட ஆசிரியர்களையும் குறித்த மாணவனையும் பாராட்டுகின்றேன். அரசியல் ரீதியாக கல்வி முன்னேற்றத்திற்கு எனது ஒத்துழைப்பு என்றைக்கும் உள்ளது -என்றார்.

பாடசாலை அதிபர் எஸ்.இந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வாகரைப் பிரதேச தவிசாளர் க.கணேசன், பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி, கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.குணலிங்கம், இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (204)

# இரு மாணவிகளைக் காணவில்லை

## பெற்றோர் முறைப்பாடு

பதுளை, மார்ச்21


பதுளை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்த இரண்டு மாணவிகள் கடந்த திங்கட்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாகப் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

பத்மநாதன் ரஜீவனி (13) மற்றும் வித்யாபதி மென்மதிராஜா (16) எனும் இரு மாணவியரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

பதுளை தெல்பெத்த தோட்டத்தின் கீழ்ப் பிரிவில் வசித்து வந்த இவ்விருவரும் கடந்த 14ஆம் திகதி பாடசாலை செல்வதாககூறி வீடுகளில் இருந்து புறப்பட்டு வந்துள்ளனர். அதன்பின் இரவுவரை அவர்கள் வீடு திரும்பாததையடுத்து அவர்களது பெற்றோர் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (204-5)

## அற்புதம்...



மட்டக்களப்பு, மேல் மருவத்தூர் அன்னை ஆதி பராசக்தி ஆலயத்தில் ஆதிபராசக்திக்கு பக்தர்களால் அணிவிக்கப்பட்ட அடி நீளமான மாலைகள் அனைத்தும் நாளுக்கு நாள் நீண்டுவரும் அற்புதம் இடம்பெறுகிறது. (86)

# துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் பலி

ஹெலியகொட, பரகடுவ பிரதேசத்தின் 60 ஏக்கர் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக ஹெலிய கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான ஏ.அபேவர்த்தன (வயது55) எனும் நபரே பலியாகியுள்ளார்.

பழைய விரோதமொன்றின் காரணமாக வெடி மருந்து திணிக்கும் நாட்டுத் துப்பாக்கியொன்றின் மூலமே இந்தக் கொலை நடந்துள்ளது.

சடலம் அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலியகொட பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் வீரசேகரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (204-5)

# யானைகளின் தொல்லை அதிகரிப்பு; பொதுமக்கள் அச்சத்தில் இடம்பெயர்வு

மட்டக்களப்பு,மார்ச்21

வவுணதீவுப் பிரதேசத்தின் காந்திநகர் மற்றும் பன்சேனை கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் அச்சத்துடன் மக்கள் இடம்பெயரும் நிலை உருவாகியுள்ளது.

காந்திநகர் கிராமத்துக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு புகுந்த காட்டு யானைகள் நான்கு வீடுகளைச் சேதமாக்கியுள்ளன. இதனால் மக்கள் இடம் பெயர்ந்து முனைக்காடு பகுதிக்குச் சென்றுள்ளனர். அண்மைக் காலமாக வவுணதீவு மற்றும் பட்டிப் பளைப் பிரதேசங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் இரவு வேளைகளில் நித்திரை இன்றி தவிக்கும் நிலையும் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கும் நிலையும் காணப்படு கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு காந்திநகர் கிராமத்துக் குள் புகுந்த யானைகள் நான்கு வீடுகளைச் சேதப்படுத்தியது டன் பன்சேனையிலும் சில வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளது. சில தினங்களுக்கு முன்பு 6ஆம் கட்டைக் கிராமத்தில் உள்ள பாலர் பாடசாலையைச் சேதமாக்கியதுடன் தாந்தாமலைப் பகுதியில் சில வீடுகளைச் சேதப்படுத்தியதுடன் யானை தாக்கியதில் ஒருவர் கால் முறிந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். யானை வெடியினை கொளுத்திப் போட்டால் எதிர்த்து வந்து காலினுள் போட்டு மிதிப்பதாகவும், எவற்றாலும் யானை வருவதை தங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தச் சம்பவம் குறித்துப் பல முறை அதிகாரிகளுக்கு தெரி வித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (204)

# நான்கு மீன்பிடி வாடிகள் தீக்கிரை



மட்டக்களப்பு,மார்ச்21

காத்தான்குடி கடற்கரையோரம் அமைக்கப்பட்டிருந்த மீனவர்களின் நான்கு மீன்பிடி வாடிகள் இனந்தெரியாதோர் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தினால் இந்த வாடிகளில் வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகின் இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் என்பன முற்றாக எரிந்துள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் புத்தர் சிலை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கண்டனம்

வவுனியா,மார்ச்21

வடக்கு, கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரிய பூமி என்பதை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே உலகிலேயே மிக உயரமான புத்தர் சிலையான 522 அடி புத்தர் சிலையை வவுனியாவில் தாபிக்கத் திட்டமிட்டுள்ளது. இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இது எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும், எனது தலைமையான இந்து அமைப்புக்கள் சார்பாகவும் வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றேன் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

வடக்கு, கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் பாரம்பரிய தார்மீக பூமியாகும். கடந்த 61 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக அகிம்சை வழி போராட்டம், ஆயுதப் போராட்டம் போன்றவற்றை நடத்தினார்கள். ஆனால் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் நடுப்பகுதியுடன் ஆயுதப் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என அரசு கூறுகின்றது.

ஆனால் இதன்பின் அரசின் நடவடிக்கை இனப் பிரச்சினை இல்லை எனக்காட்டிக் கொண்டு மதப் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.

கௌதம புத்தர் சிலையை நீங்கள் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் தாபித்துக் கொள்ளுங்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்கள். அங்கு இந்தச் சிலையை தாபிப் பது தமிழ் மக்களிடையே இன்னுமொரு பிரச்சினையான மதப்பிரச்சினையைத் தூண்டும் விடயமாக அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கை மீட்டுள்ளோம் எனக் கூறும் அரசு புத்தர் சிலைகளை இந்த மண்ணில் தாபிப்பதும், இந்துப்பாரம்பரியம், இந்துக் கோயில்களை அழிப்பதையும் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

இதற்காக எங்கள் மக்கள் சாத்வீக ரீதியில் போராடத் தயாராக உள்ளோம். வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களின் மனங்களைத் தொடர்ந்து புண்படுத்தாதீர்கள். தங்களது ஆலோசனையின் கீழ் பௌத்த பிக்குகளால் தாபிக்கப்படவுள்ள 522 அடி உயரம் உள்ள உலகிலேயே அதிக உயரமான புத்தர் சிலையை வவுனியாவில் தாபிக்க எடுக்கும் நடவடிக்கையை நிறுத்தி உதவுமாறு கோருகின்றேன் - என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)

# அனுராதபுர விமானத்தளத் தாக்குதல் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு

## தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 21

அனுராதபுர விமானத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நீதிமன்றில் அறிவிக்கப்பட்ட போதிலும், இன்னமும் வழக்குத் தொடரப்படவில்லை என நீதிவான் தர்ஷிக்கா விமலசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் மந்தகதியில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்துல் குத்தூஸ், பீ.அரவிந்தன் மற்றும் எஸ்.சுதாஹரன் ஆகியோரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் சம்பள விடயத்திலும் மக்கள் முன்னணியுடன் கூட்டுத் தொடரும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ப.திகாம்பரம் தெரிவிப்பு

நுவரெலியா,மார்ச்21

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலும் மலையக மக்கள் முன்னணியுடனான கூட்டுத் தொடரும்.

இவ்வாறு தெரிவித்தார் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.திகாம்பரம்.

நுவரெலியா மாவட்ட தேர்தல் முடிவுகள் வெளியாகியதைத் தொடர்ந்து நுவரெலியாவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


மலையக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தினை தக்கவைத்துக்கொள்வதற்காக இந்தத் தேர்தலில் நாம் ஒன்றிணைந்து போட்டியிட்டோம் .இதன் மூலமாக எமக்கு வெற்றி கிடைத் துள்ளது.

மலையகத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி பெரும்பான்மைக் கட்சிகள் வெற்றிப்பெற முடியாது என்பதை இந்தத்தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன.

மலையக மக்கள் முன்னணியும் தொழிலாளர் தேசிய சங்கமும் இணைந்து நுவரெலியா பிரதேச சபையைக் கைப்பற்றியுள்ளமை வரலாற்றுச் சாதனையாகும்-என்றார்.

இந்தக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன், மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.இராதாகிருஷ்ணன் மற்றும் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (204)

## திடீர் பயணம்...



புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை திடீர் பயணத்தை மேற்கொண்டு புனரமைப்பு நடவடிக்கைகளை பார்வையிடுகின்றார். (204)

# 30 வருடங்களின் பின் பூசை வழிபாடுகள்

மட்டக்களப்பு,மார்ச் 21

30 வருடங்களின் பின்னர், மட்டக்களப்பு தொப்பிகல தரவைப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. கோபாலப்பிள்ளைக் குருக்கள் அபஷேக வட்டாவை 232ஆவது இராணுவப் படைப்பிரிவுத் தளபதி கேர்ணல் எஸ்எஸ்.வடுகேவிடம் வழங்கினார்.

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு காப்புறுதி வழங்க 'லொயிட்ஸ்' மறுப்பு

கொழும்பு,மார்ச்21

இலங்கை அரசு புதிதாக அமைத்துள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அனைத்துலக கடல்சார் காப்புறுதி வழங்க பிரிட்டன் லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் லொயிட்ஸ் நிறுவனமே அனைத்துலக கடல்சார் காப்புறுதி, மீள்காப்புறுதிகளை வழங்கி வருகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு இந்த நிறுவனம் காப்புறுதி வழங்க மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நுழைவாயிலைக் காரணம் காட்டியே காப்புறுதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகத்தின் நுழைவாயில் பகுதியின் அமைப்புக் காரணமாக அதனுள் பெருமளவு மணல் சேர்ந்து மணற் பட்டிகள் உருவாகும் வாய்ப்புகள் உள்ளன. இது துறைமுகத்துக்குள் நுழையும் கப்பல்களுக்கு நல்லதல்ல. அத்துடன் துறைமுக நுழைவாயிலுக்கு அப்பாலுள்ள கடலில் காணப்படும் பாறைகளும் கப்பல்களை சேதப்படுத்தி விடக்கூடும். இவற்றின் காரணமாகவே காப்புறுதி வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டுமானத்தில் ஈடுபட்ட சீன நிறுவனத்திடம் இந்தப் பாறைகளை அகற்றுமாறு இலங்கை அரசு கேட்டிருந்தது. ஆனால் அந்த நிறுவனம் அதற்கு மறுத்துவிட்டது. "அந்தப் பாறையை அகற்றினால் ஒட்டுமொத்த அம்பாந் தோட்டை நகருக்குமே ஆபத்தானது என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது. அத்துடன் துறைமுகத்தை அமைப்பதற்கு செலவிட்ட பணத்தை விட சுமார் நூறு மடங்கு அதிகமான பணத்தை அதற்குச் செலவிட வேண்டியிருக்கும் என்றும் அந்த சீன நிறுவனம் கூறியிருந்தது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு காப்புறுதி வழங்க பிரிட்டன் லொயிட்ஸ் நிறுவனம் மறுத்துள்ளதால், இங்கு கப்பல்கள் வருவது கேள்விக்குறியாகியுள்ளது. அப்படி வரும் கப்பல்களுக்கு இந்தத் துறைமுகத்தில் ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டால் அதற்கான காப்புறுதித் தொகை கிடைக்காது. அனைத்துலக கப்பல் நிறுவனங்கள் அம்பாந் தோட்டைத் துறைமுகத்துக்கான பயணத்தை மேற்கொள்வதற்குப் பின்னடிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (204)

# புலித் தாலி அணிந்த பெண்ணை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

விடுதலைப்புலிகளினால் வழங்கப்பட்ட தாலியை அணிந்திருந்தார் என குற்றம்சாட்டப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்ட சன் சீ கப்பலில் சென்ற தமிழ்ப் பெண்ணை விடுதலை செய்யுமாறு கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தாலியை அணிந்திருந்தமையால் அந்த அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பவர் எனக் குற்றஞ் சாட்டி கனடாவில் புகலிடம் கொடுக்கமுடியாது எனத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அந்தப் பெண் திருமணநாளில் கணவனால் கட்டப்பட்ட தாலியையே அணிந்திருப்பதாகவும் குறித்த பெண் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சமஷ்டி நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் தரம்-01 புதுமுக மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



யாழ்.கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர். (313)



நவாலி ஸ்தான அ.மி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது வண. பிதா பி.தவதாஸ் அடிகளார் மங்கள விளக்கேற்றுகிறார். (313)




கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் பாடசாலை அதிபர் ம.மகாகேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுகின்றார். (319)



கிளிநொச்சி 57 ஆவது படைப்பிரிவால் நடத்தப்பட்ட கால்டன் விளையாட்டு விழாவில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழக வீர, வீராங்கனைகள் வெற்றிபெற்றார்கள்.

# முன்பள்ளி ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உதவ அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 21

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கும் அவர்களுக்கு மேலதிக பயிற்சிநெறிகள் வழங்குவது தொடர்பாகவும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் கூடுதல் அக்கறை கொள்ளல்வேண்டும்.

பாலர் கல்விக் கழகத்தின் செயலாளர் திருமதி. தெய்வநாயகி இரட்ணகோபால் இவ்வாறு கூறியுள்ளார்.

யாழ். வீதியில் அமைந்துள்ள ஞானக் குழந்தைகள் முன்பள்ளியில் இடம்பெற்ற பேச்சுத்திறன் காணும் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

பாலர் கல்வி கழகத்தின் கீழ் இயங்கும் 13 முன்பள்ளிகளிலும் 25 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.

இவர்களுக்கு டிப்ளோமா பயிற்சிநெறியைப் பாலர் கல்விக் கழகத்தினூடாக வழங்கி வருகின்றோம்.

இதுபோன்ற அனைத்து முன்பள்ளிகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு டிப்ளோமா பயிற்சி நெறியை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக அவர்களின் ஆற்றலை மேம்படுத்த முடியும்.

அத்துடன் சிறார்களின் ஆரம்பக் கல்வியின் அடித்தளம் சிறப்பானதாக அமையும். இதனை அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கருத்திற் கொள்ளவேண்டியது அவசியமாகும். அத்துடன் கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பள உயர்வுகளிலும் அக்கறை செலுத்தவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் அதிகமானோர் இளவயதினர். இதனால் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வருமானம் போதியதாக இருக்கவேண்டும்.

பாலர் கல்விக் கழகம் ஊடாக நாம் பாலர் பாடசாலைகளை நிர்வகித்து வருகிறோம்.

வேலைவாய்ப்பின்றி இருக்கும் யுவதிகளுக்காகத்தான் எமது கழகத்தை ஆரம்பித்து வைத்தோம். இந்தச் சேவையை இடைவிடாது தொடர்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ம-313)

# மாணவர்கள் கீழ்ப்படிந்து நடந்தால் வாழ்வில் உயர்வடைய முடியும்

காரைநகர், மார்ச் 21

அதிபர், ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து மாணவர்கள் நடப்பதன் மூலம் கல்வியில் மட்டுமன்றி வாழ்விலும் உயர்வடைய முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவநாதன்.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் பொ. சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மாணவர்கள் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் காட்டவேண்டும்.

விளையாட்டுப் பயிற்சி ஊடாக நல்ல தேக ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதனூடாகத் தலைமைத்துவப் பண்பினையும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.

அதிபர் பொ. சிவானந்தராசா தலைமை உரையாற்றுகையில்:

பாடசாலைகளில் நடைபெறும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மிகவும் பெரியது இல்ல மெய்வன்மைப் போட்டி. பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பங்குபற்றும் செயற்பாடு இதுவாகும்.

இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மாணவர்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். பழைய மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றக் கூடிய நிகழ்வாகவும் இது அமைகின்றது.

அத்துடன் பெற்றோர்கள் நேரடியாக தமது பிள்ளைகளின் திறமைகளைக் கண்டுகளிக்கக் கூடிய நிகழ்வாகவும் இது காணப்படுகிறது.

பாடசாலைச் சமூகம் பாடசாலை வெளியீடுகளை நேரடியாக மதிப்பீடு செய்வதற்கு இவ்வாறான நிகழ்வுகள் உதவும்.

நலன் விரும்பிகள் பாடசாலைக்கு உதவ முன்வந்தால் விளையாட்டுப் போட்டிகளில் மேலும் பல நிகழ்வுகளை இணைத்துக்கொள்ள முடியும்.

இனிவரும் காலங்களில் கிராமிய விளையாட்டுக்களையும் இணைத்துக்கொள்ளவுள்ளோம்.- என்றார். (ம-250)

# அரச பணியில் உள்ள பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டும்

தென்மராட்சி, மார்ச் 21

அரச உத்தியோகம் ஒரு பெரிய பொறுப்புள்ள பணியாகும். கிடைக்கும் தொழிலை உரிய முறையில் மதித்து அதற்கு விசுவாசமாக நடக்க வேண்டும். அவ்வாறு தமது பொறுப்பினை உணர்ந்து சேவையாற்றுபவர்கள் சக உத்தியோகத்தர்கள் மட்டுமல்ல பொது மக்களாலும் மதிக்கப் படுவார்கள்.

இவ்வாறு கூறினார் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கொன்சன்ரைன் ஐக்சீல் சாவகச்சேரி நகரசபையில் 25 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற ச.சுப்பையாவுக்குச் சபை உத்தியோகத்தர், ஊழியர்களால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றுகையில்:

உள்ளூராட்சிச் சபைகளில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் மக்களுக்காகப் பணியாற்றும் பொறுப்புள்ளவர்கள்.

தனது பதவியை மக்களுக்கு ஆற்றும் பணியாகக் கருதும் உத்தியோகத்தர்கள் பலரை இந்த அலுவலகம் கண்டுள்ளது. மக்கள் சேவையே ஆத்மதிருப்தியை எமக்கு அளிக்கவல்லது.

கடமைஉணர்வுடனும் சேவை நோக்குடனும் எமது பணிகளை முன் அமைத்துச்செல்ல வேண்டியது அவசியமாகும்.

அலுவலகங்களுக்கு வரும் மக்களை அலைய விடாது அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டியது அவசியம்.

எந்தவொரு பொறுப்பில் உள்ளவர்களும் இதை உணர்ந்து செயற்படுமிடத்து மக்கள் அலைச்சல் இன்றித் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவர் - என்றார். (ம-207)

## நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு தையிட்டி வள்ளுவர்புரம் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் மல்லாகத்தில் இடம்பெற்றது.

கடந்த 30 வருடத்துக்கு மேற்பட்ட கால இடைவெளியின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்- அருள் சொன்சன், உதைபந்தாட்டப் பயிற்சியாளர் -அ.நெல்சன், கரப்பந்தாட்டப் பயிற்சியாளர் பொ.பாலசிங்கம், துடுப்பாட்டப் பயிற்சியாளர்- அருள்குமார் ஹென்றி, தாச்சிப் பயிற்சியாளர்கள்- சி.ரமேஸ், ந.சுரேஸ்குமார், ஏனைய உறுப்பினர்கள் இ.ரவிக்குமார், கி.முரளிதரன், நா.மேனகானந்தம், தி.ரஞ்சித்குமார், சு.பாஸ்கரன், த.புஸ்பராசா, ம.வின்சன், ச.அமல்நாத், த.சுமன், கா.பாக்கியராசா, அ.சுதர்சன், மா.சுதாகரன், ந.சுரேஷ்குமார். (ம-86).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**



தெளிவான சிந்தனை, புத்தி ஞானத்துடன் செயற்படும் நாள். புதிய முயற்சிகளில் எதிர்பாராத வெற்றி கிடைக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். பயணங்களால் அலைச்சல்களைச் சந்தித்தாலும் அதனால் பலன் உண்டு. பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.



**இடபம்:**

செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். கணவன் மனைவியர் ஆலோசித்து சில முக்கிய விடயங்களில் முடிவு எடுக்கலாம். விரும்பிய பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடலாம்.

**மிதுனம்:**



அதிக எதிர்பார்ப்புடன் இருந்த ஒரு விடயம் ஏமாற்றத்தை தரலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல், கோபத்தை உண்டாக்கலாம். சில வேலைகளைத் தள்ளி வைக்க முடியாமல் இன்றே செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினரைப் பார்க்கலாம்.



**கடகம்:**

நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கடந்த காலத்தில் உங்களுக்கு உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**சிங்கம்:**



சிலர் கேட்ட பண உதவி, பொருள் உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைத்து விட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். விமர்சனப் பேச்சுக்களைத் தவிர்க்கவும்.



**கன்னி:**

விலை மதிப்பு மிக்க பொருள்கள் வாங்கலாம். நாளை செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு இன்றே செல்ல நேரிடலாம். உடன் பிறந்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். எதிலும் மற்றவர்கள் மதிக்கும் வகையில் பொறுப்பாக நடந்து கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சிறு கோபதாபங்கள் ஏற்படலாம். பணவரவு உண்டு.

**துலாம்:**



மறதியால் தேவையற்ற பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். விருந்தினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். கடும் வேலைப்பளுவால் அவதிகளுக்கு ஆளாகலாம்.



**விருச்சிகம்:**

மனம் சந்தோஷம் அடையும் வகையிலான சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். தேவையான பணத்தை புரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். நீங்கள் நம்பிய ஒருவர் சரியான நேரத்தில் கை கொடுத்து உதவலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:**



தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். பெண்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். பல நாள்களாகப் போட்டிருந்த திட்டம் இன்று நிறைவுக்கு வரும். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நாவன்மை அதிகரிக்கும்.



**மகரம்:**

பண விடயங்களில் கொடுத்த வாக்கை காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்ளலாம். சிலர் உங்களின் குறைபாடுகளை விமர்சிக்கலாம். மற்றவர்கள் செய்த தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கே தெரியாமல் ரகசியமாக சில வேலைகளைச் செய்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**கும்பம்:**



விளையாட்டாக செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். சிலர் பேசும் பேச்சுக்களால் கோபம், எரிச்சல் அடையலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பிள்ளைகளிடம், குடும்பத்தினரிடம் கண்டிப்பாக நடந்து அதிருப்திக்கு ஆளாகலாம்.



**மீனம்:**

வெறுப்பு, விரக்தி விலகி எதிலும் தெம்பு, உற்சாகமாகச் செயற்படும் நாள். மனைவியின், பெற்றோரின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். தாய் வழி உறவுகள் வழியில் உருவான சிரமங்கள் முடிவிற்கு வரும். பம்பரமாக சுழன்று செயல்படும் நாள்.

# அவசர காலச் சட்ட[டம்] நீடிப்பதற்காகவே புலிப்பூச்சாண்டி

இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது இறுதிக் கட்டப் போரைத் தொடுத்தபோது, விடுதலைப் புலிகளின் தளபதிகள், துணைத் தளபதிகள், பொறுப்பு வாய்ந்த புலிப் போராளிகள் தப்பித்து இந்தியாவுக்குள் ஊடுருவி இருக்கலாம் என்று இந்தியப் புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளிவந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

சர்வதேச பரப்பில் பொருளாதார மட்டத்தில் நிதிவசதியை ஏற்படுத்திக் கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, இன்று அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டவேளை இந்தியாவைத் தளமாகக் கொண்டு இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் உள்ள கொளத்தூரில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி இதற்கு ஒத்துழைப்பினை வழங்கினார். அப்பொழுது தமிழ் நாடு முதல்வராக இருந்த நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும் பல உதவிகளை வழங்கினார்.

இப்பொழுது தமிழ் நாட்டில் முதல்வராக இருக்கும் முதல்வர் கருணாநிதி கூடப் புலிகளுக்கு உதவி செய்து வந்தார். விடுதலைப் புலிகளின் முதல் ஆயுதப் பயிற்சி முகாம் தமிழ் நாடு கொளத்தூரில் இடம்பெற்றது. அப்பொழுது பெரியார் திராவிடக் கழக தலைவராக இருந்த கொளத்தூர் மணி புலிகளின் ஆயுதப் பயிற்சிகளுக்கு பல உதவிகளை மேற்கொண்டு வந்தமை குறித்துத் தமிழ்நாடு பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

இன்று அதாவது விடுதலைப்புலிகள் அரசுடனான மூன்று தசாப்த கால யுத்தத்தில் தோல்வி கண்ட நிலையில் மீண்டும் இந்தியாவில் விடுதலைப்புலிகளின் ஆயுதப் பயிற்சி முகாம்கள் 3 உள்ளன என இலங்கைப் பிரதமர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்தார். பிரதமரின் இக் கருத்தினை இந்தியா முற்றாக நிராகரித்ததை அடுத்து இந்தச் செய்தி தவறானது என்று மீண்டும் பிரதமர் கூறியிருக்கிறார். இதற்கிடையில் தமிழகத்தில் புலிகளின் பயிற்சி முகாம்கள் உள்ளன என்ற தகவல் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்தே அரசால் பெறப்பட்டது. அந்தத் தகவலை அடிப்படையாக வைத்தே பிரதமர் நாடாளுமன்றில் உரையாற்றினார் என்று இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரித்தார்.

இந்தியாவில் சில பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பயிற்சி முகாம்கள் இயங்குகின்றன என்றும் சிலருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றும் பிரதமர் நாடாளுமன்றில் தெரிவித்தார். அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது தெரிவித்தார். எவ்வாறாயினும் தமிழக அரசியல்வாதிகளைக் கொலை செய்வதற்கு விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டுகின்றனர் என இந்தியப் புல[னாய்]வுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தது. உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளின்போது பயங்கரவாதத்தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்றும் இந்தியப் புலனாய்வுத்துறையினர் எச்சிரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்குகிறார்கள் என்ற செய்திகள் வெளியாகி இருக்கும் நிலையில் அந்தச் செய்தியை வெளியிடுபவர்களும் அந்தச் செய்தியை வெளியிட்ட பின்னர் இச் செய்தி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களை ஆளாளுக்கு வெளியிட்டு வருகின்றவர்களும் என்ன சொல்ல நினைக்கின்றார்கள் என்று தெரியாத மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

இந்தியாவில் விடுதலைப் புலிகளின் மூன்று பயிற்சி முகாம்கள் உள்ளன என்று சொன்னவர்களே பின்பு அந்தச் செய்திக்கு மறுப்புக் கொடுத்துவிட்டு மீண்டும் ஒரு செய்தியை இந்தியப் புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அதாவது இந்தியாவில் புலிகளின் பயி[ற்]சி முகாம் இல்லை என்றும் ஆனால் விடுதலை[ப்] புலிகளின் நடமாட்டம் உள்ளது என்றும் பயிற்சி முகாம் அமைக்க விடுதலைப்புலிகள் திட்டம் போட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர். இலங்கை - இந்திய உறவுகளின் நீடிப்புக்குப் பலமாக அமைந்த விடயம் என்று பார்த்தால் அது விடுதலைப்புலிகள் மீதான பிரச்சினையே ஆகும். விடுதலைப் புலிகள் தோற்றக்கப்பட்ட பின்னர் மீண்டும் புலிகள் எனச் சொல்லும் அரசுகள் தமது அரசியல் இலாபத்தினைத் தொடர்ந்தும் பேணிப்பாதுகாப்பதற்கே என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டில் இருக்கிறார்களோ? இல்லையோ? ஆனால் விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் பின்பு இல்லை என்று மறுப்பதுமான செய்திகள் அடிக்கடி வெளிவந்த வண்ணமே இருக்கும் என்பது உண்மை. இலங்கையில் பாதுகாப்புக் கருதித் தமிழர் பகுதிகளில் எந்தநேரமும் இராணுவம் காவலில் நிற்கும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். விடுதலைப்புலிகளில் பல பேர் போரில் உயிரிழந்து விட்டார்கள். மீதிப் பேர் சரணடைந்துள்ளனர் என்று சொல்லும் அரசு, மீண்டும் ஏன் தமிழர் பகுதிகளில் படைகளைத் குவித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மக்களின் குடும்பப் பதிவுகளை மேற்கொள்கிறது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

தமிழர் பகுதிகளிலிருந்து படையினரை வெளியேற்றச் சொல்லி சர்வதேசம் அழுத்தங்களைக் கொடுத் தாலும் ஒரு போதும் படைகளை வெளியேற்றப் போவதில்லை எனத் திட்டவட்டமாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களது நடமாட்டம் குறித்து இந்திய புலனாய்வுப் பணியகம் விழிப்புடன் செயற்பட்டுவருவதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் நாளிதழனான 'த ஹிந்து' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. அதாவது இடுக்கி மாவட்டத்துக்கு அருகில் உள்ள வனப் பிரதேசத்தில் விடுலைப்புலிகள் முகாம் ஒன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ட்டத்தை



பிரதமர்



கருணாநிதி



கொளத்தூர் மணி

அமைக்கும் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் கிடைத்த தகவலையடுத்து இந்திய புலனாய்வுப் பணியகம் விழிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கேரளாவில் உள்ள விமான நிலையங்களைப் போக்குவரத்துக்காக புலிகள் பயன்படுத்த வாய்ப்பிருப்பதாக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிப்பதாக இந்தப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மிகச் சிறந்த கெரில்லாத் தலைவர் என்று இந்தியாவின் பிரபல ஊடகவியலாளரான அனிதா பிரதாப் தெரிவித்துள்ளார். சோசலிசப் புரட்சியாளரான சேகுவேராவிற்குப் பின்னர் உலகில் சிறந்த கெரில்லாத் தலைவராகப் பிரபாகரனை என்னால் காணமுடிகின்றது என்று இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு அவரிடமிருந்து அனுமதியைப் பெற்றதாகவும் கடைசிவரை அதனை எழுதி முடிக்க நேரம் கிடைக்கவில்லை எனவும் இலங்கை அரசானது சீனா மற்றும் இந்தியாவின் உதவி இல்லாவிட்டால் பிரபாகரனைத் தோற்கடித்திருக்க முடியாது என்றும் அனிதாப் பிரதாப் மேலும் தெரிவித்தார்.

புற்றுநோய் ஒரு மனிதனுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும். அதாவது உடலில் முழுச் செயற்பாட்டினைக் குறைத்து உடலை அடக்கம் செய்யக்கூடிய அளவில் உடலில் ஒரு மூலையில் இருந்து கொண்டு செயற்படக் கூடிய சக்தி உள்ளது. அதேபோல் விடுதலைப்புலிகள் சக்தி குறித்து அரசுக்கு நன்கு தெரியும். அதனால்தான் இன்றும் அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்கமாகத் தமிழர் பகுதியில் வைத்திருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்குக் கையாண்ட வழிமுறையை நிராகரிக்க ஜனாதிபதிக்கு உரிமையுண்டு.

ஆனால் தமிழ் மக்கள் தொடர்பாக பிரபாகரன் கேட்ட உரிமைகளை நிராகரிக்கும் உரிமை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை என்று இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரபாகரன் கேட்ட உரிமைகளையே கேட்பார்கள். தமிழ் மக்கள் சார்பாக பேச்சு நடத்த வரும் எவரும் பிரபாகரன் கேட்ட உரிமைகளையே கேட்பார்கள். தமிழ் மக்களின் பிரச்சினை கடந்த 60 வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் பிரச்சினையாகும். பிரபாகரன் கேட்ட உரிமைகளையே இவர்களும் கேட்பார்கள் எனக் கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.

**இலங்கை– இந்திய உறவுகளின் நீடிப்புக்குப் பலமாக அமைந்த விடயம் என்று பார்த்தால் அது விடுதலைப் புலிகள் மீதான பிரச்சினையே ஆகும். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் புலிகள் எனச் சொல்லும் அரசுகள் தமது அரசியல் இலாபத்தினைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதற்கே என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.**

ஈழத்தமிழ் மக்களின் தீர்வு பற்றி இலங்கை அரசு கண்மூடி இருப்பது நாளடைவில் இந்த நாட்டில் மீண்டும் ஆயுதப் போராட்டம் தலைதூக்க வழியமைப்பதாக இருக்குமே ஒழிய அமைதியை ஒருபோதுமே எமது சூழலில் மக்களிடம் ஏற்படுத்திக் கொடுக்காது என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை இந்தியாதான் ஆயுதப் பயிற்சி வழங்கி இலங்கைப் படைகளுடன் போராட உந்து சக்தியை கொடுத்தது. மீண்டும் இந்தியாதான் விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்க வழியமைத்துக் கொடுக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ் நாட்டைத் தளமாகக் கொண்டு இயங்கிய புலிகள் அமைப்பு இப்பொழுது தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் இயங்குவதாக செய்திகள் வெளிப்படுவதைப் பார்க்கின்ற போது கண்டிப்பாக இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என்பது உண்மையே. மீண்டும் விடுதலைப்புலிகள் இயங்குவதற்கு இந்தியாவின் பங்களிப்பு இருக்குமாயின் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை இந்த மண் எதிர்கொள்ளப் போகிறதோ? ✱

**துன்னாலைச் செல்வம்**

# இயல்பு மாறலாமா?



ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார் அவருக்கு விலங்குகள் மீது அளவுகடந்த விருப்பம் இருந்தது. அதனால் தமது வீட்டில் ஒரு நாயை வளர்த்து வந்தார். அதேபோல் கழுதை ஒன்றையும் வளர்த்துவந்தார்.

அந்தகழுதை அவர் வீட்டுக்கு பின்புறத்தில் பக்கத்தில் கட்டப்பட்டிருக்கும். ஏதாவது பொதி சுமக்கும் வேலை இருந்தால் அதனைச் செய்வதற்கு கழுதை பயன்படுத்தப்படும்.

நாயைப் பொறுத்தமட்டில் வீட்டுக்குள்ளே இருக்கும் அதுக்கு வீட்டில் ராஜ உபசாரம்தான் அதாவது அந்த வீட்டில் அதிகமான மரியாதை உண்டு. குளிப்பதற்கு சவர்க்காரம், காலை, மாலை பால் - பிஸ்கட் மதியம் சாப்பாடு அத்துடன் உடம்பு சரியில்லை என்றால் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று வைத்தியம் பார்க்கப்படும். மிகவும் கொடுத்து வைத்த நாய். அந்தவீட்டு எஜமான் வெளியில் நடைப் பயிற்சிக்குச் செல்லும்போது கூடவே சேர்ந்து நாயும் செல்லும்.

அவர் மட்டும் தனியாக வெளியே சென்று வந்தால் உடனே அந்த நாய் அவரிடம் ஓடிவரும். அப்படியே எழுந்து முன்னங்கால் இரண்டையும் அவர் தோள்மேலே போட்டுக்கொள்ளும். அவர் சிரித்துக் கொண்டே அதன் தலையிலே செல்லமாகத் தடவுவார்.

அந்தப் பெரியவர் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்து ரி.வி. பார்ப்பார் - பத்திரிகை படிப்பார் - அதன்போதெல்லாம் அவர் காலடியிலேயே அமர்ந்திருக்கும் அதன்போது கூட நாயின் தலையை செல்லமாகத் தடவிக்கொடுப்பார் - அந்த நாய் தூங்குவதற்கு ஒரு மெத்தை சில சமயம் அது அங்கே இருக்கிற மேசை, கதிரைமேல் அமர்ந்து கொள்ளும். அந்தளவு செல்வாக்கா வளர்ந்தது அந்த நாய்.

இதையெல்லாம் அந்தக் கழுதை பார்த்தது - யோசிக்க ஆரம்பித்தது.

''என்ன இது... இந்த வீட்டில் நான் கழுதையா உழைக்கின்றேன். பொதி சுமக்கின்றேன். எனக்கு நல்ல சாப்பாடு கிடையாது! உறங்குவதற்கு வசதியான இடம் கிடையாது. ஒரு நாளாவது என் தலையையோ முதுகையோ தடவிக்கொடுத்தது கிடையாது.

ஆனால், அந்த நாய் இந்த வீட்டுக்காக துரும்பைக்கூட அசைத்தது இல்லை.. அதைப்போய் இந்த வீட்டில் உள்ளவர்கள் இப்படி தலையில் வைத்துத் தாங்கின்றனரே...!'' என பலவாறு யோசித்தது. அதிகநேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

''சரி... இனிமேல் நானும் அந்த நாய் மாதிரியே நடந்துகொள்ளுவோம் அதுமாதிரியே பழகுவோம் ... அப்போதாவது எனக்கும் அந்த மரியாதை கிடைக்குதா பார்க்கலாம்'' என்று ஒரு திட்டம் போட்டது மனதுக்குள்ளே?

உடனே அந்தத்திட்டத்தை செயற்படுத்தவும் ஆரம்பித்தது. அதாவது அந்த வீட்டில் அந்த நாய் என்னென்ன செய்ததோ அதையெல்லாம் இதுவும் செய்ய ஆரம்பித்தது.

அந்த வீட்டு எஜமான் வெளியில் சென்றுவிட்டு அதிகமாக அசந்து போய் வீட்டுக்குத் திரும்பி வந்தார். உடனே இந்தக் கழுதை அவரிடம் ஓடிச்சென்று நாய் என்ன செய்யுமோ அதுபோலவே செய்தது. அதாவது அந்த எஜயமானின் தோள்மேல் தனது முன்னங்கக்ல் இரண்டையும் தூக்கிப்போட்டது.

எஜமான் பயந்துபோனார். அவருக்கு எதுவும் புரியவில்லை இது ஏன் இப்படிச்செய்கின்றது! சிறிது தூரம் விலகி நின்றார். ஆனால் கழுதை நாய்மாதிரி வாலை ஆட்டிக்கொண்டே அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அவர் உடனே வீட்டுக்குள் ஓடிச் சென்றார். கழுதையும் அவருக்குப் பின்னாலே சென்றது. அங்கே போய் நாய் மாதிரியே மேசைமேல் ஏறிக் குதித்து விளையாடியது. மேசைமீது இருந்த பொருள்கள் எல்லாம் கீழே விழுந்து உடைந்தன கழுதை மேசை மீது ஏறிக் குதித்தால் என்ன ஆகும்?

எஜமான் இதனைப் பார்த்தார். சரி இந்தக் கழுதைக்கு என்னவோ நடத்திட்டுது என்று முடிவு செய்யதார். ஒரு நல்ல கயிறை எடுத்துக்கொண்டு வந்தார். கழுதையின் காலிலும் கழுத்திலும் கட்டி தரதரவென்று இழுத்துக்கொண்டு போனார். அடித்து கொல்லைப்புறத்தில் கட்டினார். சாப்பாடு எதுவும் கொடுக்காமல் பட்டினி போட்டார். கழுதை யோசித்தது ''எஜமானுக்கு என்ன நடந்தது? அந்த நாய் பழகுவது போல் தானே நானும் பழகினேன். இந்த ஆள் நாயை அடிக்கவில்லை. ஆனால் என்னை அடிக்கிறார். இவ்வாறு செய்வதற்கு என்ன காரணமாக இருக்கும்?'' என்று யோசிக்க ஆரம்பித்ததாம் அந்தக் கழுதை.

இதுமாதிரியே நாம் கூட சில சமயம் யோசிப்பது உண்டு. நாம் இயல்பு மாறி நடக்க ஆரம்பித்தால் பல சமயங்களில் இவ்வாறு யோசிக்கிறதைப்போல் தான் ஆகிவரும் அதனால் ஒரு மனிதன் எப்படி நடந்துகொள்ளவேணுமோ அவ்வாறு நடந்தால் தான் மரியாதை இருக்கும். வெறிநாய் கடித்தால் மனிதன் எவ்வாறு அதுமாதிரியே ஆகிறான் பார்த்தீர்களா? அவனின் இயல்பு மாறுகின்றது. ஒருவரைப் பார்த்து இன்னொருவர் ''வெறிநாய் ஒன்று உன்னைக் கடித்தால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

''நான் உடனே பேப்பரும் பேனாவும் கேட்பேன்!'' என்றான் அவன். ''ஏன்... உயில் எழுதுவதற்காக?'' என்று மற்றவன் கேட்டான்.

''இல்லை... நான் யாரை யாரையெல்லாம் கடிக்கவேணும் என்று லிஸ்ட் தயார் செய்வதற்கு'' என்று சொன்னான்.


**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்க வேதாள வெங்காயச் செய்கை

குடாநாட்டு விவசாயிகள் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதனால் குறுகிய காலத்தில் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்கிறார்கள். தற்போது சந்தையில் வெங்காயத்துக்கான கேள்வி அதிகரித்த நிலையில் அதிக ஆர்வமும் காட்டிவருகின்றனர். ஆனாலும் தொடர்ச்சியாகப் பெய்யும் மழையினால் வெங்காயச்செய்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் விதை வெங்காயத்துக்கு அதிஉச்ச விலையுடன் தட்டுப்பாடான நிலைமையும் காணப்படுகிறது. இதனால் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் சிலர் வெங்காயச் செய்கையைக் கைவிடும் நிலைக்குக் கூடத் தள்ளப்படுகிறாா்கள். காலம்காலமாக விவசாயிகளினால் வேதாள வெங்காய இனங்கள் செய்கைப் பண்ணப்பட்டு வருகின்றன. இந்த இனங்கள் காலபோகச் செய்கையில் சிறப்பான பூக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. இந்தப் பூக்களில் உருவாகும் உண்மை விதைகளை பயன்படுத்தி விதை வெங்காயத்துக்குத் தட்டுப்பாடான காலங்களில் உற்பத்திச் செலவைக் குறைத்து எவ்வாறு வெங்காயச்




செய்கையை மேற்கொள்ளலாம் என இக்கட்டுரை விவரிக்கிறது.

**உண்மை விதைகள் என்றால் என்ன?**

வேதாள வெங்காய இனங்களில் பூக்கும் தன்மையை அவதானித்திருப்பீர்கள். இவற்றை முறித்து விவசாயிகள் சந்தைப்படுத்துவார்கள். இவற்றை முறிக்காமல் விட்டால் இவை மேலும் விரிந்து அவற்றுள் கறுப்பு நிறமான சிறிய விதைகள் உருவாகும். இந்த விதைகளையே உண்மை விதைகள் எனக் குறிப்பிடுகிறோம்.

**நன்மைகள்**

1) வெங்காய உற்பத்திச் செலவில் 65% இற்கும் மேலாக நடுகைப் பொருளுக்கே செலவிடப்படுகிறது.

2) தொடர்ச்சியான மழையினால் வெங்காயச் செய்கை பாதிப்படைந்து அடுத்த போக நடுகைக்கு கூட வெங்காயம் கிடைக்காதுபோகும் சந்தர்ப்பங்களில் இவற்றைப் பயன்படுத்தலாம்.

3) நடுகைக்காக பயன்படுத்தும் குமிழ்கள் மூலம் பரவும் நோய்களான இலைச் சுருளல் (அந்திரக்நோஸ்), விலாங்குப் புழு போன்றவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

4) குளிர்சாதன வசதி இருக்குமாயின் நீண்ட காலம் (5 வருடங்கள்) சேமித்துவைத்தும் நடுகை செய்யலாம்.

5) களஞ்சியப்படுத்த இடவசதி தேவையில்லை.

6) அத்துடன் நீண்ட தூரத்துக்கு இலகுவாக கொண்டு செல்லலாம்.

¼ ஏக்கர் நடுகை செய்வதற்கு 600 கிராம் விதைகள் போதுமானது.

**நாற்றுமேடை தயாரித்தல்**

மேடைகளை விசேட கவனிப்புடன் பராமரிப்பது ஓர் அடிப்படைத் தேவையாகும்.

¼ ஏக்கர் நடுகை செய்ய 3 மீற்றர் நீளமும் 1 மீற்றர் அகலமுமான 30 நாற்றுமேடைகள் தேவையாகும். விதைகளை நடுவதற்கு முன்னர் பாத்திகளைத் தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.

தொற்று நீக்க பல முறைகள் உள்ளன. அவற்றுள் ஏதாவது ஒன்றை நீங்கள் பின்பற்றலாம். இரசாயன முறையினைப் பின்பற்றுவதாயின் மேற்குறிப்பிட்ட அளவுள்ள மேடை ஒன்றுக்குக் கோமாய் அல்லது கப்ரான பங்கசு நாசினிகளில் ஒன்றில் 25 கிராமை 15 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

மேடைகளைத் தொற்று நீக்கிய பின்னர் விதைகளையும் பரிகரித்தல் வேண்டும். ஒரு கிலோகிராம் விதைகளை பரிகரிக்க கோமாய் 4 கிராம் அல்லது கப்ரான் 6 கிராம் பாவிக்கவும். பரிகரித்த விதைகளை மேடைகளில் இடுவதே சிறந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட அளவு கொண்ட மேடை ஒன்றுக்கு 20 கிராம் விதைகள் போதுமானதாகும். பின்னர் வைக்கோல் அல்லது கிடுகு, வாழைச் சருகினால் பத்திரக் கலவையிட்டும் விதைகளை எறும்பு அல்லது கறையான் சேதப்படுத்தாமல் தடுக்க சிபார்சு செய்யப்பட்ட பூச்சிநாசினி குளோற்பைறிபொஸ் 28 மி.லீ. இனை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறவும். விதையிட்டு 7 நாள்களின் பின்னர் விதைகள் முளைக்கத் தொடங்கும். இச்சந்தர்ப்பத்தில் பத்திரக் கலவையை எடுத்து விடவும். கடும் மழை பெய்யும் காலங்களில் நாற்று மேடையின்மேல் கூரை அமைத்து இளம் நாற்றுக்களைப் பாதுகாக்க வேண்டும். விதைகளை நாற்று மேடையில் விதைத்து 35 நாள்களில் வயலில் நடுகை செய்யலாம்.




**வயலில் நடுகை**

உங்கள் பிரதேசத்தின் நீர் வடிப்பிற்கேற்பவும் நடுகைக் காலத்துக்கு ஏற்பவும் உயர் பாத்திகளிலோ அல்லது தாழ்ந்த பாத்திகளிலோ நடுகை செய்யலாம். நாற்றுக்கள் பங்கசு நோய்களினால் பாதிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ள அவற்றை சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிக் கரைசல் ஒன்றினுள் 30 நிமிடங்கள் அமிழ்த்தி பின்னர் நடுகை செய்யவும். கோமாய் 18 கிராம் அல்லது திராம் 15 கிராம் பாவிக்கவும்.

வயலில் 10 சதுர மீற்றர் இடைவெளியில் நடுகை செய்ய வும். இடைவெளியியைக் குறைக்கும் போது பனி பெய்யும் காலங்களில் வெங்காய இலைகளில் உண்டாகும் ஊதாப்புள்ளி நோயினால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும். பெரிய இலைகளையும் தடித்த அடிப்பரப்பையும் கொண்டதாக வெங்காயப் பயிர்கள் மிக வீரியமாக வளர்ந்து வருவதை அவதானிக்கலாம். வயலில் பெரிய வெங்காயப் பயிர்கள் போன்று தோற்றமளிக்கும்.

**பொ.அற்புதச்சந்திரன்**
*விவசாயப் போதனாசிரியர்,*
*விவசாய ஆராய்ச்சி நிலையம்,*
*திருநெல்வேலி.*

(தொடரும்)

# கோழிப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

யாழ். குடாநாட்டில் கோழிப் பண்ணையாளர்கள் பெரும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றனர். கோழிகள் உரியமுறையில் பராமரிக்கப் பட்டால் மட்டுமே உச்சப் பயனை அடைய முடியும்.

4.பூச்சி மருந்து கொடுத்தல்

கொடுக்கும் காலம்: (வயது) 42 நாள்கள். ஒவ்வொரு 42 நாள்களுக்கும் ஒரு முறை வீதம்.

கொடுக்கும் முறை: பூச்சி மருந்து கொடுப்பதற்கு முதல் நாள் பிற்பகல் பறவைகளுக்கு நீர் கொடுப்பதை நிறுத்தவேண்டும். அடுத்தநாள் காலையிலேயே பூச்சி மருந்து கலந்து நீரைக் குடிக்க கொடுக்கவேண்டும்.

இவ்வாறான நோய் அறிகுறிகள் அதிகமாகப் பரவியுள்ள பிரதேசங்களில்

* முட்டைக் கோழிகளைப் பொறுத்தவரை 2ஆவது கிழமையில் முதலாவது தடுப்பு.

4ஆவது கிழமையில் 2ஆவது தடுப்பு.

5-6 கிழமையில் 3 ஆவது தடுப்பு. கட்டாயம் செய்யப்படவேண்டும்.

* இறைச்சிக் கோழிகளைப் பொறுத்தவரை முதலாவது கிழமை முதலாவது தடுப்பு.

2ஆவது கிழமை 2ஆவது தடவையும் தடுப்புச் செய்யவேண்டும்.

எனவே இந்தக் கட்டுரையிலே விளக்கப் பட்ட கோழிநோய் அறிகுறிகளை அவதானித்து அதற்கான பரிந்துரைகளைக் கைக்கொள்ளுவதன்மூலம் எமது குடாநாட்டுக் கோழி உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் பண்ணையாளர்களும் தமது உற்பத்தியினைப் பாதுகாப்பதுடன் நஷ்டத்தில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

கோழி வளர்ப்பைப் பொறுத்தவரை இலகுவானதும் அனைத்துத் தர மக்களினால் மேற்கொள்ளக்கூடியதும் அதிக இலாபத்தினை மிகக்குறுகிய காலத்திலேயே ஈட்டமுடியுமான ஒரு இலகுவான விவசாயம் ஆகும். பண்ணைகள் சரியாகக் குறித்த ஒழுங்கில் பேணப்படுமாயின் முட்டைக் கோழிகளைப் பொறுத்தவரை

**ஆ.சிவானந்தன்**
*மாவட்ட அலுவலர்,*
*ஐக்கிய நாடுகள் உணவு*
*விவசாய நிறுவனம்,*
*யாழ்ப்பாணம்.*



35% இலாபமும், இறைச்சிக்கோழி வளர்ப்பின் ஊடாக 45% இலாபத்தையும் பெறமுடியும்.

இன்றைய காலகட்டத்தில் முட்டை, இறைச்சிக்கான கேள்விகள் அதிகரித்துள்ளதும் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது. பண்டிகைக் காலங்களின் அரசு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அளவுக்கு எமது உற்பத்திகள் மிக மந்தமாக இருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

எனவே எமது குடாநாட்டு விவசாயிகளுக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது உங்கள் உற்பத்தியைப் பெருக்கி எமது பிரதேசத்தை ஒரு வளம் கொழிக்கும் விவசாய பூமியாக மாற்றுவோமாக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைமிகு கலை வளர்க்கும் திருமறைக் கலாமன்றம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈழத்து நாடக வரலாற்றில் ஆழப்பதித்த பல கலை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற முன்னணி அமைப்பாக யாழ். திருமறைக் கலாமன்றம் திகழ்கின்றது. அந்த வகையில் கலையை உறவுப் பாலமாகப் பயன்படுத்தி மனிதநேயத்தைக் கட்டி எழுப்பும் நோக்குடன் அதன் இலக்கு முன்னெடுக்கப்படுகின்றது. அனைத்து சமூகத்தினரிடமும் சமத்துவத்தையும் சமாதானத்தையும் நீதியையும் மேம்படுத்தல், சிறுவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாத்து பரிகரித்தல், இயற்கை அனர்த்தம், யுத்தங்களினால் உளநல பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஆற்றுப்படுத்தல், இலங்கையின் இணைந்த கலாசாரப் பரிமாற்றத்துக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல், சமூக மேம்பாட்டுக்கான கலைஞர்களை உருவாக்குதல் பிரதான இலக்குகளாகும்.


சமயம் சார் மன்றம் என்ற விமர்சனம் கண்ணோட்டங்களைத் தகர்த்தெறிந்து 1990 ஆம் ஆண்டுக்குப் பின் கலையென்னும் பொதுமைக்குள் இருக்கும் பல்வேறு வடிவங்களையும் எடுத்தாளும் பரந்துபட்ட தன்மையுடன் பிரகாசிக்கத் தொடங்கியது.

சீவகசிந்தாமணி, சத்தியவேள்வி, வளையாபதி, குண்டலகேசி, தீர்க்க சுமங்கலி, சகுந்தலை, பூதத்தம்பி போன்ற இசை நாடகங்களும் இலக்கிய நாடகங்களான ஔவையார், கும்பகர்ணன் என்பனவும் சோழன் மகன், ஏகலைவன், கம்பன் மகன், வளையாபதி, நாட்டுக்கூத்துகளும் 'மானில் மயங்கிய மாதுவும் மன்னனும்' நடன நாடகம் அசோகா, ஊமம் நாடகம் போன்றவை பன்முகத் தன்மைக்கு எடுத்துக்காட்டு.

ஈழத்தமிழர்களின் மரபுவழி நாடகமாகிய கூத்தினை வளர்ப்பதிலும் பேணுவதிலும் கணிசமான பங்களிப்பினை ஆற்றிவருகிறது. தென்மோடி, வடமோடி, ஆட்டக்கூத்து வகைகளின் மரபுகெடாது மேடையேற்றி வருகின்றது. கூத்தின் வடிவத்தைச் செம்மைப்படுத்திப் புதிய கூத்துக்களை எழுதி மேடையேற்றுவதோடு இதுவரை 11 கூத்து நூல்களை வெளியிட்டுள்ளது. நாட்டுக்கூத்து விழாக்கள் கருத்தமர்வுகள்,போட்டிகளை நடத்தி அண்ணாவிமாரை,கலைஞர்களைக் கௌரவித்து வருகின்றது. பல முன்னணி நாட்டுக்கூத்து கலைஞர்களின் குரலில் உருவான 153 கூத்துப் பாடல் மெட்டுக்களை ஒலிப்பேழைகளிலும் நூலுருவிலும் ஆவணமாக வெளியிட்டுள்ளது. அதே போன்று இசை நாடக மரபில் உள்ள 248 பர்டல்களை ஒலிப்பேழையில் நூலாகவும் வெளியிட்டுள்ளது.

திருமறைக் கலாமன்றம் 32 பிரிவுகளில் தனது கலைச் செயற்பாடுகளை ஆற்றிவருகின்றது. திருப்பாடுகளின் நாடகம், பக்தி நாடகம், வரலாற்று நாடகம், சமய நாடகம், நவீன நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், வார்த்தைகளற்ற நாடகம்(ஊமம்) சிறுவர் நாடகம், இலக்கிய நாடகம், கூத்துருவ நாடகம், தெருவெளி நாடகம், ஆங்கில நாடகம் என நாடக அளிக்கைகள் நீண்டு செல்கின்றன.

இந்த மன்றத்தின் அரங்கியல் ஆற்றுகைகள் என்றும் சோடை போவதில்லை என்ற கணிப்பு ரசிகர்கள் மட்டில் இருந்து வருகின்றது. கதாபாத்திரங்களுக்கேற்ற நடிகர் தெரிவு, பாத்திரத்தோடு ஒன்றித்த நடிப்பு, ஒப்பனைச் சிறப்பு,காட்சியமைப்பு,ஒலி,ஒளிப் பிரயோகங்கள்,நெறியாள்கை, சொற்பிரயோகங்கள்,மேலதிக மெருகூட்டல்கள், இடைவெளியற்ற காட்சிப்படுத்தல் அனைத்துக்கும் மேலாக கலைஞர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு போன்றவை சிறந்த தலைமைத்துவங்களின் கீழ் பேணப்படுவதே இந்தச் சிறப்புக்குக் காரணமாகும்.



யேசுதாஸ்

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநராக அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் விளங்குகிறார். கடந்த ஆண்டு யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் இவரது கலைக்கான பெரும் பங்களிப்பைக் கௌரவிக்கும் பொருட்டு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.

பிரதி இயக்குநர்களாக ஜே.யோன்சன் ராஜ்குமார் அவர்களும் மேலதிக பிரதி இயக்குநர்களாக திருமதி செபாலி ரணசிங்க, ஐ.சீ.ஏ.பொஸ்கோ, ஜனாப் முகமட்சாபீர் ஆகியோர் செயற்படுகின்றனர். ஆலோசகர்களாக பி.எஸ். அல்பிரட், சுகத்கங்துங்கே, ஜனாப் எம்.எஸ்.றம்சீன், ஆர்.ஏ.திலகரட்ண, திருமதி றூபி வலன்தீனா,பிரான்சிஸ் ஆகியோருடன் சர்வதேச இணைப்பாளர்களாக ஏ.வீ டேமியன் சூரி(பிரான்ஸ்) சர்வதேச ஆலோசகராக பென்ஜமின், இம்மானுவல்(பிரான்ஸ்) சர்வதேச நிதி திரட்டல் பொறுப்பாளராக பி.ஞானநாயகம்(நோர்வே) ஆகியோரும் தேசிய மட்ட இணைப்பாளர்களாக 20 பேரும், வெளிநாட்டு இணைப்பாளர்களாக 9 பேரும் நிர்வகித்து வருகின்றனர். அத்துடன் ஒவ்வொரு கலைப்பிரிவுகளுக்கும் தனித்தனிப் பொறுப்பாளர்கள் இயங்கி வருகின்றனர். (தொடரும்)

# சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கு அத்திபாரமிடும் பாலர் கல்விக் கழகம்

ஒவ்வொரு குழந்தையும் தன்னுள் பல்வேறு ஆற்றல்களையும் தெய்வீகத்தன்மையையும் கொண்டுள்ளது. குழந்தைகளிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களையும், தெய்வீகத் தன்மைகளையும் சரியாக இனங்கண்டு வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தும் வகையில் பணியாற்றும் பல்வேறு கல்வித்தாபனங்களில் பாலர் கல்விக் கழகமும் ஒன்றாகும்.

அந்தவகையில் முன்பள்ளிச் சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு அத்திபாரமாக இயங்கும் முன்பள்ளிகளை இணைத்து ஒன்றிணைந்த கழகமாகத் தமது சேவையை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய பருவங்களில் பாலர் பருவமும் ஒன்றாகும். இன்றைய பாலர்களே நாளைய தலைவர்கள் அவர்களுடைய கல்வியை உறுதிப்படுத்துவது சமூகத்தினருடைய கடமையாகும்.

1966 ஆம் ஆன்ாடு ஜூன் மாதம் 6 ஆம் திகதி அநேக பெற்றோர்கள், சமூக சேவையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் முதல் பாடசாலையாகப் பிறவுண் வீதி ''ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலை'' ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பாலர் பாடசாலையின் ஆரம்ப ஸ்தாபகர்களாக இ. இரத்தினகோபல், ஈ.வி.கார்த்திகேசு ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். 1966 ஆம் ஆண்டு பாலர் கல்விக்கழத்தின் தலைவராக ஆ.செல்லையா கடமையாற்றினார்.

இவ்வாறு சமூகத் தொண்டர்களின் அளப்பரிய சேவையால் ஆரம்பத்தில் ''யாழ். இளைஞர் கழகம்'' எனும் பெயருடன் பாடசாலைகளை இணைந்த சேவையை வழங்குவதற்காகச் சட்டத்தரணி சி.நாகராசா பாலர்கல்விக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யாழ். இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது ஸ்ரீ விக்னேஸ்வராப் பாலர் பாடசாலை, ஆத்திசூடி வீதி, யாழ். பாலர் பாடசாலை, கொக்குவில் பாலர் பாடசாலை ஆகியன சேவையில் இருந்தன.

அதன்போது யாழ். இளைஞர் கழகத்தின் காப்பாளராக சி.நாகராசாவும், துணைக் காப்பாளராக வைத்திய கலாநிதி வீ.கே.சண்முகநாதன், சுகாதார விரிவுரையாளர் நா. செல்லப்பா, சட்டத்தரணி இ.விஸ்வநாதன் ஆகியோர் சேவை யில் இருந்தனர்.

யாழ்.இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது இதன் தலைவராக இ.இரத்தினகோபாலும் செய [illegible] கூட்டம் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஆண்டு தோறும் வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம்பெறுவதுடன் புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலைகள் பெற்றோர்கள் மத்தியிலும் சமூகத்தினர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றதுடன் பாராட்டுக்களையும் பெற்றுத் தனது சேவையை இடைவிடாது தொடர்ந்த வண்ணமே இருந்தன.

அந்தவகையில் அநேகரின் வேண்டு கோளுக்கிணங்க மாவிட்டபுரம், இளவாலை, கொடிகாமம், கோண்டாவில் போன்ற இடங்களில் பாலர் பாடசாலைகளை மேற்படி கழகம் ஆரம்பித்துவைத்தது.

இதனைத் தொடர்ந்து அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் பாலர் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து தமது கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கக்கூடிய வயது ஆறு வயதாக அரசால் உயர்த்தப்பட்டது. இதன்காரணமாக பாலர் கல்விக் கழகத்தின் பாலர் பாடசாலைகள் அதிகரிக்கத் தொடங்

நிஷா

கின. 22 பாலர் பாடசாலைகள் யாழ்.மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தோற்றம்பெற்றன.

1975 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையின் காரணமாக இளைஞர் மன்றங்கள் அனைத்தும் அரசின் கண்காணிப்புக்குள் உள்வாங்கப்பட்டதால் இளைஞர் கழகம் தொடர்ந்தும் இயங்கமுடியாமல் போனது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.03.18

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2371

வெற்றி எழுத்து: F
வெற்றி எண்கள்: 1 6 3 3 0 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | F | 1 | 6 | 3 | 3 | 0 | 9 | ரூபா. 20,225,411/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 1 | 6 | 3 | 3 | 0 | 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | | | 6 | 3 | 3 | 0 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 10 |
| 3 பரிசுகள் | | | | 3 | 3 | 0 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 105 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 0 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1038 |
| 5 பரிசுகள் | | | | | | 0 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 10101 |
| 6 பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 99763 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 1 | 6 | 3 | 3 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 11 |
| 8 பரிசுகள் | | 1 | 6 | 3 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 97 |
| 9 பரிசுகள் | | 1 | 6 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1005 |
| 10 பரிசுகள் | | 1 | 6 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 9982 |
| 11 பரிசுகள் | F | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 39930 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 7,698.560.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## டிராக்டர் பெட்டி சரிந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நேர்த்திக்கடன் செய்யும் பொருட்டு தூக்குக் காவடி எடுப்பதற்கு தயார் நிலையில் சென்றுகொண்டிருந்த டிராக்டர் பெட்டி தடம் புரண்டதனால் அதில் கட்டப்பட்டி ருந்த மரத்தினால் தாக்கப்பட்டு வீதியால் சென்ற ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் ஏ-9 வீதியில் புலோப்பளை கிழக்கில் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை சிலுவைநாதன் (வயது-47) என்பவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் நேர்த்திக் கடன் செய்யும் பொருட்டு புலோப்பளையில் இருந்து டிராக்டர் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றது. (ஒ-4)

### வேலையாள்கள் தேவை

நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள பான் சிக்கடை ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 0773689179.




### கொறணா சுடு நீர் சவர்

ஒரு வருட உத்தரவாதம்
ரூ-5450/-
டயிட்டஸ் ஸ்டோர்ஸ்
கோட்டை 2439422 லிபர்ட் பிளாசா

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சிற்றம்பலம் குமாரசாமி

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பாட சாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு.கு.உதயமூர்த்தி அவர்களின் அருமைத் தந்தையார் **அமரர் சிற்றம்பலம் குமாரசாமி** அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வதிரி,
கரவெட்டி.

பாடசாலைச் சமூகம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர், கல்லூரி.



## ஆயிரங்காலத்துப் பயிர் – இங்கேயே துளிர்க்கட்டும்

### திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

**BOASCO** போஸ்கோ (நல்லூர் கோவில் முன்பாக)

No.610/3,(252), Point Pedro Road, Nallur, Jaffna. Tel: 021 222 0370, E-Mail:boasc09@yaghoo.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### அபிமன்னன் இரஞ்சிதமலர்
(சிரேஷ்ட பரிசாரகர், தள வைத்தியசாலை, தெல்லிப்பழை)

மலர்வு
25.05.1954

மறைவு
19.02.2011

அன்புக்கு அர்த்தம் அறிந்திட வைத்தாய்
அந்த அன்பையே எம் மீது அபிஷேகம்
செய்தாய் வன்பையே செய்தும் மானிடர் உயிர்
பறிக்கும்- அந்த துன்மக் காலன் கவர்ந்தானோ
உன்னுயிர் தன்னை. ஆறாது ஆற்றாது
அழுதாலும் தீராது ஆனாலும் வழி என்ன தாயே?
அணையாத விளக்கொன்று எப்போதும்
எனக்குண்டு என்ற என் எண்ணம் என்னாச்சு
கண்டாய் என்றும் என் சுமைதாங்கி கல் நீயே
ரஞ்சம்மா வாழ்ந்திருந்து மகிழந்திருந்தேன்
நீயிருந்தாய் தலை நிமிர்ந்தேன்- இன்று யார்
இருந்தும் எவை இருந்தும் நீ இல்லை நான்
இருந்தும் நானாக நான் இல்லையே.

இன்று 21.03.2011 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளை மற்றும்
சகோதர, சகோதரிகள், உறவினர்கள்.

கோயில் வீதி,
மல்லாகம்.

(49.27.20)

## PATRICIAN INSTITUTES
### பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## ஆரம்பம்:- 28.03.2011

### மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

TVEC REG-No- P25/0021

### *Computer Courses*

Advanced in Computer Programming, Diploma in Microsoft Office, Diploma in Desk Tip Publishing, Diploma ir. Video Editing, Diploma in Type Setting, Diploma in Computerized Accounting. Diploma in Software Engineering, Diploma in Micro media, Diploma in Web Multimedia, Professional Diploma in Graphic Design, Computer Hardware Technology, Internet & E-mail. General Information Technology (GIT), Information & communication Technology (ICT), Children's Kids

Short Hand Typing (English), Short Hand Typing (Tamil), General Moto Mechanism, Motorcycle Mechanism, General Electrician (Wiring & Re Winding) Radio & T.V Repairing, Lathe Machine Operation, Arc Welding, Carpentry (with use of machinery), Refrigeration and Air conditioning.

குறிப்பு:-
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



மேலதிக விபரங்களுக்கு:
Register, Patrician Institute,
61 (59), St. Patrick's Road, Jaffna.
T.P: 0212226148
Fax: 6148
E-mail: spitee@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இம்முறை எதிர்பார்த்தளவு நெல் கிடைக்கவில்லை

## அரசின் நிர்ணயவிலை குறைவே காரணம்

கொழும்பு, மார்ச்21

பெரும்போகத்தில் நெல் கொள்வனவை நெல் சந்தைப் படுத்தல் சபை ஆரம்பித்துள்ள போதிலும் கடந்த மூன்று வார காலத்துள் விவசாயிகளிடமிருந்து 600 மெற்றிக்தொன்களுக்கும் குறைவான நெல்லையே கொள்வனவு செய்ய முடிந்துள்ளதாக மேற்படிச் சபை தெரிவிக்கின்றது.

அரசின் நிர்ணய விலையை விடத் தனியார் துறை வர்த்தகர்கள் விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதே இதற்குக் காரணம் என்று கூட்டிக் காட்டப்படுகிறது.

நெல்சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பீ.ஜயசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

நாட்டரிசிக்கான ஒருகிலோ நெல் 28 ரூபாவாகவும் சம்பா நெல் ஒரு கிலோ 30 ரூபாவாகவும் அரசின் நிர்ணய விலைகள் நிலவுகின்றன.

தனியார்துறை நாட்டரசிக்கு ஒரு கிலோ நெல்லுக்கு 28 முதல் 30 ரூபா வரையிலும் சம்பா நெல் ஒரு கிலோவுக்கு 32 ரூபா முதல் 33 ரூபா வரையிலும் வழங்கி விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார்துறை விவசாயிகளுக்கு அதிகரித்த விலையை வழங்கி நெல்லைக் கொள்வனவு செய்வது வரவேற்கத்தக்கதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்கு நாடு முழுவதும் நெல் சந்தைப் படுத்தல் சபையினால் 35 மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அவை அவற்றின் மூலமாகவும் 600 மெற்றிக் தொன்களுக்கும் குறைவான நெல்லையே கொள்வனவு செய்ய முடிந்துள்ளது.

இந்தத் தொகையில் 500 மெற்றிக் தொன் வரையிலான நெல் கிளிநொச்சி மாவட்டத்திலேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-22)

# சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி மருத்துவ மூலிகைப் பயிர்ச்செய்கை

கொழும்பு, மார்ச்21

சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி அபூர்வமான மருத்துவ மூலிகைகளைப் பயிர் செய்யும் திட்டமொன்றை சிறைச்சாலைகள் திணைக்களமும் தேசிய மருத்துவ அமைச்சும் இணைந்து ஆரம்பித்துள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் பல்லேகல, வீரவில, வட்டரெக்கல, வாரியபொல, குருவிட்ட, மித்திரிகல, கந்தேவத்த, கல்தென ஆகிய திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் மருத்துவ மூலிகைகள் பயிர்செய்யப்படவுள்ளதாகத் தேசிய மருத்துவ அமைச்சின் செயலாளர் பந்துல தஹநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விதம் பயிர் செய்யப்படும் மருத்துவ மூலிகைகளை உரிய பருவத்தில் அரச மற்றும் தனியார் மருத்துவப் பிரிவுகளுக்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறைக்கைதிகளுக்கு மருத்துவ மூலிகைகளைப் பயிர்செய்யும் முறைமைகள் மற்றும் அவற்றைப் பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது.

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் சமுதாய மயப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர்களைத் தமது சுயதொழில் முயற்சியாக மருத்துவ மூலிகைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதே இந்தச் செயற்றிட்டத்தின் குறிக்கோளாக இருப்பதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.(ம-22)

# நாகதம்பிரான் ஆலயப் பொங்கலில் இம்முறை திருட்டுக்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி,மார்ச் 21

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இந்தவருடப் பொங்கல் விழாவின் போது பெறுமதி மிக்க நகைகள் மற்றும் பணம், பொருள்கள் என்பன களவாடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரி வித்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பொங்கல் விழாவின்போது இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நிகழ்ந் துள்ளன. இதில் ஏழு தாலிக்கொடிகள், நான்கு சங்கி லிகள், இரண்டு அட்டியல்கள் மற்றும் பணம், கைத்தொலைபேசி, பெறுமதிமிக்க பொருள்கள் என்பன களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒருபோதும் இல்லாதவாறு இந்தவருடம் பொங்கல் விழாவில் இவ்வாறான திருட்டுச்சம்பவம் இடம்பெற்றமை மனவருத்தத்தைத் தருவதாக ஆலய நிர்வாகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர். (க-6)


## திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடம் கோரல்

திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தினால் கணக்காளர் பதவி வெற்றிடத்துக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வயது எல்லை 18-45)

**பதவி வெற்றிடம்**

1.கணக்காளர் - நிரந்தரம் 10700-13200
சம்பளக் குறியீட்டு இல.104/10 120X10-130X10

**தகைமைகள்**

1.கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/ கணக்காளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 3வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது 12 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்காளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 6 வருடத்துக் குக் குறையாத அனுபவம்.

அல்லது

2.ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் மேற்பார்வைத் தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு/ கணக்காய்வு வேலைகளில் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

3.கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பரீட்சை சான்றிதழ்/ க.பொ.த.பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் மேற்பார்வைத்தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு/ கணக்காய்வு வேலைகளில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**மேற்படி பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் யாவும் 05.04.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர் திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம், திருவையாறு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணக்காளர் பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.**

கூட்டுறவுச் சேவையிலுள்ள
ந.கௌரிதாசன்
தலைவர்.

ச.தசவரன்
பொதுமுகாமையாளர்.


# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 861 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "Z" என்ற ஆங்கில எழுத்தும் 07/38/59/68 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 61 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

முதலாம் பரிசு வெல்லப்படவில்லை.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 02 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 252 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,329 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 173,224 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 25,725 பேருக்கு ஆறாம் பரிசாகத்தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


## உத்தியோகபூர்வ முடிவுகள்

சுப்ரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 595
திகதி 19/03/2011

சுப்பர் இலக்கம்: 11

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 18 39 50 56

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,660,124.00 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 05 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 189 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 369 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 8,861 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 5,076 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 126,835 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 20,305 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.6,028,940.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வர்த்தமானிக்கு உட்பட்டு பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ. 10,764,589.60

தேசிய லொத்தர் சபை





## வேலணை வடக்கு, சோளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் ஆலய திருக்குடமுழுக்குப் பெருவிழா அழைப்பு

அன்பர்களே,

நிகழும் விகிர்தி வருடம் பங்குனித் திங்கள் பத்தாம் நாள் 24.03.2011 வியாழக்கிழமை அனுஷ நட்சத்திரமும் இடபலக்கின மும், சித்தயோகமும் கூடிய காலை 9.54 நிமிடத்தில் திருக்குட முழுக்குப் பெருவிழா நடைபெற ஞானவைரவர் பெருமான் திருவருள் கூடியுள்ளது. இந்நிகழ்விலும் இதற்கு முன்னர் நிகழவிருக்கும் பூர்வாங்க நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு எம்பெருமானின் பேரருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**

**எண்ணெய்க்காப்பு நாளை (22.03.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் (23.03.2011) புதன்கிழமை ந.ப.12.00 மணி வரை இடம்பெறும்.**

(2228) (41-20-27) ஆலய பரிபாலனசபை.


# மெய்வன்மைப் போட்டி

காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி மங்களேஸ்வரி தேவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவு ஆலோசகர்களுக்கான புதிய ஒழுங்கமைப்புச் சபை

## கனேடிய அரசு அதிரடி

றொறண்டோ, மார்ச் 21

கனடாவில் குடிவரவு ஆலோசகர்களை ஒழுங்கமைப்பதற்கான புதிய ஒழுங்கமைப்புச் சபையொன்று உருவாக்கப்படவுள்ளது.

குடிவரவு மோசடிகளைத் தடுப்பதற்கான சமஷ்டி அரசின் வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக இது அமுலுக்கு வரவுள்ளது.

போலியான மற்றும் நம்பிக்கை அற்றவர்களிடம் குடியேற்ற வாசிகள் சிக்கிவிடாமல் தடுப்பதற்காகவே இந்தப் புதிய சபை உருவாக்கப்பட உள்ளதாக கனடாவின் குடிவரவு அமைச்சர் ஜேஸன் கெனி தெரிவித்துள்ளார்.

புதிதாகக் குடியேறுபவர்களின் நம்பிக்கை மற்றும் கனவுகளை தவறாகப் பயன்படுத்தி இலாபமீட்டும் முயற்சியில் ஒரு கூட்டம் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பதிவு செய்யப் படாத, மோசடியான, அனுமதிப் பத்திரம் அற்ற குடிவரவு ஆலோசகர்களிடமிருந்து புதிய குடியேற்றவாசிகளைக் காப்பாற்ற வேண்டும்.

இவர்கள் தனி நபர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான டொலர்களை அறவிடுகின்றனர். ஆனால் குடியேற்ற வாசிகளுக்கு இவர்களால் எந்தப் பயனும் கிடைப்பதில்லை.

இதனால் இந்தத் துறையில் தொழில்சார் பண்புகளோடு உண்மையாக ஈடுபடுபவர்களின் பெயருக்கும் மாசு ஏற்படுகின்றது. - என்றார் கெனி.



பெரு நாட்டில் ஏப்ரல் 10ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இதனையொட்டி தலைநகர் லிமாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிபர் வேட்பாளராக கெய்கோ பியூஜிமோரியை அறிமுகப்படுத்தும் முன்னாள் அதிபர் ஆல்பர்டோ.

# ஜப்பானுக்கு மேலும் ஒரு பெரிய ஆபத்து

ஜப்பானில் வெடித்து சிதறிய அணு உலைகளால் அடுத்த சில நாள்களில் மற்றொரு செர்னோபில் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பிரான்ஸைச் சேர்ந்த அணு சக்தி நிபுணர் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் நாட்டின் செர்னோபில் அணுமின் நிலையத்தில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட மின்தடையால் அணு உலை பயங்கரமாக வெடித்தது.

அதனால் வெளியான கதிர்வீச்சில் உக்ரைன் மட்டுமின்றி அண்டை நாடுகளைச் சேர்ந்த 57 பேர் உடனடியாக பலியாகினர். அணுக் கதிர்வீச்சால் ஏற்பட்ட புற்றுநோய்க்கு 4000 பேர் இறந்தனர்.

25 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது ஜப்பானில் பூகம்பத்தால் பியூகுஷிமா டைச்சி அணுமின் நிலையத்தின் 3 அணு உலைகள் அடுத்தடுத்து வெடித்துச் சிதறின. அவற்றில் இருந்து கதிர்வீச்சு பரவி வருவதாக அஞ்சப்படுகிறது.

இது பற்றி பிரான்ஸின் கதிரியக்க பாதுகாப்பு மற்றும் அணுசக்தி மையத்தின் பாதுகாப்பு பிரிவு அதிகாரி தெய்ரி சார்லஸ் கூறியதாவது:

ஜப்பான் அணு உலைகள் வெடிப்பால் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மிக ஆபத்தானது. அடுத்த 48 மணி நேரம் மிக முக்கியமானது. நெருக்கடியானது. சூழ்நிலை மிகவும் அவநம்பிக்கை அளிக்கிறது. கடந்த சில நாள்களாக அணு உலைகளை குளிர்விக்கும் எல்லா நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்துள்ளன. எனவே, மற்றொரு செர்னோபில் துயரம் ஏற்படுமோ என்ற அச்சம் அதிகரித்துள்ளது. - என்று தெய்ரி சார்லஸ் தெரிவித்தார். (ம)

# லிபியாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

லிபியாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுவிற்சர்லாந்து அறிவித்துள்ளது.

குறிப்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதாக சுவிற்சர்லாந்து அரசு குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம் உடனடியாக அமுல் படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக அந்த அரசு அறிவித்துள்ளது.

லிபிய மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்க முற்படும் நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை, லிபியாவில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறு வனங்களுக்கு சுவிற்சர்லாந்து இரண்டு மில்லியன் சுவிஸ் பிராங்குகளை உதவியாக வழங்கியுள்ளது.(ம)

# பிள்ளைகளை காருக்குள் வைத்து தண்ணீரில் மூழ்கடித்த தந்தை

பெர்மிங்ஹாம், மார்ச் 21

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது இரண்டு பிள்ளைகளையும் காருக்குள் வைத்து நீரில் மூழ்கடித்து அதில் ஒரு பிள்ளையின் மரணத்துக்குக் காரணமாயிருந்த தந்தை நீதிமன்ற விசாரணைகளில் குற்றவாளி என்று நிரூபிக்கப் பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

42 வயதான கிரேடி என்ற தந்தையே தனது ஆறு வயதான மகன் மற்றும் ஐந்து வயதான மகள் ஆகியோருக்கு இந்த நிலையை ஏற்படுத்தினார்.

மகன் காரிலிருந்து தண்ணீரில் குதித்து எப்படியோ கரை சேர்ந்து உயிர் தப்பினான்.

ஆனால் மகளை பொலிஸார் விரைவாகச் செயற்பட்டு தண்ணீரில் இருந்து காப்பாற்றிய போதிலும், மூன்று தினங்களின் பின் ஆஸ்பத்திரியில் உயிர் இழந்தார்.

பெர்மிங்ஹாம் நீதிமன்றத்தில் மூன்று வாரங்களாக இந்த விசாரணை இடம்பெற்றது. இறுதியில் ஜூரிமார் இவரை குற்றவாளியாகக் கண்டனர்.

இந்தத் தண்டனை நியாயமானது என பிள்ளைகளின் தாய் கருத்துத் தெரிவித்தார். ஆனால் இது எமது குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக்கூடியது அல்ல.

எனது மகளின் இழப்பு, அதனால் இழந்த மகிழ்ச்சி என்பன ஈடு செய்ய முடியாதவை என்று அவர் கூறினார்.

**COMPUTER MEGA SALE**

2011 மார்ச் 19, 20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் 22,23 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

அரச உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு விசேட விலை

**மேலதிக தொடர்பு:**
**071 8570609, 075 9997700**

# மரண அறிவித்தல்

## திருமதி சிவலிங்கம் நாகரத்தினம்
### (ரத்தினம்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் நாகரத்தினம் 18.03.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் – குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இ.ராமலிங்கம் – பாருவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் சதீஸ் (கனடா), காலஞ்சென்ற சபேஸ் மற்றும் ரமேஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கவிதா (கனடா), சுபதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கிறிஸ்ணி, கிறிஸ்ரீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் – புவனேஸ்வரி, செல்லத்துரை – ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி தங்கராசா சரசுவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஏழாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(2233)(31.20.47)

# கண்ணீர் அஞ்சலி



குரும்பசிட்டியைச் சேர்ந்த

அமரர் **சண்முகராஜா குமாரகுருகுலசிங்கம்**

19.03.2011 அன்று இறைவனடி எய்தி விட்டார்.

இவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**போட்டோ சிறி,**
**கே.கே.எஸ். வீதி,**
**கோண்டாவில்.**

**துயரால் வாடும்:**
**மீரா, வக்ஷலன்.**

# கண்ணீர் அஞ்சலி

எனது நண்பன் **லயன் தி.சிவதாசனின்** (கரசன் எலக்றிக்கல், யாழ்ப்பாணம்) அன்புத் தாய்

## திருமதி திருநாவுக்கரசு செல்லம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**லயன் க.மு.பத்மநாதன் PMJF குடும்பத்தினர்.**
மாவட்ட இணைப்பாளர் / கழகச் செயலாளர். உரிமையாளர், வெஸ்கோ (யாழ் மருந்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா மீது போர் தொடுத்தது அமெரிக்கா

டுனிஷியா,மார்ச்21

ஆபிரிக்க நாடான டுனிஷியா, எகிப்தில் மக்கள் புரட்சி மூலம் அந்த நாட்டு அதிபர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மக்கள் மீதான அடக்கு முறையை நிறுத்துமாறு அமெரிக்கா கடாபியிடம் கோரிக்கை விடுத்த போதும் அது நிறுத்தப்படாமையால் லிபியா மீது அமெரிக்கா போர் தொடுத்தது.

இதே புரட்சி பக்கத்து நாடான லிபியாவிலும் ஏற்பட்டது. 41 ஆண்டுக்ளாக தொடர்ந்து பதவியில் இருக்கும் கடாபிக்கு எதிராக மக்கள் திரண்டனர். ஆனால் மக்கள் புரட்சிக்கு அடிபணியாத கடாபி அவர்கள் மீது அடக்கு முறைகளை கையாண்டார்.

போராட்டக்காரர்கள் மீது ராணுவ தாக்குதல்கள் நடத்தப்பட்டன. புரட்சி படையினர் 4 நகரங்களைக் கைப்பற்றி இருந்தனர்.

அந்த நகரங்கள் மீது போர் விமானங்கள் மூலம் குண்டுவீசி 3 நகரங்களை ராணுவம் மீட்டது. இன்னொரு முக்கிய நகரமான பென்காசி நகரத்தை பிடிக்கவும் விமான தாக்குதல் நடந்து வந்தது. ராணுவ தாக்குதலில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

எனவே ராணுவ தாக்குதலை நிறுத்தும்படி ஐ.நா. சபை அதிபர் கடாபியை கேட்டுக்கொண்டது. அதே போல அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் கடாபிக்கு வேண்டுகோள் விடுத்தன. ஆனால் கடாபி இதை ஏற்கவில்லை. தொடர்ந்து ராணுவ தாக்குதலை நடத்தி வந்தார்.

இதையடுத்து ஐ.நா. பாதுகாப்பு சபை கூடி இதுபற்றி ஆலோசனை நடத்தியது. அப்போது லிபியா பொதுமக்களை காப்பாற்ற ராணுவ நடவடிக்கை எடுக்க ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து அமெரிக்கா, லிபியா மீது தாக்குதல் நடத்த தயாரானது.

இது தொடர்பாக பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற நட்பு நாடுகளுடன் ஆலோசனை நடத்தியது.

நிலைமை மோசமானதை தொடர்ந்து கடாபி போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்தார். ஆனாலும் பென்காசி நகரை மீட்க தொடர்ந்து ராணுவ தாக்குதல் நடந்து வந்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா, லிபியா மீது திடீர் போர் தொடுத்தது.

லிபியா அருகே அமெரிக்கா விமானந் தாங்கி போர் கப்பல்களை தயாராக நிறுத்தி வைத்திருந்தது. அதில் இருந்து புறப்பட்ட போர் விமானங்கள் லிபியா மீது சரமாரியாக குண்டுகளை வீசின. கப்பலில் இருந்து ஏவுகணைகளும் வீசப்பட்டன. அமெரிக்காவுடன் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளும் சேர்ந்து லிபியா மீது தாக்குதலை நடத்தின. (ம)

## கூட்டுப் பயிற்சியில் பாக். - சீன விமானப் படைகள்


இஸ்லாமாபாத், மார்ச் 21

பாகிஸ்தான் மற்றும் சீனாவின் விமானப் படை பிரிவுகள் முதன் முறையாக இணைந்து போர் விமானக்கூட்டு பயிற்சியில் ஈடுபட உள்ளன.

இந்தக் கூட்டு பயிற்சிக்கு கடவுளின் பெயரான ஷாகீன்-1 என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பாகிஸ்தானில் சீனா முதன்முறையாக போர் பயிற்சியில் இறங்கியுள்ளது.

இது குறித்து இருநாட்டு தரப்பிலும் கூறியதாவது:

இரு நாடுகளிடையேயான நட்புணர்வு அடிப்படையிலும் இருநாட்டு ராணுவத்தினருக்கு பயன் கிடைக்கச் செய்வதே பயிற்சியின் நோக்கமாகும் என்று தெரிவித்தனர். இந்த 2011ஆம் ஆண்டை பாக்.-சீனாவின் நட்புறவு ஆண்டாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ம)



ஜப்பானில் ஏற்பட்ட இயற்கை சீரழிவுகள் குறித்து, இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியிடம் எடுத்துரைக்கும் ஜப்பான் தூதர் ஷிகிரோஅட்சுமி. அருகில் பாக்., வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரபானிகர்.

## ரொறன்டோ பிரதான நீர்மின் நிலையத்தில் தீ

ரொறன்டோவின் பிரதான நீர் மின் நிலையத்தில் வெள்ளிக் கிழமைநண்பகல்கடும்தீமூண்டது.

இதனால் 401 ஆவது இலக்க பிரதான வீதி மூடப்பட்டது. வீதியின் வடமேற்கு முனை வரை புகை பரவியது.

பியர்ஸன் விமான நிலையத்துக்கான மின்சார வினியோகமும் தடைப்பட்டது. ஆனால் விமான சேவைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாமல் உடனடியாக விமான நிலையத்தின் ஜெனரேட்டர்கள் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 80 தீயணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர் மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இந்தத் தீ பரவக் காரணம் என்று அறிவிக்கப்பட்டது.(ம)

## லிபியாவில் பிரான்ஸ் விமானமும் தாக்குதல்

டுனிஷியா,மார்ச்21

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் லிபியா மீது பிரான்ஸ் படைகளும் தாக்குதலைத் துவங்கின. லிபியா வான் எல்லை மீது விமானம் பறக்க ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் தடை விதித்ததைத் தொடர்ந்து, கூட்டுப் படைகள், லிபியத் தலைவர் கேணல் கடாபி படைகள் மீது தாக்குதலைத் துவங்கின.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் படைகளின் ஏவுகணைகள் லிபியாவின் 20 விமான பாதுகாப்பு இலக்குகளை தாக்கின. யு.எஸ்.சும், யு.கே.யும் 110 ஏவுகணைகளுக்கு மேல் வீசியதாக பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களின் மையப் பகுதியாக உள்ள பெங்காசியில், லிபியா வீரர்கள் தாக்கினர். அவர்களை ஒடுக்குவதற்கு பிரெஞ்சு விமானம் தாக்குதலைத் தொடர்ந்தது.

கூட்டுப் படைகளுக்கு எதிராக கடாபி சவால் விடுத்தால் லிபியாவை காப்பாற்ற ஆயுதக் கிடங்குகளை பொது மக்களுக்காக திறந்து விடப்போவதாகவும் அவர் முழக்கமிட்டார்.

லிபிய வான் பரப்பில் பறந்து இராணுவ வாகனம் ஒன்றின் மீது பிரெஞ்சு போர் விமானமொன்று சனிக்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளது.

லிபிய வான் பரப்பில் விமானங்கள் பறப்பதற்கான தடைக்கு ஐக்கிய நாடுகள் சபை அனுமதி வழங்கிய பிறகு நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாகும்.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பென்காசி நகரில் இருக்கும் பொது மக்களை பாதுகாக்கவும், கிளர்ச்சியாளர்கள் மீது கடாபி தாக்குதல்கள் நடத்துவதை தடுக்கவும் பிரான்ஸ் விமானப் படை ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அதிபர் நிக்கலா சர்கோசி தெரிவித்துள்ளார். (ம)

## ஜப்பானில் பாதிக்கப்படட்ட மக்களுக்கு ஆதரவளிக்க சுவிற்ஸர்லாந்தில் ஊர்வலம்

ரொறன்டோ,மார்ச் 21

ஜப்பானில் பூமியதிர்ச்சி மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் சுவிற்சர்லாந்தில் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

அணு சக்திப் பயன்பாட்டுக்கு இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்காக மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது. (ம)

## தொடர்ந்து குளிரூட்டப்படும் அணு உலைகள்

டோக்கியோ,மார்ச் 21

ஜப்பானின் புக்குஷிமா அணுமின் நிலையத்தின் ஆறு உலைகளையும் குளிரூட்டும் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

நிலையத்தின் அருகில் உள்ள பண்ணைகளில் உற்பத்தியாகும், கீரைகள் மற்றும் பால் வகைகளில், நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட கதிர்வீச்சின் பாதிப்பு அதிகளவில் இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஜப்பானில் நேற்று முன்தினம் மீண்டும் 6.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புக்குஷிமா அணுமின் நிலையத்தில், ஆறு உலைகளுக்கும், நிலையத்தின் வெளிப்புறத்தில் இருந்து மின்சாரப்பளை கொடுத்து, அதன் மூலம், நீரை உட்செலுத்தும் பம்புகளை இயங்க வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாம் எண் உலையில் யுரேனியத்தோடு, அதிக அபாயம் கொண்ட புளுட்டோனியமும் இருப்பதால், தீயணைப்பு இயந்திரங்கள் தொடர்ந்து கடல் நீரை அதன் மீது பாய்ச்சி வருகின்றன.

தற்போது 300 பணியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் இந் தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். உலைகளில் வைக்கப்பட்டுள்ள யுரேனியம் மற்றும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட யுரேனியம் என, இரண்டு வகை எரிபொருள்களில் இருந்து வெளிவரும் வெப்பத்தைத் தணிக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மின்சாரம் மூலம் பம்புகள் இயங்கினாலும் கூட, உலைகளில் வெப்பம் தணியுமா என்பது சந்தேகமே. தற்போது ஆறாம் எண் உலையில், டீசல் ஜெனரேட்டர் மூலம் நீர்ப் பம்பிகள் இயக்கப்பட்டு வருகின்றன. உலைகள் தொடர்ந்து செயல்படுமா அல்லது மூடப்படுமா என்பது இன்னும் ஒரிரு நாள்களில் தெரிந்துவிடும். (ம)

## ஜப்பானிய பூகம்பத்தினால் பலியானோர், காணாமற்போனோர் 20 ஆயிரம் பேர்

டோக்கியோ, மார்ச் 21

ஜப்பானில் கடந்த 4 ஆம் திகதி ஏற்பட்ட 9.1 ரிச்டர் அளவிலான பெரும் பூகம்பம் மற்றும் ஆழிப்பேரலையால் பலியானோர் மற்றும் காணாமல் போனோரின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக ஜப்பானிய தேசிய பொலிஸ் முகவரகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுவரை 8133 பேர் உயிரிழந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 12, 272 பேரை காணவில்லை என அம்முகவரம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் மியாகி பிராந்தியத்திலேயே அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அங்கு 4882 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை -

15000 சடலங்களை வைத்திருப்பதற்கு தேவையான வசதிகள் தேவைப்படும் என்று மியாகி பிராந்திய பொலிஸ் உயரதிகாரி நவோட்டோ தகுவெச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவாட்டா பிராந்தியத்தில் 2525 பேரும் புகுசிமா பிராந்தியத்தில் 670 பேரும் இறந்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவை ஆதரித்து சீரஞ்சீவி பிரசாரம்



தமிழ்நாட்டில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தேர்தல் பிரசாரம் நடிகர் சிரஞ் சீவி பிரசாரம் செய்யவுள்ளார்.

நடிகர் சிரஞ்சீவி பிரஜா ராஜ் ஜியம் என்ற கட்சியை நடத்தி வருகிறார். அவர் தனது கட் சியை காங்கிரசுடன் இணைக்க போவதாக ஏற்கனவே அறிவித் திருந்தார். இந்த நிலையில் தமிழ் நாட்டில் காங்கிரஸ்- தி.மு. க. கூட்டணியை ஆதரித்து சிரஞ்சீவி தேர்தல் பிரசாரம் செய்கிறார்.

சிரஞ்சீவி தற்போது திருப்பதி யில் உள்ளார். உடனே டில்லி வருமாறு காங்கிரஸ் மேலிடம் அழைப்பு விடுத்தது. இதை யேற்று சிரஞ்சீவி இன்று டில்லிக் குச் செல்கிறார். காங் கிரஸ் செயலாளர் அகமது பட்டேல், தமிழ் நாட்டுக்கான காங்கிரஸ் பொறுப் பாளர் குலாம்நபி ஆசாத் ஆகியோரை அவர்சந்திக்கவுள்ளார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்யுமாறு சிரஞ்சீவி யிடம் கேட்கப்பட்டுள் ளது.


இதனையேற்று சிரஞ்சீவி தமிழ்நாட்டில் பிரசாரம் செய்ய உள்ளார். ஆந்திரா எல்லையை அண்டியுள்ள 35 தொகுதிகளில் சிரஞ்சீவி வாக்குக் கேட்பார். அத்துடன் அவருக்கு தமிழும் நன்றாக தெரியும்.

இதனால் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும், தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி வேட் பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யவுள்ளார்.

சிரஞ்சீவி தனது கட்சியை அடுத்த மாதம் காங்கிரசுடன் இணைக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (201)

# அணு உலைப் பாதுகாப்பு குறித்து மறு ஆய்வு செய்வது அவசியம்

## மன்மோகன் சிங் வலியுறுத்து



புதுடில்லி, மார்ச் 21

அணு உலை பாதுகாப்பு குறித்து மறு ஆய்வு செய்வது அவசியம் என பிரதமர் மன் மோகன் சிங் வலியுறுத்துள்ளார்.

புது டில்லியில் கடந்த வெள் ளிக்கிழமை நடை பெற்ற 'இந் தியா டுடே' பத்திரிகையின் மா நாட்டில் அவர் பேசியதாவது:

ஜப்பானில் இடம்பெற்ற நில நடுக்கத்தையடுத்து தாக் கிய ஆழிப் பேரலை காரணமாக அணு உலைகளில் வெடிப்பு ஏற் பட்டு மிகப் பெரிய அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். எமது நாட்டில் உள்ள அணு உலைகளின் பாதுகாப்பு குறித்து மறு ஆய்வு செய்வதற்கு அணுசக்தித் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார்.

இந்திய அணுமின் சக்தி கழ கம் தான் நாட்டில் உள்ள அணு உலைகளை நிர்வகித்து வருகி றது. அணு உலைகளின் பாதுகாப்பு குறித்து மறு ஆய்வு செய்து வரு வதாகவும், தேவைப்பட்டால் பாது காப்பு அதிகரிக்கப்படும் என் றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அணு உலைகளின் பாதுகாப்பு குறித்து இந்திய அணுமின் சக்தி கழகத்தின் தலைவர் எஸ்.கே. ஜெயின் சென்னையில் கூறிய தாவது:

அணு உலைகளின் பாதுகாப் பில் எந்தவித சமரசமும் செய்து கொள்ளப்படமாட்டாது. அதே நேரத்தில், குஜராத்தில் பூஜ் நகரில் நில நடுக்கம் ஏற்பட்ட போதும், தமிழ்நாட்டில் சுனாமி தாக்கியபோதும், இந்திய அணு உலைகள் தாக்கு பிடித்துள்ளன.

கூடங்குளத்தில் அமைக்கப் பட்டு வரும் அணு உலைக ளில் போதிய பாதுகாப்பு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

அணு உலைகளை இயக்குப வர் இல்லாத போதும், ஆபத்து ஏற்பட்டால் உடனடியாக செயற் பாட்டை நிறுத்தும் வகையில் இந்த அணு உலைகள் வடி வமைக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர். (201)

மாபெரும்
உதைபந்தாட்டம்
கரபந்தாட்டம், கிரிக்கெட்
சுற்றுப் போட்டி - 2011





2011 சிங்கள, தமிழ் புத்தாண்டு நிறைவையொட்டி கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபரினால் நடத்தப்படும் இம் மாபெரும் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், கிரிக்கெட் சுற்றுப்போட்டி கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்படவுள்ளது.

இடம்: ★ பூநகரி பொது விளையாட்டு மைதானம்,
★ கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம்

காலம் : சித்திரை மாதம் 02 ஆம் 03 ஆம் திகதி

குறிப்பு:

உதைபந்தாட்டம்
★ 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி
★ அணியில் பிரதி ஆட்டக்காரர் உட்பட 11 வீரர்கள் இடம்பெறுவர்

கரபந்தாட்டம்
★ அணியில் பிரதி ஆட்டக்காரர் உட்பட 08 வீரர்கள் இடம்பெறுவர்

கிரிக்கெட்
★ 06 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி
★ அணியில் பிரதி ஆட்டக்காரர் உட்பட 08 வீரர்கள் இடம்பெறுவர்
★ சகல அணி வீரர்களும் சீருடையுடன் பங்குபற்றவேண்டும்.
★ விண்ணப்பப்படிவத்தில் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கையொப்பம் உள்ளடக்கப்படவேண்டும்.
★ போட்டி நடைபெறும் தினத்தன்று கிராமசேவகரின் உறுதிப் படுத்தப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் கையளிக்கவேண்டும்.

தங்கள் விண்ணப்பப்படிவங்களை 2011.03.25 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், பூநகரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். காகித உறையின் இடதுபக்கமேல்மூலையில் தாங்கள் பங்குபற்றும் போட்டி எது என்பதை எழுதவேண்டும்.

(48,19,20)

மேலதிக விபரங்களுக்கு: 023 323 8051 / 0777714210 தொடர்புகொள்ளவும்.

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்கமீண்டும் யாழ்நகரில்........
எந்த முதலீடும் இல்லாமல்
மாதம் ரூபா 50,000/= க்கு மேல்
சம்பாதிக்க ஆசையா....?? !!!!



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா??? ஆனால் என்ன வேலை செய்வது, என்று தெரியவில்லை??? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சம்பாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணனியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணனி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடை பெறும் நாள் : 22ந் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி

பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
வறுமைக்கோட்டிற்கு கீழ் பட்டவர்களுக்கு விசேட கட்டணம்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 109
திகதி - 19.03.2011
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து V | அதிர்ஷ்ட இலக்கம் 08 | வெற்றி இலக்கம் 0 6 9 4 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 08 | 0 | 6 | 9 | 4 | 9 | ரூ. 13,044,276.00 | பரிசு - |
| 1 பரிசு | | 08 | 0 | 6 | 9 | 4 | 9 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 0 | 6 | 9 | 4 | 9 | ரூ. 100,000.00 | பரிசு 01 |
| 3 பரிசு | | | | 6 | 9 | 4 | 9 | ரூ. 10,000.00 | பரிசு 21 |
| 4 பரிசு | | | | | 9 | 4 | 9 | ரூ. 1,000.00 | பரிசு 190 |
| 5 பரிசு | | | | | | 4 | 9 | ரூ. 50.00 | பரிசு 1929 |
| 6 பரிசு | | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசு 18656 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 | 6 | 9 | 4 | | ரூ. 1,000.00 | பரிசு 16 |
| 8 பரிசு | | | 0 | 6 | 9 | | | ரூ. 100.00 | பரிசு 198 |
| 9 பரிசு | | | 0 | 6 | | | | ரூ. 50.00 | பரிசு 1944 |
| 10 பரிசு | V | | | | | | | ரூ. 20.00 | பரிசு 7703 |
| 11 பரிசு | V | 08 | | | | | | ரூ. 100.00 | பரிசு 880 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,344,630.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ. இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2453631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.13,396,326.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமரியாதையை இழக்கும் பதவி அவசியமில்லை தேர்தலைப் புறக்கணிப்பதாக வைகோ அறிவிப்பு

சென்னை,மார்ச் 21

தமிழகம் மற்றும் புதுவை சட்டசபைத் தேர்தலில் கேட்ட இடங்கள் ஒதுக்கப்படவில்லை. சுயமரியாதையை இழக்கும் பதவி தேவை இல்லை. எனவே தேர்தலில் போட்டியிடாமல் புறக் கணிப்பதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித் துள்ளார்.

ம.தி.மு.க. கடந்த தேர்தலில் 35 தொகுதிகளில் போட்டியிட்டு 6 இடங்களில் வெற்றி பெற்றது.

கடந்த தேர்தலில் ஒதுக்கியது போல் இந்த முறையும் தங் களுக்கு 35 இடங்கள் வேண் டும் என்று ம.தி.மு.க. கூறியது.

அ.தி.மு.க தரப்பு மறுக்கவே பின்னர் 21 தொகுதிகளை கேட் டது. அதற்கு மறுப்புத் தெரிவித்த அ.தி.மு.க 7 அல்லது 8 தொகு திகள் வேண்டுமானால் தருகி றோம் என்று கூறியது.

இதனால் விரக்தியடைந்த ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைச் சந்திக்காமல் இருந்தார்.



இதனையடுத்து ம.தி.மு. கவை கூட்டணியில் சேர்க்காமல் அ.தி.மு.க தொகுதிகளை அறி வித்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த கூட்டணிக்கட்சியினர் ம.தி.மு. கவையும் கூட்டணியில் சேர்க்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கினர்.

பின்னர் அ.தி.மு.க கொஞ் சம் இறங்கிவந்து 12 இடங்கள் தருவதாக தெரிவித்துள்ளது. ஆனால் இதை ஏற்க மறுத்துள் ளார் வைகோ. அதுமட்டுல்ல வரப்போகும் சட்டமன்றத் தேர்த லையே புறக்கணிப்பதாக தெரி வித்துள்ளார்.

அவர், தொகுதி ஒதுக்கீட்டில் அ.தி.மு.க நடந்து கொண்டவிதம் பிடிக்கவில்லை. 21 தொகுதிகள் கேட்ட நிலையில் 12 தருவதாக அ.தி.மு.க கூறியதால் புறக்க ணிக்க முடிவு செய்துள்ளோம்.

சுயமரியாதையை இழந்து பதவியைப் பெற வேண்டிய அவசியம் ம.தி.மு.கவிற்கு இல்லை. தமிழகம் - புதுச்சேரி சட்டப் பேரவை தேர்தலை புறக்கணிக் கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், 3 ஆவது அணி அமைத்து தேர்தலை சந்திக்க வும் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். (201)

# தேர்தல் புறக்கணிப்பு முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேண்டுகோள்

திருப்பூர்,மார்ச்.21

சட்டசபைத் தேர்தலை புறக் கணிக்கும் ம.தி.மு.க. வின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண் டும் என்று மார்க்சிஸ்ட்டு கம்யூ னிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக திருப்பூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் மத்திய குழு உறுப்பினர் டி.கே. ரங்கராஜன் எம்.பி. பத் திரிகையாளர்களிடம் கூறியதாவது:

தமிழக சட்டசபைத் தேர்த லில் ஆளுங்கட்சி திருமங்கலம் இடைத்தேர்தல் பார்முலாவை அமுல்படுத்த நினைக்கிறார் கள். இது ஜன நாயகத்தை குழி பறிக்கும் செயல் ஆகும். அ.தி. மு.க.வுடன் தொகுதிப் பங்கீடு முடிந்து விட்டது. எங்களுக்கு சிறப்பான வாய்ப்பு உள்ளது. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இலவச திட்டங்கள் கூறப்பட் டுள்ளன. இது தமிழ்நாட்டில் மக்கள் வேலையில்லாமல் அதிக மாக உள்ளனர் என்பதை உறுதிப் படுத்துகிறது.

ம.தி.மு.க. தேர்தலைப் புறக் கணிப்பதாக வைகோ அறிவித் துள்ளார். அவர் தனது முடிவை மறு பரிசீலனை செய்யவேண் டும். மீண்டும் அ.தி.மு.க. கூட்ட ணியில் அவர் இடம்பெற வேண்டும். கூட்டணியில் சேர அவரை அழைக்கிறேன். இவ் வாறு அவர் தெரிவித்தார்.(201)

# 13 மணி நேர பேச்சின் பின்னர் அ.தி.மு.க. - தே.மு.தி.க. உடன்பாடு

சென்னை,மார்ச்21

அ.தி.மு.க - தே.மு.தி.க. கூட்ட ணியில் ஏற்பட்ட தொகுதிப் பங்கீடு சிக்கல் தீர்ந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பித்து அதிகாலை வரை தே.மு.தி.க வின் பண்ருட்டி ராமச்சந்திரன், சுதீஷ் ஆகியோருடன் ஜெயல லிதா இடைவிடாது பேச்சு நடத் திக்கொண்டிருக்கிறார்.

இந்தப் பேச்சில் உடன்பாடு ஏற்படாததால் நேற்று முன்தின மும் பேச்சு நீடித்தது. நேற்று முன்தினம் மாலை போயஸ் தோட் டத்தில் பிற்பகல் 4 மணிக்கு தொடங்கிய பேச்சு அதிகாலை 5 மணிக்கு முடிந்தது.

13 மணி நேர பேச்சுக்குப் பின்னர் வெளியே வந்த பண் ருட்டி ராமச்சந்திரன், அ.தி.மு.க -தே.மு.தி.க தொகுதிப்பங் கீடில் உடன்பாடு ஏற்பட்டு விட்டது.

விஜயகாந்தின் சம்மதம் பெற்றபின் வேட்பாளர்கள் பட்டி யல் வெளியிடப்படும் என்று தெரிவித்தார். (201)

## தேர்தல் அறிக்கை வெளியீடு...



சட்டசபைத் தேர்தலில், இந்திய ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் மற்றும் தேர்தல் அறிக்கையை கட்சியின் நிறுவுனர் பச்சமுத்து மற்றும் சமூக சமத்துவ படைத் தலைவர் சிவகாமி, தமிழ்நாடு வாணியர் பேரவைத் தலைவர் ப்ன்னீர்செல்வம் ஆகியோர் வெளியிடுகின்றனர்.

# ம.தி.மு.க. முடிவு கவலை அளிக்கிறது வைகோவுக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை,மார்ச்21

சட்டமன்றத் தேர்தலில் கேட்ட இடம் தராமல் அவமா னப்படுத்தியதால் அ.தி.மு.க கூட்டணியில் சேர்ந்து போட்டி யிடாமல் தேர்தலை புறக்கணித் துள்ளது ம.தி.மு.க.

இது குறித்து அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா வைகோவுக்கு எழுதியுள்ள கடி தம் வருமாறு:

அ.தி.மு.க. தலைமையி லான கூட்டணியில் உங்கள் தலைமையிலான ம.தி.மு.க. 2006 ஆம் ஆண்டு முதலே அங் கம் வகித்து வருகிறது. நடை பெற இருக்கின்ற 2011 தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலைகளையும், அ.தி.மு.க. வின் தலைமையி லான கூட்டணியில் பல கட்சி கள் இடம்பெற்றிருப்பதையும் முதிர்ந்த அரசியல்வாதியான நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இந்தச் சூழ்நிலையில், வரு கின்ற சட்டமன்ற பொதுத்தேர் தலில் நீங்கள் கேட்டுக் கொண் டபடி 21 சட்டமன்றத் தொகுதி கள் ஒதுக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

உங்கள் கட்சிக்கு 12 சட்ட மன்றத் தொகுதிகள் ஒதுக்கித் தருகிறேன் என்பதையும் கழகக் பொருளாளர் ஓ.பன்னீர்செல் வம் மற்றும் கழக தலைமை நிலையச் செயலாளர் கே.ஏ. செங்கோட்டையன் ஆகியோர் மூலம் தகவல் அனுப்பி இருந் தேன்.

அவர்களும் உங்களை நேரில் சந்தித்து இதனைத் தெரிவித்த னர். இருப்பினும், ம.தி.மு.க. தேர்தலை புறக்கணிக்கும் என்று நீங்கள் அறிவித்து இருப்பது எனக்கு மிகுந்த மன வருத் தத்தை அளிக்கிறது.

உங்கள் கட்சியின் நிலைப் பாடு குறித்து முடிவு எடுக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. உங்களுடைய முடிவு எப்படி இருந்தாலும், உங்களுடைய அன்புச் சகோதரியின் நன்மதிப் பும், அன்பும் உங்கள் மீது எப் போதும் இருக்கும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (201)

# அ.தி.மு.க. புதிய வேட்பாளர் பட்டியல் இன்று வெளியீடு

சென்னை, மார்ச். 21

அ.தி.மு.க. புதிய வேட்பா ளர்கள் பட்டியல் இன்று வெளி யிடப்படவுள்ளதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அ.தி.மு.க. தலைமையி லான கூட்டணிக்கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து நடைபெற்று வரும் பேச்சுக்கள் இன்னும் முழுமை அடையாத நிலையில் உள்ளது.

இதனால் ஏற்கனவே அறி விக்கப்பட்ட கழக வேட்பாளர் கள் பட்டியலில் சில மாற்றங் கள் செய்ய வேண்டி உள்ள தால், புதிய வேட்பாளர்கள் பட் டியல் இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

அதுவரை, ஏற்கனவே அறி விக்கப்பட்ட கழக வேட்பாளர் கள் யாரும் தமது வேட்பு மனுக் களை தாக்கல் செய்ய வேண் டாம் என்று கேட்டுக் கொள்கி றேன். அ.தி.மு.க. சார்பில் போட்டி யிடும் அதிகாரபூர்வ வேட்பா ளர்களின் புதிய பட்டியல் இன்று வெளியான பின்னர், கழகத் தின் சார்பில் நிறுத்தப்படும் அனைத்து அதிகாரப்பூர்வ வேட்பாளர்களும் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிக்குள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஜெயலலிதா அந்த அறிக்கையில் தெரிவித் துள்ளார். (201)

# அழகிரிக்கு தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 21

தேர்தல் நடத்தை விதி முறைகளை மீறியதாக மத்திய அமைச்சர் அழகிரியை தலை மைத் தேர்தல் ஆணையகம் எச்சரித்துள்ளது.

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடந்த முதலாம் திகதி அமுலுக்கு வந்தது. மத் திய இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் அழகிரி அரசு முறைப் பயணமாக டில்லியிலி ருந்து சென்னைக்கு கடந்த 2 ஆம் திகதி விமானத்தில் பய ணம் செய்தார்.

அங்கிருந்து கடந்த 4 ஆம் திகதி மதுரைக்குச் சென்று அர சியல் நடவடிக்கையில் ஈடுபட் டதாக பத்திரிகை செய்திகளை மேற்கோள்காட்டி தேர்தல் ஆணையத்துக்கு முறைப்பாடு



வந்தது.

இது தொடர்பாக அவருக்கு விளக்கம் கேட்டு கடந்த 5 ஆம் திகதி தேர்தல் ஆணையகம் அறிவித்தல் அனுப்பியது. மறு நாள் இதற்கு அழகிரி பதில் அளித்திருந்தார்.

தான் முதல் முறையாக மக்க ளவை உறுப்பினரானதால் தனக்கு தேர்தல் நடத்தை விதி முறைகள் சரிவரத் தெரியவில்லை என்றும் எதிர்காலத்தில் இது போன்ற தவறு கள் நடக்காது என்றும் தனது விளக் கத்தில் அழகிரி தெரிவித்திருந்தார்.

முதல் முறை எம்.பி. என்ப தால் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என தேர்தல் ஆணையகம் முடிவு செய்தது.

இதனையடுத்து அரசுப் பய ணமாக அவர் டில்லியிலி ருந்து சென்னைக்கும் அதன் பிறகு மதுரைக்கும் சென்ற வகையில் ஏற்பட்ட விமானக் கட்டணம் உள்ளிட்ட இதர பயணக் கட்ட ணங்கள், தங்கும் விடுதி ஆகிய செலவு தொகையை அரசுக்குத் திரும்பச் செலுத்தவேண்டும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாது அவர் கவனமாக இருக்கவேண்டும் என்று தேர்தல் ஆணையகம் எச்சரித்துள்ளது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மேரி அந்தோனிப்பிள்ளை(ராணி)

ஓய்வுபெற்ற பிரதான மருந்தாளர் (Chief Pharmacist )
நீர்கொழும்பு வைத்தியசாலை

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்டவரான திருமதி. அந்தோனிப்பிள்ளை மேரி கடந்த 18-03-2011 வெள்ளிக்கிழமை அன்று நீர்கொழும்பில் காலமானார்.அன்னார் மனுவேல்பிள்ளை (Canada), செல்லம்(Canada) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், இன்னாசிமுத்து, திரேசம்மா ஆகியோரின் மருமகளும் , அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் , லூட்சன் (Canada) அவர்களின் அன்புத்தாயாரும் பிரமிலாவின் அன்பு மாமியாரும், மரியதாஸ்(Germany), சேவியர் (Germany),அன்ரன்(Norway),ஜெபநேசன்(Germany),டேவிட் அடிகளார் (America) , ரெஜினா (Canada) , மேரி லூசியா (Canada), மேரிறீசா (Canada) அகியோரின் அன்புச்சகோதரியும், தவரட்ணம் (Canada),கட்சன்(Canada),மனோகரன்(Canada),பத்மா(Germany), ராஜி(Germany),கலா(Norway),மேர்சி(Germany) தவம், பேபி, நவம், ஞானம், றூபா(Canada), ஜெயா, குலன்,அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் நாளை செவ்வாய்க் கிழமை (22-03-2011) மாலை 3 மணியளவில் நீர்கொழும்பு கடற்கரை வீதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு நீர்கொழும்பு பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுசெபிக்க அழைக்கின்றோம்.

தகவல் : அந்தோனிப்பிள்ளை (கணவர்),லூட்சன் (மகன்), மற்றும் குடும்பத்தினர்.
விலாசம் : 23,முத்துமாரி அம்மன் வீதி,நீர்கொழும்பு.

# மரண அறிவித்தல்

## கந்தையா தெய்வானைப்பிள்ளை



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெய்வானைப்பிள்ளை 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் சி.கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, நிர்மலாதேவி (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், அப்புத்தளை), திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ வரணி மகாவித்தியாலயம்), சிவலிங்கம் (டென்மார்க்), தவயோகராஜா (ஆசிரியர், யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்), காலஞ்சென்ற சுமதி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற தியாகராசா, அபயரட்ண (ஓய்வு பெற்ற D.O.A பதுளை), இந்திரராஜா (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்), மகேஸ்வரி (டென்மார்க்), உமாராணி ஆகியோரின் பிரியமான மாமியும் Dr.சிவசுதன், சிவமங்கை (ஆசிரியை, யா/கமலாசினி வித்தியாலயம், மட்டுவில்), சிவாஜினி, சிவமூர்த்தி (MPCS, கொடிகாமம்), சிவகுகன் (Dialog - முகாமையாளர், யாழ்ப்பாணம்), சிவானந்தன் (பொறியியலாளர்), சிவமதி (ஆசிரியை, யா/ ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் வித்தியாலயம்), சிவசக்தி, சிவச்செல்வன், சிவதீபம், சிவராசா, சுனிற்றா (உபதபால் அதிபர், அப்புத்தளை), சுஜாத்தா, வாசனா (மாணவி, சப்ரகமுவ பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற ஜெயந்திரராசா மற்றும் யசோதா (லண்டன்), இராசதிலகன் (UK), வினோதன், லஜிதா, ஐஸ்வர்யா (டென்மார்க்), மாதுரியா (டென்மார்க்), சஜித்தா (மாணவி, யா/ வேம்படி மகளிர் கல்லூரி), அபிநயா (மாணவி, யா/ வேம்படி மகளிர் கல்லூரி), அபிவர்ணா (மாணவி, யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வேணுகா, தேனுகா, கோபிகா, திருவேள், திருவிழி, மீரா, ரேணுகா, சஜிதா, சாருகா, தாரா, அகிம்ஷா, அஸ்வின், அபிசரன், அபிநேகா, சேந்தன், கார்த்திகன், சதுஷன், கனுஷன், கார்மிசன், சுருதி, மதுனன், கவின், அர்ச்சித், அர்ச்சயா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மந்துவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (21.03.2011) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு மந்துவில் இலுவன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தவயோகராஜா (மகன்),
0776466208, 0217200001

வேம்பிராய் வீதி,
மந்துவில் மேற்கு, கொடிகாமம். (2241) (35)

## நகரில் நடந்த விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வயோதிபரை மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்துக்குள்ளாகி இருவரும் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பிறவுண் வீதி, நாவலர் வீதி இணையும் சந்தியில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், நாவாந்துறையைச் சேர்ந்த ஜோசப் பிரான்ஸிஸ் (வயது - 75) என்பவர் பலத்த காயங்களுக்கு இலக்கானார். மதன் (வயது - 16) என்பவர் சிறுகாயங்களுடன் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ஒ-4)

## வடமராட்சி பிரதேசத்தில் புகையிலை அறுவடை மும்முரம்

வடமராட்சி, மார்ச் 21

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை வேகமாக நடைபெற்று வருகிறது.

அறுவடை செய்யப்படும் புகையிலைச் செடிகளை புகையிலை வியாபாரிகள் பச்சையாகவே கொள்வனவு செய்து வருகின்றனர். பச்சையாகக் கொள்வனவு செய்யப்படும் புகையிலைச் செடியின் இலைகளை உலர்த்தி பதப்படுத்தி உள்ளூர் வியாபாரிகளால் தென் பகுதியில் சந்தைப்படுத்தப்படும்.

புகையிலைச் செடி ஒன்று அவற்றின் தரத்திற்கேற்ப நூறு ரூபா தொடக்கம் 140 ரூபா வரை விற்பனையாகி வருகின்றது.

தற்போது அல்வாய், புலோலிப் பகுதிகளில் அறுவடை வேகமாக இடம்பெற்று வருகின்றது. பிரதேசத்தின் பல பகுதிகளிலும் புகையிலை அறுவடை இன்னமும் ஒன்றரை மாத காலமாக நடைபெற்று வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-236)

# பிறந்ததின நினைவலைகள்

மலர்வு
21
★
03
★
1937



உதிர்வு
06
★
06
★
2010

## அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை

(ஓய்வுபெற்ற அதியர், யா/ சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் இருப்பிடமாய்
சமூகத்தின் அறிவொளியாய் - சுடர்பரப்பி
நற்பண்புகளுடன் எமை வழி நடத்தி
எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
எம் உயிருள்ள ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுகளுடனும் வழிகாட்டலுடனும் வாழ்வோம்

திருகோணமலை (2242) (35) குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய விஞ்ஞான ஆசிரியை
திருமதி. கி. செல்வராணி
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி திருநாவுக்கரசு செல்லம்மா

அவர்களின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னையின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச
வித்தியாலயம். பாடசாலை சமூகம்.

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தன் தெய்வி (இத்தினி)

தெல்லிப்பழை கிழக்கு கோயிற்புலத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தன் தெய்வி (இத்தினி) நேற்று 20.03.2011. ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் கந்தனின் அன்பு மனைவியும், இராசரத்தினம்(ஊழியர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) குணரத்தினம், சபாரத்தினம், பாலரத்தினம், (கிளி, உரிமையாளர் பாலன் ஸ்ரோர்ஸ் - தெல்லிப்பழை) செல்வராசா (ஊழியர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சந்திரன்) மற்றும் நவரத்தினம் (செல்வம் - உரிமையாளர் சிவன் மில்- தெல்லிப்பழை) ரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.03.2011)திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயிற்புலம்
தெல்லிப்பழை கிழக்கு. தகவல்: குடும்பத்தினர்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
12
.
05
.
1952



அன்னை அணைப்பில்
20
.
02
.
2011

## அமரர் துரையப்பா நடராசா

(ஒட்டுவெளி மிருசுவில்)

கடந்த 20.02.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் துரையப்பா நடராசா அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும், தொலைபேசி வழியாக துயர்பகிர்ந்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவினருக்கும், ஏனைய வழிகளில் எமக்கு உதவியோருக்கும் எமது நெஞ்சு நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (21.03.2011) திங்கட்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
மணிய தோட்டம்,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி. (சி-576958) (20-50-32)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் போரில் மகாஜனாவுக்கு இனிங்ஸ் வெற்றி

மருதனார்மடம், மார்ச் 21

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியில் கடந்த இருதினங்களாக நடைபெற்ற வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகஜனாக் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மகாஜனா சார்பில் கபிலன் 104 ஓட்டங்களையும், அணித்தலைவர் கோகிலன் 64 ஓட்டங்களையும் பெற்றனர். ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் வி.ஜீவிசன் 4 விக்கெட்டுக்களையும், கே.புருசோத்மன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். இந்த அணியின் சார்பில் கே.றொபேட் நிஷான் 22 ஓட்டங்களையும், ரி.சிந்துஜன் 20 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கோகிலன் 5 விக்கெட்டுக்களையும் மோசிகீரன் 3 விக்கெட்டுக்களையும் கே.டிலக்ஷன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

189 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் பலோ-ஓன் முறையில் மீண்டும் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ஸ்கந்தா அணி 56.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இனிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் மகாஜனாக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

அணியைத் தோல்வியில் இருந்து மீட்கத் தனித்து நின்று போராடிய கே.துவீசன் 160 பந்துகளில் 9பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். கே.புருசோத்தமன் 20 ஓட்டங்களையும், கே.றோபேட் நிஷான் 14 ஓட்டங்களையும் பெற்றனர். மகாஜனா கல்லூரி சார்பில் பந்துவீச்சில் அணித் தலைவர் கோகிலன் 4 விக்கெட்டுக்களையும், டிலக்ஷன், கே.வைகுந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும்கைப் பற்றினார். கே.மோசிகீரன் அஜித் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


வெற்றிக்கிண்ணத்தினை மகாஜனா அணித்தலைவர் எஸ்.கோகிலன் பெற்றுக்கொண்டபோது.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் சிறந்த சகல துறை வீரராகவும் மகாஜனாக் கல்லூரி அணித் தலைவர் கோகிலனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக அந்த அணியின் கே. கபிலனும் சிறந்த களத்தடுப்பாளராக ஸ்கந்தா அணித் தலைவர் கே. புருசோத்மனும் தெரிவு செய்யப்பட்டனர். (55)


சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை மகாஜனக் கல்லூரி வீரர் எஸ்.கபிலன் பெற்றுக்கொள்கிறார்.


ஆட்டநாயகன், சிறந்த பந்து வீச்சாளர் விருது வென்ற மகாஜனக் கல்லூரி வீரர் எஸ்.கோகிலன்.


சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதை வென்ற ஸ்கந்தா அணித்தலைவர் கே.புருஷோத்தமன்.

# வடக்கின் போர் ஒருநாள் ஆட்டம்; சென்.ஜோன்ஸ் தன்வசமாக்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். மத்திய கல்லூரியுடனான 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி உபதலைவர் கரிவதனனின் அதிரடி துடுப்பாட்டம் கை கொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுகளால் யாழ். மத்திய கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்களின் பந்து வீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாத யாழ். மத்திய கல்லூரி அணியினர் 45 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக கோகுலன் 17 ஓட்டங்களையும் ஜெரிக்துஷந் 23 ஓட்டங்களையும் எட்வேட் எடின் 22 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.



பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக கரிவதனன் ஒன்பது ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு இலக்குகளையும் சத்தியேந்திரா 10 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3இலக்குகளையும் விமல்ராஜ் 9.4 ஓவர்கள் பந்து வீசி 4 இலக்குகளையும் சாய்த்தனர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய சென். ஜோன்ஸ் அணியின் ஆரம்ப இலக்குகள் மிக விரைவில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களால் சாய்க்கப்பட்டன.

ஒரு கட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி இரண்டு இலக்குகளை இழந்து மூன்று ஓட்டங்கள் என்றநிலையில் இருந்தது. இதன் போது அணித் தலைவர் விதுஷனுடன் இணைந்து கொண்டார். அணியினுடைய உபதலைவர் கரிவதனன். இவர்கள் இருவருடைய அதிரடியான ஆட்டத்தினால் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியுடைய ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. இந்தச் சோடிகள் இணைப்பாட்ட ஓட்டமாக 103 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 32 பந்து பரிமாற்றங்களுக்கு ஐந்து இலக்கினைஇழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. உபதலைவர் கரிவதனன் ஆட்டம் இழக்காமல் 71 ஓட்டங்களையும் அணித் தலைவர் விதுஷன் 33 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணிவீரர்களான வதுஷனின் எட்டு பந்து பரிமாற்றங்களுக்கு 29 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு இலக்கினையும் ஜெரிக்துஷந் ஏழு பந்து பரிமாற்றங்களுக்கு 35 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்கினையும் நிஷாந்தறூபன் 3 பந்து பரிமாற்றங்களுக்கு 22 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் உபதலைவர் கரிவதனன் தெரிவு செய்யப்பட்டார். சென்ஜோன்ஸ் அணி வெற்றி பெற்றதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணியின் தொடர் வெற்றிப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது. (ஜ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் பிரசாரத்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் நேரடியாக சென்று மக்களின் ஆதரவை திரட் டினார். வியாபாரிகளோடும் பொருள்வாங்கு வோரோடும் தெருக்களிலும் சந்தைகளிலும் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் சரளமாகப் பழகி பிரசாரம் செய்தார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை யால் ஏற்கனவே மந்தமாக இருந்த அரச தரப்பு பிரசாரம் சூடு பிடித்து வேகம் பெற்றது. இந்த விதமான அவரது தனிப்பட்ட ராஜதந்திரமும், அழுத்தமான அரசியல் செயற்பாடும் தொடர்ந்து வெற்றிகளை குவித்துள்ளன.

ஐ.தே.க.வை பொறுத்தவரை நிலைமை நேர் மாறாகவிருந்தது. அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பணி களை தனது பிரதித் தலைவர் கருஜய சூரியாவிடம் கையளித்து விட்டு தேர் தல் களத்திலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டு பிராக்கிற்கு சென்றிருந்தார். அங்கு நடை பெற்ற சர்வதேச ஜனநாயக யூனியன் கூட்டத்தில் கலந்து கொள்வ தற்காக - அதில் அவர் உதவித் தலை வராக இருந்துவருகின்றார். திரும்பி வந்த பின் சில தேர்தல் கூட்டங்களில் பேசி னார். ஆனால் அவை ராஜபக்ஷவைப் போல் எல்லா பகுதிகளையும் உள்ளடக்க வில்லை. அதேவேளை ரணிலின் பதவி யைக் குறிவைத்துள்ள சஜித் பிரேமதாச தனிப்பட்ட முறையில் தமது சொந்த பிர சாரத்தை மேற்கொண்டிருந்தார், கட்சிக் குள்ளேயும் கூட ஒற்றுமைக்கான அறி குறிகள் வெளிப்பட்டதாகத் தெரிய வில்லை.

அக்கட்சியின் செயற் குழு இன்று கூடவிருக்கிறது. புதிய கட்சி அமைப்பு விதிகளின் கீழ் கட்சியின் புதிய நிர்வாகி கள் தெரிவுசெய்யப்படவிருகின்றனர். இதற்கிடையில் அக்கட்சியின் தலைவர் கள் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதில் இறங்கியுள்ளனர். பிரேமதாச பங்கு பற்றிய கூட்டங்களுக்கு மக்கள் திரண்டு வந்தபோதிலும் ஓர் உள்ளூராட்சிமன் றத்தையும் அவரால் வென்றெடுக்க முடிய வில்லை. அவரது சொந்த மாவட்டமான ஹம்பாந்தோட்டையிலும் அதேநிலை தான். ஐ.தே.கவின் தோல்விக்கு பிரே மதாச தான் காரணம் என்று கூறப்பட் டது. அதேவேளை உள்ளூராட்சி தேர் தல் தோல்விக்கு ரணில் தான் காரணம். அவர் உடனடியாகப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் கூறிவருகிறார்கள்.

தலைமைப்பதவி பிரச்சினையை எவ் வாறு தீர்க்கலாம் என்பது பற்றி ஆலோ சிக்க ஐ. தே. கவின் செயல் குழுக்கூட் டம் ஒன்றுக்கு ரணில் விக்கிரம சிங்கா இன்று ஏற்பாடு செய்துள்ளார். இதே சம யம் தலைமைப்பதவி விவகாரம் ஒரு மைப்பாட்டுக் கருத்தின் மூலம் தீர்க்கப் பட வேண்டும் என்று சஜித் பிரேமதாச கூறியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

### வடக்கின் தேர்தல் நிலை

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு (இலங் கைத் தமிழரசுக்கட்சி) 12 உள்ளூராட்சி மன்றங்களை வென்றுள் ளது. முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கில் ஐ.தே.க. வெற்றியில்.

ஒருகாலத்தில் புலிகளின் சார்பில் செயல்பட்டவர்களான தமிழர் தேசிய கூட்டமைப்பினர் புலிகள் ராணுவ மட் டத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கும் நிலை யிலும் அடிமட்ட மக்களின் ஆதரவினை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர்களில் ஒருவரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருப்பதாவது:

ஒரு தீர்வினை எட்டுவதற்காக அர சுடன் எமது கட்சி பேச்சுவார்த்தை நடத்திவரும் நிலையில் எமது கைகளை பலப்படுத்தும் வகையில் வாக்களிக்கு மாறு மக்களை எமது தலைவர் சம்பந் தன் கேட்டுக் கொண்டிருன்தார். மக்கள் எமக்கு தெளிவான தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கும் நிலையில் அவர் களின் கோரிக்கைகளை வழங்காமல் அரசு நழுவிவிட முடியாது என்று அவர் கூறி னார். (ப)


## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/அச்செழு மெ.மி.த.க
பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி
இன்று (21.03.2011) மணிவிழாக்காணும்

### திரு கந்தையா சின்னராசன்

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.
அவரின் ஓய்வு காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**ஆசிரியர் பணியில் - 01.09.1976-30.09.2000**
**அதிபர் பணியில்- 01.10.2000- 21.03.2011**

(22-50) கோட்டக்கல்வி அதிகாரியும், கோப்பாய்க் கோட்ட அதிபர்சங்கமும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு க. தவயோகராசா
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந் தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி.
(35)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை புலோலி சந்தாதோட்டம் முதலி அம்பாள் ஆலயத்தில் முன்னாள் பூசகராக இருந்த

### அண்ணாச்சாமி இரவிச்சந்திர சர்மா

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆலய சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஸ்ரீ மனோன்மணி அம்பாள், (ஸ்ரீ முதலி அம்பாள்),புலோலி தெற்கு.
பரிபாலன சபையினரும், மற்றும் அடியார்களும்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னவர் நவரட்ணம்



பருத்தித்துறை வராத்துப்பளையைப் பிறப் பிடமாகவும், சந்தாதோட்டத்தை வசிப்பிட மாகவும் சவுதிஅரேபியாவில் கடமை ஆற்றிய வரும் முன்னைநாள் பொலிஸ் சார்ஜன் சின்ன வர் நவரட்ணம் நேற்று (20.03.2011) ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்ன வர் - தங்கம்மா தம்பதியரின் இரண்டாவது புத்திர ரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்ப தியரின் மூத்தமருமகனும் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் நபுர்தாஸ் (கனடா), நபுர்தா (சுபா-கொழும்பு) ஆகியோரின் பாச மிகு தந்தையும் டெனிஸ் (டாக்டர், நாகம வைத்தியசாலை), ஜெய சீலா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் விவேகானந்தன், புஸ்பராணி அமரர் புஸ்பராஜா மற்றும் புஸ்பரஜனி, புஸ்பவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமலாசனி, காலஞ்சென்ற வசந்த ராணி, விஜயகலா ரவீந்திரன், சுரேஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தாதோட்டம்,
புலோலி தெற்கு,
பருத்தித்துறை. (35) (2249)

தகவல்:
புஷ்பலீலா (மனைவி)

### செல்வி தம்பையா புனிதவதி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா புனித வதி நேற்று (20.03. 2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா -சிவயோகாம்பிகை தம்பதிகளின் மகளும், காலஞ் சென்றவர்களான அரியரட்ணம், கிருஸ்ணதே வன், மீனலோசனி மற்றும் இராஜகோபால் காலஞ் சென்றவர் களான வேதவதி, யசோதரா, றமேஸ், ஜனார்த்தனன் மற் றும் தயாநிதி, யோகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03. 2011) திங்கட் கிழமை காலை 9 மணிக்கு அரசடி ஆனைக்கோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி,
ஆனைக்கோட்டை

தகவல்:
இ.சரவணன்(பேறாமகன்)
ஜ.வஸ்த்தவன்(மருமகன்).

## Short Period Success

சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multi national) கம்பனியில் வடக்கு கிழக்கு மாகாணங் களில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம் பெறுகின்றன. தாங்களும் O/L, A/L சித்திபெற்றவ ராயின் தொடர்பு கொள்ளலாம். சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:-
Udaya - 0717494735
Srikanth - 0770771377

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சிவசுந்தரம்



[ஓய்வு பெற்ற லிகிதர்-வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்]

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், உடு விலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங் கம் சிவசுந்தரம் நேற்று (20.03.2011) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம்-இரத்தினாவதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப் புத்துரை-வள்ளியம்மை தம்பதியினரின் மூத்த மருமகனும், சாந்தநாயகியின் அன்புக் கணவரும், கணேஸ்வரன் (அமரர்), மங்களேஸ்வரி (லண்டன்), புனிதவதி(அமரர்) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், குமாரலிங்கம் (லண்டன்), பிர தாபன் (ஆசிரியர்- யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), காஞ்சனா, இந்துமதி (ஆசிரியை - தி/புல்மோட்டை முஸ்லிம் மகா வித்தியாலயம்), தனமதி (ஆசிரியை-யா/இணுவில் இந்துக்கல் லூரி), ஆனந்தி (ஆசிரியை- யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், சிவாஜினி, விஜயபாலசிங்கம் (அமரர்), ஜீவானந்தம் (இல்மனைற் கூட்டுத்தாபனம்- புல் மோட்டை), கதிர்காமநாதன் (பிரதேச சபை- மல்லாகம்), இரா மேஸ்வரன் (முகவர், Nesto company) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சஜீவன், நிவேதிகா, வினோதிகா, பிரியதர்சினி, யஸ்மிதா, யதுப்பிரியா, பவதாரகன், யாதவி, பிரதீஸ், நிரூஜன் ஆகியோரின் பெரியப்பாவும், வாசுகி, நளாயினி, குன்றன், லக்ஷி, கீர்த்திகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங் கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் கட்டை,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

தகவல்:
மனைவி (சாந்தநாயகி)
பேறாமகன் (சஜீவன்).

### கனகசபை பரமநாதன்



இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட கனகசபை பரமநாதன் நேற்றுமுன்தினம் (19.03.2011) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனக சபை - அன்னம் தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர் களான அருளானந்தம், பரமேஸ்வரி, தனபாக்கியலட்சுமி, மற்றும் தங்கலட்சுமி ஆகியோரின் சகோதரரும் வதனி, ரஜனி, பகீரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன், சிவநா தன், அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதி, பிர வீனா, அஸ்வினா, அகிலஜா, அக்சரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.03.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரி வீதி, (35)
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (139310)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### வைத்திலிங்கம் நாகராசா



மண்டைதீவு தெற்கு எட்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நாகராசா அவர்கள் நேற்று (20.03.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி லிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம் பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமக னும் காலஞ்சென்ற பாலேஸ்வரியின் அன்புக் கணவரும் லிங்க தாசன் (ஜேர்மனி), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந் தரஜனி, அருணகிரி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜன், அனோஜா, அபிஜா, ஆதிஷன் ஆகியோரின் அருமைப்பேரனும் காலஞ்சென்றவர்களான காசிராசா, கனகம்மா, சேதுராஜா, சிங்க ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சபாரத் தினம் மற்றும் சபாநாயகம், சாந்தமலர், நீலாம்பிகை, புனிதவதி, சூரியகாந்தன் (கொழும்பு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), சந்திர குமார் (சுவிஸ்), சந்திரபாலு (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (576962) (35)

தகவல்:
அருணகிரி (மருமகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வெற்றி இந்தியா விழிப்படைவதற்கான அழைப்பு

## அந்நாடு தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முடிவுகள் இந்தியா விழிப்படைவதற்கான அழைப்பு என இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்ததுடன் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை, போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பின்பற்றுதல், மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை தொடர்வதன் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தவும் பயன்படுத்த திட்டமிட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதுதரகத்தினால் அனுப்பப்பட்ட கேபள் குறிப்பொன்றில் இவ்விடயம் குறிப்படப்பட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

தேர்தலை புறக்கணிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்ததன் மூலம் அவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவதை தவிர்ப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவை ஒதுக்கித் தள்ள தீர்மானித்தமைக்கு ஆதாரமாகும் என இலங்கை, பங்களாதேஷ், பர்மா ஆகிய நாடுகளுக்கான இந்தியாவின் இணைச் செயலாளர் மோஹன் குமார் தெரிவித்திருந்ததாக அக் கேபிள் குறிப் பில் தெரவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி வேட்பாளரின் கடும் போக்கு பிரச்சாரத்திற்கு மத்தியிலும் ராஜபக்ஷ ஒரு மிதவாதியாக இருப்பார் எனவும் 'சமாதானமும் இல்லை, யுத்தமும் இல்லை' என்ற நிலை அண்மைய எதிர்காலத்தில் தொடர்வதற்கான வாய்பிருப்பதாகவும் மோஹன் குமார் ஊகம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய முயற்சிக்கும் நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் முறியவடையாதிருப்பதை உறுதிப்படுத்துவதே தேர்தலுக்குப் பின் இந்தியா முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயம் எனவும் இது அமெரிக்காவின் நோக்கங்களுக்கு அமைவாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்

---

### உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை கண்காணிக்கும் அதிகாரமும் இந்த மக்கள் சபைகளுக்கு உண்டு. அவ்வாறு கண்காணித்து பொருத்தமற்ற வேலைத்திட்டங்களை மக்கள் சபைகள் இடைநிறுத்தும்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் மற்றும் மத்திய அரசிடம் நிதியை நாடுதல் போன்றவற்றிற்கான அதி காரங்களை மக்கள் சபைகள் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு மக்கள் சபையும் மூன்று முதல் நான்கு வரையிலான உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கியிருக்கும். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் ஒருவர் இந்த மக்கள் சபைக்குத் தலைவராக இருப்பார்.

பாடசாலை அதிபர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் தத் தமது பகுதிகளின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டோர் ஆகியோரை மக்கள் சபை பிரதிநிதிகளாகக்கொண்டிருக்கும் - என்றார். (ஒ-சி)

---

### கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் மன்னார் மாவட் டங்களில் இருந்து சுமார் இரண்டாயிரம் பேர் கலந்துகொண்டனர்.

பூசைகளில் கலந்து கொண்ட மக்களுக்கான குடிதண்ணீர் பாதுகாப்பு மற்றும் முக்கிய வசதிகளை நெடுந்தீவு கடற்படையினருடன் இனைந்து ஏனைய தீவுப் பகுதிக் கடற்படையினரும் ஏற்பாடு செய்து வழங்கினர்.

கடற்படையினர் நேற்றைய உற்சவத்தின் போது பக்தர்களுக்கு உணவு வழங்கி அவர்களது தாகத்தையும் தீர்த்தனர்.அத்துடன் உதவி அரசங்க அதிபர் பணிமனை பிரதேசசபை இலங்கை - இராமேஸ்வரம் செஞ்சிலுவை சங்கப் பிரதி நிதிகள் நெடுந்தீவு ஈ.பி.டி.பி கட்சியினர் பக்தர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்க்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர்.

நேற்றைய இறுதிநாள் உற்சவத்தில் யாழ் மாவட்டத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க வடபகுதி கடற்படை அதிகாரி விஜய சேகர யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் யாழ்ப்பாணம் பிரதம நீதிவான் இந்தியதூதரக யாழ் அலுவலக அதிகாரி உட்பட இலங்கை இந்திய பிரமுவர்களும் கலந்துகொன்டனர்.

திருப்பலி பூசை நடைபெற்றதும் பக்தர்கள் தமது பிரதேசங்களுக்கு திரும்பத்தெடங்கினர் நேற்று நன்பகல் 12 மணியுடன் அங்குமக்கள் தங்குவதற்க்கு அனுமதிக்கப்படவில்லை.

பாதுகாப்பு நடைமுறைகள் தளர்த்தப்பட்ட நிலையில் இம்முறை கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவம் சிறப்பாக நடை பெற்றதுடன் உற்சவத்தில் இந்திய இலங்கை பக்தர்கள் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

இந்திய -இலங்கை வணிகப் பொருள்களும் இங்கு விற்பனை செய்யப்பட்டு பண்டமாற்று நடவடிக்கையும் இடம் பெற்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (ஒ-10-7)

---

### ஐ.நா.நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கை வெளிப்படைத் தன்மை கொண்டதாக அமையவேண்டும் என்றும் அது மக்களுக்குத் தெரியப் படுத்தப்படவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாத இறுதிக்குள் அறிக்கை பான் கீ-மூனிடம் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதும் அது தொடர்பில் பான் கீ-மூன் ஊடகங்கள் வாயிலாக அறிவிப்பார் என்று ஐ.நா. சபை வட்டாரத்தை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையை வெளிப்படுத்தவேண்டாம் என்று அண்மையில் பான் கீ-மூனைச் சந்தித்த இலங்கை அரசின் தூதுக்குழு கேட்டுக்கொண்டதாகவும் அந்த வேண்டுகோளை நிராகரித்து பான் கீ-மூன் அறிக்கையை வெளியிடுவார் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

---

### லிபியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற ஐ.நாவின் தீர்மானம் குறித்து இதில் கலந்தாலோசிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ், அமெரிக்க, பிரான்ஸ் படைகள் லிபிய தலைவர் கேர்ணல் மும்மர் கடாபியின் படைகளுக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மேற்கொண்ட தாக்குதலில் 48பேர் கொல்லப்பட்டனர். 150பேர் காயமடைந்தனர் என அரச தொலைக்காட்சி தெரிவித்தது.

அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் 110க்கு மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. அதேவேளை, பெங்காசியைக் கைப்பற்றியுள்ள போராட்டப் படைகளைத் தாக்கிய கடாபிக்கு ஆதரவான படைகளை இலக்குவைத்து பிரான்ஸ் விமானங்கள் உக்கிரத் தாக்குதலை மேற்கொண்டன என பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதேவேளை, திரிபோலி, மிஸ்ரட்டா ஆகிய பகுதிகளுக்கான விமானப் பாதுகாப்பு, மையங்கள் மீதும் ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஒ-சி)

(முன்னர் வந்த செய்தி 23 ஆம் பக்கத்தில்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அரியமலர் ஆறுமுகம்



ஏழாலையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அரியமலர் நேற்று (20.03.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரையப்பா மற்றும் இலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் கலைமகள், கலைச்செல்வன், காண்டீபன், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் இலங்கேஸ்வரன், தேவமனோகரி, வினிதா, கிருபாநந்தன், ஆகியோரின் மாமியாரும் கம்சிகா, பரணிகா, ரகுபரன், சதுஷன், ரசிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏழாலை மேற்கு, ஏழாலை. (576963) (35) குடும்பத்தினர்.

### மாப்பாணர் சந்திரசேகரம் (சந்திரன்)

புத்தூர் கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மாப்பாணர் சந்திரசேகரம்(சந்திரன்) கடந்த 19.03.2011 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் கலஞ்சென்ற மாப்பாணர் மற்றும் மாணிக்கத்தின் அன்பு மகனும் வசந்தியின் அன்புக் கணவரும் துவாரகா (கனடா), புருஷோத்தம் (கனடா), வாமணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி (அரியாலை), பூமணி (உடுப்பிட்டி), தியாகராஜா (கொழும்பு), கமலாதேவி (புத்தூர்), அமரர் சதானந்தம் (புத்தூர்) மற்றும் இராஜேஸ்வரி (புத்தூர்), சௌந்தேஸ்வரி (புத்தூர்), பத்மாவதி (ஆசிரியை, புத்தூர்), வசந்தமாலா (வைத்திய அதிகாரி திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமநான் (அரியாலை) காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (உடுப்பிட்டி), பேபி (கொழும்பு) விவேகனந்தராஜா (புத்தூர்) சந்திரவதனி (புத்தூர்) மகாதேவா (புத் தூர்) ஜெயராஜா (கொழும்பு) நாகராஜா (புத்தூர்) ரவீந்திரா (திருகோண மலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28 ஒஸ்பாங் டிறைல் 502 ஸ்காபுறோ, ஒன்ராறியோ கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

17, வில்வந் தெரு,
மாம்பழம் சந்தி,
அரியாலை. (576954)

தகவல்:
தாய், சகோதரர்கள்,
பரமநாதன் கஜேந்திரன் (மருமகன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் உறுப்பினரான தி.சிவதாசன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தி. செல்லம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

லயன்ஸ் கழகம், கொக்குவில்.

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி கந்தசாமி

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

புலோலி தெற்கு, புற்றளையை பிறப்பிடமாகவும், தேவரனை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தசாமி நேற்று (20.03.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான பெரியதம்பி- சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னார்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமக னும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், விஸ்ணுகாந்தன் (பொறியியலாளர்-கனடா), ரஜனிகாந்தன் (Q.S-லண்டன்), சதீஸ்காந்தன் (மாணவன்- HNDE, காலி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஆழ்வாப்பிள்ளை (டென்மார்க்), சிவக்கொழுந்து, செல்லத்துரை (சித்த மருத்துவமனை - கைதடி) ஆகியோரின் சகோதரரும், கந்தசாமி (இளைப்பாறிய பாடசாலை ஊழியர், புற்றளை மகாவித்தியாலயம்), சரஸ்வதி (டென்மார்க்) கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிவா ஜினி, சிவாகரன் ஆகியோரின் மாமனாரும், திவாகரன், கோகுல வதனி, சுரேஸ் ஆகியோரின் சிறிய தந்தையும், வாசுதேவனின் சிறிய தந்தையும் நிவேதினி, நிசாந்தினி ஆகியோரின் பெரிய தந்தையும், அனுசன், லக்ஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தேவரன், புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

SAKTHIMICRO SYSTEM மாபெரும் மலிவு விற்பனை Hotline 0776102609
Intel Dual Core 3.2Ghz 8300/=
Biostar G31 5400/=
DVD Writter 2400/=
1GB DDR2 RAM 2400/=
Hard Disk 320GB 4700/=
Keyboard,Speaker 450/=
Optical Mouse 350/=
headset (with mic) 350/=
Web camera 1100/=
VGA card ATI 1GB 10500/=
M card reader 350/=
Flash 4GB 1100/=
21,22 Table,2.1woofer WebCAM FREE
49450/=
Intel Dual Core 3.2
Intel G41 Bcard
1GB RAM, 320GB HDD
DVD Writer,key board
Optical Mouse,UPS 650w
18.5" LCD Monitor
Master Diploma in Multimedia (A/L, O/L, வீடியோ படப்பிடிப்பாளர்கள்)
Adobe Photoshop , Premiere CS5
கற்பிப்பதற்கான Adobe இன் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் ஒரே ஒரு பயிற்சி நிலையம்
இரண்டாவது புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Jaffna - 0217903456 , Chavakachcheri - 0212270084
Intel Software Partner
Novell
AUTHORISED Training Centre
SOLUTION PARTNER

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# புளியம்பொக்கணை நாகதம்பிரானுக்கு 3 வருடங்களின் பின் பொங்கல் உற்சவம்

## கண்ணீருடன் நேர்த்திக்கடன் செலுத்தினர் பக்தர்கள்

புளியம்பொக்கணையில் இருந்து அலுவலகச் செய்தியாளர்

புளியம்பொக்கணை,மார்ச்21

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி, புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் மூன்று வருடங்களின் பின் நேற்றுமுன்தினம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி , முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பொங்கல் உற்சவத்தில் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

தூக்குக்காவடிகள், பறவைக் காவடிகள், செடில்காவடிகள், பாற்காவடிகள், பாற்குடம், கற்பூரச்சட்டி ஏந்துதல் போன்ற நேர்த்திக்கடன்களை தூர இடங்களில் இருந்து வந்தும் ஆலயத்தில் இருந்தும் அடியார்கள் நிறைவேற்றினர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவங்களில் வழமையாக கலந்து கொள்ளும் பக்தர்களை விட இம்முறை குறைந்த எண்ணிக்கையிலேயே கலந்துகொண்டனர். எனினும் யுத்தத்தின் போது ஏற்பட்ட துன்பங்களுக்காக தம்பிரானை வேண்டிக்கொண்ட அடியார்கள் அங்கு திரண்டு கண்ணீர் மல்க தமது நேர்த்திக் கடன்களை செலுத்தினர்.

கிளிநொச்சி பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் எனினும் நான்கு தாலிக் கொடிகள் மற்றும் சங்கிலித் திருட்டுக்கள் பலவும் இடம்பெற்றன. திருட்டுச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்ட சம்பவமும் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

அடியார்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

நேர்த்திக்கடனில் ஈடுபட்டிருந்த அடியார் ஒருவரின் பறவைக்காவடி புரண்டு விழுந்ததில் அவர் அதிலிருந்து பத்திரமாகமீட்கப்பட்ட சம்பவமும் ஆலய முன் வீதியில் இடம்பெற்றது.


ஆலய உற்சவத்துக்காக பாரம்பரிய முறைப்படி பறை அடித்து மாட்டு வண்டியில் ''பண்டம்'' எடுத்து வரப்பட்டு இரவு பொங்கல் உற்சவம் நடைபெற்று நேற்று முன்தினம் அதிகாலை பூசைகள் யாவும் நிறைவடைந்தன. (ஒ-10)

## நெல் அறுவடை புகை போக்கியில் சிக்கியவர் மரணம்

தென்மராட்சி, மார்ச் 21

நெல் அறுவடை செய்து கொண்டிருந்த வேளையில் அறுவடை இயந்திரத்தின் புகை போக்கி சாய்ந்து அதன் சாரதி மீது புகை கக்கியதில் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகி மரணமானார்.

இச் சம்பவம் நேற்று நுணாவிலில் இடம்பெற்றது. நுணாவில் மத்தி ஐயர் ஒழுங் கையைச் சேர்ந்த கந்தப்பு நாகேஸ்வரன் (வயது 48) என்பவரே மரணமானவராவார். (ஐ-207)



லிபியா மீதான நேட்டோ படையினரின் ஆரம்ப நடவடிக்கையாக கடற்படையினர் நேற்று கப்பலில் இருந்து 112 இற்கும் மேற்பட்ட குரூஸ் ஏவுகணைளை ஏவினர். ஏவுகணை கப்பலில் இருந்து சீறிப் பாய்வதைப் படத்தில் காண்கிறீர்கள். (செய்தி முதலாம், 23 ஆம் பக்கங்களில்)

## காத்தான்குடி நகர சபை உறுப்பினராக பெண் தெரிவு



கொழும்பு, மார்ச் 21

50 வருடங்களுக்குப் பின்னர் முஸ்லிம் பெண் ஒருவர் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் காத்தான்குடி நகரசபைக்குப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சல்மா ஹம்சா இந்தப் பெருமையைப் பெற்றுள்ளார்.

பிரதி அமைச்சர், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் சகோதரியான இவர் காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் 1,235 வாக்குகளைப் பெற்று முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றார்.

## கோண்டாவிலில் குடும்பஸ்தரை வீடு புகுந்து தாக்கியது இனந்தெரியாத கும்பல்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

அதிகாலை வேளையில் வீடு புகுந்து குடும்பஸ்தர் ஒருவரை இனந்தெரியாத கும்பல் ஒன்று பலமாகத் தாக்கி அவரது கைத்தொலை பேசியையும் பறித்துச் சென்றது. இந்தச் சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த சபாரத்தினம் ஜெயந்திரன் (53) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிறு அதிகாலை 1.30 மணியளவில் கோண்டாவில் பகுதியில் இராணுவக் காவலரணை அண்மித்த வீட்டில் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கானவர் யாழ்.மாணிப்பாய் வீதியைச் சேர்ந்த்வர். கடந்த சில வருடங்களாக இவர் கொழும்பில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். தமது வீட்டைத் திருத்துவதற்காக கடந்த சில நாள்களுக்கு முன் இங்கு வந்த அவர் சகோதரியின் வீட்டில் தங்கியிருந்தார். வீட்டுத் திருத்தப்பணிகள் முடிவுற்றதால் அவர் நேற்று கொழும்பு திரும்ப இருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. வீட்டு ஜன்னல்களையும் அந்தக் கும்பல் அடித்து நொறுக்கியுள்ளனர்.

அந்தக் கும்பல் வீட்டுக்கு வெளியே காயப் போடப்பட்டிருந்த துணிகளால் தங்களின் முகத்தை மறைத்துக் கொண்டே தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிடவே அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர். (ஒ-14)

## ஆளும் கட்சியின் 205 சபைகளுக்கும் தலைமை வகிக்க இருப்போர் யார்?

### சுதந்திரக்கட்சி மத்தியகுழு இன்று கூடி முடிவு

கொழும்பு, மார்ச் 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு இன்று கூட உள்ளது. இச் செயற்குழுவில் ஐ.ம.சு.முன்னணி வெற்றி பெற்ற 205 சபைகளுக்கும் தலைமை தாங்குபவர்கள் யார் என்பது குறித்து கலந்தாலோசிக்கப்டும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகள் மற்றும் ஏனைய வேறு பல விடயங்கள் குறித்தும் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்கான பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பாகவும் மத்திய செயற்குழு இன்று ஆராய வுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஒழுங்கீனமான முறையில் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, 234 உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியைச் சந்திக்க உள்ளனர்.

## மு.காவின் உயர் மட்டக்குழுவும் இன்று கூடுகிறது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் குழு இன்று கூடி உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து ஆராயவுள்ளது என அதன் பொதுச் செயலாளர் எம்.ரி. ஹசன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்த உயர்மட்டக் குழுக் கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமை வகிப்பார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ள நான்கு சபைகளினதும் தலைமைப் பதவிகள் குறித்தும் முஸ்லிம் காங்கிரஸின் வாக்குப் பலம் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய பதவிகளுக்கு வாக்கெடுப்பா? அல்லது பேச்சு மூலம் சமரசத்தீர்வா?

### ஐ.தே.க. செயற்குழு இன்று கூடித் தீர்மானிக்கிறது

கொழும்பு,மார்ச் 21

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி உட்பட முக்கிய பதவிகளுக்கு நியமனங்களைச் செய்வது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக அக்கட்சியின் செயற்குழுவின் முக்கிய கூட்டம் இன்று மாலை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.

சிறிகொத்தாவில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் பதவி உட்பட ஏனைய முக்கிய பதவிகளுக்கான தெரிவுகளை பேச்சுகள் மூலம் மேற்கொள்வதா அல்லது வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்வதா என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

இதேவேளை கட்சியின் புதிய சட்டதிருத்தத்தின்படி ஏப்ரல் 12 ஆம் திகதிக்கு முன்னர் முக்கிய பதவிகள் நிரப்பப்படவேண்டும். இன்னும் இரு வாரங்களுக்கு முன்னர் இப்பதவிகளை எவ்வகையிலாவது நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கூட்டத்தில், நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் குறித்தும் ஆராயப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கச்சதீவு உற்சவத்தின் பதிவுகள்













கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் நேற்று எமது அலுவலகச் செய்தியாளர் 'கிளிக்' செய்த காட்சிகளில் சில...

## வினைத்திறன் காண் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாண அபிவிருத்தி உதவியாளர்களுக்கான (பட்டதாரி நியமனம்) இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 021 3215543 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-313)

## முல்லைத்தீவு வாசி கடலில் மூழ்கி மரணம்

கிளிநொச்சி, மார்ச் 21

முல்லைத்தீவு மணல்குடியிருப்பு கடற்பகுதியில் குளிக்கச் சென்ற ஒருவர் பரிதாபகரமாக கடலில் மூழ்கி மரணமானார்.

உயிரிழந்த அதே பகுதியைச் சேர்ந்த சவரிமுத்து பொலிப்பாஸ் (வயது 60) என்பவரின் சடலம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. (ஒ-6-323)

## கைதடிப் பகுதியில் வீதிகள் சேதம்

கைதடி, மார்ச் 21

கைதடியில் உள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அவ் வீதிகளூடாக பயணம் செய்பவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கைதடி, ஹேவத்தை வீதி, கல்லாக வீதி, ஊரியான் வீதி, குமர நகர் வீதி, வளர்மதி வீதி, கள்ளி நகர் வீதி, நவபுர வீதி எனப் பல வீதிகள் இவ்வாறு குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இருக்கும் இவ் வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் நாளாந்தம் விபத்துக்கள் நடந்து விடும் என்ற பயப் பீதியுடன் பயணிப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதிகளில் இருந்து எழும்பும் புழுதியினால் சுவாச நோய்கள் உட்பட பல நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனம் செலுத்தி வீதிகளை திருத்தம் செய்து பாதுகாப்பான பயணத்துக்கு ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-288)

## நீரிழிவு நோய்க்கு மூலிகை பயன்பாடு; இன்று கைதடியில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் குணபாடப் பிரிவினர் நீரிழிவு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

நீரிழிவு நோயாளர்களின் நோய் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் எவ்வகை மூலிகைகளைப் பயன்படுத்துவது என்பது பற்றியும் இக் கருத்தரங்கு அமையவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொண்டு [illegible] யாழ். சித்த மருத்துவ [illegible] கேட்டுள்ளனர். (ஒ-10)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வேலணை வடக்கு, சோளவத்தை ஞானவைரவர் ஆலயத்தின் திருக்குட முழுக்குப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். நாளை மறுதினம் புதன்கிழமை திருக்குட முழுக்கு நிறைவு பெற்று தொடர்ந்து மண்டலாபிஷேக கால் மண்டலம் 12 நாள்கள் தொடர்ந்து இடம்பெறும்.

* * *

அளவெட்டி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'ஆலய வழிபாடும் அதன் மகத்துவமும்' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவினை கொக்குவில் சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஆன்மீகச் சொற்பொழிவாளர் பிரம்மச்சாரி றூக் கிரத் சைதாணியா சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். (ஒ-313)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ். வண்ணார் பண்ணை கீரிப்பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கிரியகால நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி முதல் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறும். (ஒ-313)

* * *

வடமராட்சி,மார்ச் 21

வரணி, கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் கோயில் மணவாளக் கோல உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-313)

* * *

காரைநகர், மார்ச் 21

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா 2ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளின் முதல் கூட்டம் ஏப்ரல் 1க்கு முன்

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட 234 உள்ளூராட்சி சபைகளினதும் முதலாவது கூட்டம் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன் நடத்தப்படும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்தது.

தேர்தல் முடிவுகளின்படி அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் பதவி குறித்து தேர்தல் ஆணையாளர் நாளைவிசேட வர்த்தமானி மூலம் தெரிவிப்பார்.

அதன் பின்னர் அந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆரம்பமாகும் தினம் மற்றும் முடிவடையும் தினம் ஆகியவற்றை தெரிவிக்கும் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின் அறிவித்தலுடன் வர்த்தமானியொன்று வெளியிடப்படும் என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

# அல்வாய் பாடசாலைக்கு இசைக்கருவிகள்

வடமராட்சி, மார்ச் 21

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத் துக்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகளை வழங்கியுள்ளது.

கருவிகளில் ஆர்மோனியம், தபேலா, உடுக்கு, தம்பட்டம், மேளம், வீணை, மிருதங்கம், றபான், புல்லாங்குழல், தாளம் என்பன அடங்குகின்றன. (ஒ-236)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 21

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஒரு வருடத்தால் நீடிக்கப்படும் என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழு சாட்சிப் பதிவுகள் மூலம் அறிந்துகொண்ட சம்பவங்களுக்கு எந்த அடிப்படையின் கீழ் தீர்வு பெற்றுக் கொடுப்பது என்பது குறித்து மாற்று யோசனைகளை அரசுக்கு முன்வைப்பதற்கு ஏதுவாக இக்கால நீடிப்பு வழங்கப்படும் என தெரிய வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற சில சம்பவங்கள் குறித்து இந்த ஆணைக்குழு மூலம் தீர்வு கிடைக்குமானால் சர்வதேச விசாரணை தேவைப்படாது என அமெரிக்கா உட்பட மேலும் பல நாடுகள் தெரிவித்திருந்தன.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் வழங்குவது மற்றும் சாட்சியங்களின்போது தெரிவிக்கப்பட்ட சிலசம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்பதையும் ஆணைக்குழு எதிர்காலத்தில் ஆராயும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)


ஐடியல் அக்கடமி

| சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். | அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய். | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| --- | --- | --- |

O/L Day Class

இணைந்தவர்கள்: வென்றார்கள்
நீங்களும் இணையுங்கள் வெற்றி நிச்சயம்

மூன்று இடங்களிலும் குதூகல ஆரம்பம்: 23.03.2011 (புதன்) 8.30 a.m.

A/L கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 21.05.2011 3 p.m.

கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

* ஐடியலின் முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் (தரம் 6 - O/L வரை) யாழ். நகரில் அன்னை, பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



O/L பெறுபேறுகளில் தொடர்ந்தும் சாதனை படைக்கும் நிறுவனத்தில்

O/L Day Class

ஆரம்பமாகின்றது

அனுமதிகள் இம் மாதம் 30ம் திகதி வரை வழங்கப்படும்

The Express Institute
Irupalai, Kopay.



புதிய பிரிவு

A/L 2013
கலை, வர்த்தகம்

ஆரம்பம்: மார்ச் 26 (சனி)
காலை 8 மணி
DMI, Jaffna.



வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, நல்லூருக்கு அருகில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியுடன் சேர்ந்த சுற்றுமதிலுடன் புதிய வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு - T.P - 0777860456



மீசாலையில் காணி விற்பனைக்குண்டு

மீசாலையில் A9 வீதியில் இருந்து 300m தூரத்தில் சிற்றம்பலம் வீதியும், அப்பக்கொட்டில் வீதியும் இணையும் சந்திக்கு அருகாமையில் மிகவும் நல்ல சூழலில் மின்சார வசதி, போக்குவரத்து வசதிகளுடன் அமையப்பெற்ற இடத்தில் வீடு கட்ட மிகவும் பொருத்தமான 5 1/4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
I. T.P. No. 0718351643
II. T.P. No. 0779943797
III. மீசாலை வடக்கு (புத்தூர் சந்தி) இல் உள்ள இளைப்பாறிய ஆசிரியர் ம.அருணாசலத்திடமும் தொடர்பு கொள்ளலாம்.



48 ஆவது வருடத்தில் வெற்றிப் பயணம்

சதாபொன்ஸ் - அல்வாய்

O/L DAY CLASS

ஆரம்பம்: 24.03.2011 காலை 8 மணி

A/L 2013 கலை - வர்த்தக பிரிவு


# கச்சதீவை மீளப்பெறுவதற்கு தி.மு.க. அழுத்தம் கொடுக்கும்

## கருணாநிதி நேற்று அறிவிப்பு

சென்னை, மார்ச் 21

இந்திய மீனவர் மீதான தாக்குதல்கள் மற்றும் கச்சதீவை மீளப்பெறல் போன்ற விவகாரங்கள் தமிழகச் சட்டசபைக்கான தேர்தலில் தி.மு.க.வின் பிரசாரங்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் மு.கருணாநிதி, இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதாக கூறப்படும் விவகாரத்துக்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்துள்ளார்.

அதேவேளை 1970 களில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசாங்கத்துக்கு தி.மு.க. அழுத்தம் கொடுக்கும் எனவும் அவர் கூறினார்.

மீனவர்கள் கொலை, சித்திரவதை, கைதுசெய்யப்படும் சம்பவங்கள் என்பன அண்மைக்காலத்தில் வழங்கமாகிவிட்டன. இதற்கு ஒரே தீர்வு கச்சதீவை மீண்டும் பெறுவதுதான் என்றும் கருணாநிதி கூறியுள்ளார். (ஒ-10)

# எஞ்சியுள்ள 101 உள்ளூராட்சி சபை தேர்தல்கள் மே அல்லது ஜூனில்

இடைநிறுத்தப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உட்பட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்த தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இந்த தேர்தல்கள் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதங்களில் இடம்பெறும் என்று தேர்தல் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள 101 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்த தேர்தல்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் இடம்பெறும் பிரதேசங்களைச் சார்ந்த 34 உள்ளூராட்சி சபை தேர்தல்களும் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

இது தவிர, ஏனைய 65 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள், நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய பிற்போடப்பட்டிருந்தன.

எஞ்சிய இரண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கண்ணிவெடி அகற்றும் பணி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டன.


இந்நிலையில் 65 உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பான இறுதி நீதிமன்றத் தீர்ப்பு இந்த மாத இறுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல்கள் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)


தவறிவிட்டது

கஸ்தூரியார் வீதி, முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த நவரத்தினம் மணிகரனின் அடையாள அட்டை பேர்ஸ்ஸுடன் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி நடன முருகன் வைத்திய நிலையத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 0777667652


# மரண அறிவித்தல்



## கந்தப்பு நாகேஸ்வரன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, ஐயர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு நாகேஸ்வரன் நேற்று (20.03.2011) காலமானார்.

அன்னார் கந்தப்பு - மெனிக்கா தம்பதியரின் ஏக புதல்வனும் பாலாமணியின் பாசமிகு கணவரும் கோபிதன், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதிப்பிள்ளை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற காளியப்பன், இராமு மற்றும் வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயர் ஒழுங்கை,*
*நுணாவில் மத்தி, சாவகச்சேரி.*

தகவல்: இ.சோதிலிங்கம்
(மருமகன்).


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org